மாமல்ல நாயகன்

(வரலாற்று நாவல்)

கௌவிராசன்

முத்தையா நிலையம்
புது எண் 25 (பழைய எண் 10)
டேரா வேங்கடசாமி நாயுடு தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி எண் : 8 4 6 2 4 1

முதற் பதிப்பு : ஜூன், 1981

விலை ரூபாய் 7 - 50

அச்சிட்டோர்:
வெற்றி அச்சகம்,
சென்னை - 600 005.

முன்னுரை

உலகெலாம் ஓங்கிப் புகழ்பெற்ற கயிலாசநாதர் கோவில், இன்றைக்கு கி, பி. 1250 ஆண்டுகட்கு முன்பு, பிற்காலப் பல்லவர் ஆட்சி மகோன்னத நிலையில் இருந்தபோது கட்டப் பட்டது. கட்டியவன்—இராசசிம்ம பல்லவன். அவன் இறுதிக் காலத்தையும், அவன் மகனுன இரண்டாம் பரமேசுவரவர்மனைப் பற்றியும், அவனுக்குப் பிறகு பிற்காலப் பல்லவர் ஆட்சியில் புதிய மரபு தோன்றியதைப் பற்றியும் விளக்குவதே இந் நாவல்.

கதைக்கு அனைவரும் நாயகர்கள்! இது என் தாழ்மையான கருத்து. அதுபோல இந்நாவலில் வருகின்ற ஒவ்வொருவரையும் நான் நாயகர்களாகவே கருதுகின்றேன்.

சரித்திர நாயகர்களுடன், கற்பனை நாயகர்களை உலவவிட்டுக் கற்பனை வண்ணத்தில் மெருகு ஏற்றப்பெற்ற இந் நாவலைச் சரித்திர நாவல் சோலையில், ஒரு அழகான வண்ண மலராகத் தமிழ் வாசகர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

கதைப் பாத்திரங்களை இயல்பான நிலையில் விட்டு நாவலை முடிப்பது ஒரு சிறந்த உத்தி. பேராசிரியர் கல்கி அவர்கட்கும் இது உடன்பாடு. அம் முறையில் இந் நாவலை நான் முடித் திருக்கின்றேன்.

இந்நாவல் வெளிவர உதவிய பேரறிஞர், தமிழ்க்காவலர் உயர்திரு லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றி.

சென்னை-56
6—6—81

இங்ஙனம்,
கௌரிராசன்.

கதைச் சுருக்கம்

இற்றைக்குக் கி. பி. 1250 ஆண்டுகளுக்கு முன்பு பிற்காலப் பல்லவர் ஆட்சி சிறப்பான முறையில் இருந்த நேரத்தில்... இராசசிம்ம பல்லவன், தன் இறுதிக் காலத்தில், தன் மகன் வயிற்றுப் பேரனுன சித்தரமாயன் நடவடிக்கைகளில் மனக் கசப்புக் கொண்டிருந்தான். காரணம்? பல்லவ ஆட்சிக்கு ஊறு நேரும் வகையில், பல்லவ குலத்து எதிரியான பாண்டியனிடம் அவன் நட்புக் கொண்டிருந்தான். அத்துடன் நாட்டில் குழப்பம் விளைவிக்கும் கூட்டத்திடமும் அவனுக்குத் தொடர்பிருந்தது.

அதனுல் சிம்ம விஷ்ணுவின் தம்பியான பீமவர்மன் வழி வந்த ஆறு வயதுச் சிறுவனுன பல்லவ மல்லனிடம் அன்பு கொண்டிருந்தான். யவனக்குதிரைகள் மாமல்லையில் வந்திறங்கிய செய்தி கேட்டு, அதை வாங்கும் எண்ணத்துடன் இராசசிம்மன், பல்லவமல்லனுடன் மாமல்லை செல்ல, இதை அறிந்து கொண்ட சித்திர மாயனும் அவனைச் சார்ந்த கும்பலும் ஒரு சதித் திட்டம் தீட்டுகின்றனர். அதன்படி சிறுவனைக் கடத்தியப் பைரவனுக்குப் பலிதந்து... அதன் மூலம் சித்திரமாயன் ஜென்மப் பகைவனுன பல்லவமல்லனை ஒழித்து விடலாம் என்று முடிவு கட்டுகின்றனர். கலங்களில் இறங்கிய உயர் ஜாதிக் குதிரைகளில், வெள்ளை நிறக் குதிரை வேண்டும் என்று சிறுவன் கேட்க, இராச சிம்மன் ‘சிறுவனுன நீ இதன் மீது சவாரி செய்ய முடியாது!’ என்கின்ருன். ஆனுல் சிறுவன், பிடிவாதத்துடன் அதுதான் வேண்டும் என்று சொல்லப் பலவந்தமாக அவனைத் தேரில் ஏற்றி மல்லை மாளிகைக்குக்

கொண்டு சென்று விடுகிறுன் மன்னன். இதனை மறைவிலிருந்து கவனித்த கயல்விழி - சித்திரமாயன் கூட்டத்தினைச் சேர்ந்தவள்- அதையே காரணமாக்கிச் சிறுவனிடம் அக்குதிரையைத் தருவதாகச் சொல்லி, அரண்மனையிலிருந்து கடத்தி விடுகிறுள். அவனைப் பைரவருக்குப் பலிதரும் கட்டத்தில் விஜயவர்மன் - இராசசிம்மன் மெய் காப்பாளன் - குறுக்கிடுகிறுன். அச்சமயம் அங்கு நடந்த மோதலில், கள்ளத்தனமாகப் பின்னுல் வந்து கயல்விழியால் தாக்கப்பட, விஜயவர்மன், மயக்கமுற்றுக் கீழே சாய்கின்றுன். ஆனுல் கயல்விழி, விஜயவர்மன் வீரர்களிடம் சிக்க, ஒரு காபாலிகன், அவளின் தந்தைக்கு நண்பன் என்று சொல்லிக் கயல்விழியைத் தப்பிக்க வைத்துச் சிறுவன் பல்லவ மல்லனுடன் மறைந்து விடுகின்றுன். (அக் காபாலிகன் தான் பல்லவமல்லனின் தந்தை) மன்னன் இராசசிம்மன் மறைய, அவர் மகன் இரண்டாம் பரமேசுவரவர்மன், அரசு கட்டில் ஏறுகின்றுன். அவனையும் வஞ்சகக் கூட்டம் கொன்று விடுகிறது. அதற்குப் பிறகு யார் என்ற கேள்வி எழ, காஞ்சியின் நகரப் பிரமுகர்கள், அமைச்சர் முதலானேர், சிறுவன் பல்லவமல்லனின் தந்தையான இரணியவர்மனை அரசனுகுமாறு சொல்கின்றனர். அவன் மறுத்துத் தன் புதல்வர் நால்வரில் ஒருவரை அரசனுக்குமாறு கூறுகின்றுன். ஆனுல் மூதல் மூவரும் அரசுப் பொறுப்பேற்க மறுத்து விடவே, பன்னிரண்டு வயதான பல்லவமல்லன், ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்றுன். நல்ல நாளில் அவனுக்கு முடி சூடப்படுகிறது. சித்திரமாயன், தன் காதலியை இழந்து பாண்டியனிடம் சரண் புகுகின்றுன்.

மாமல்ல நாயகன்

1

உலகெலாம் உணர்ந்து அறிதற்கு முடியாதவனும், நிலவு லாவிய நீர் மலி வேணியனும், அலகில்லாத சோதியனும் ஆகிய அந்த அம்மையப்பனுன ஈசன் வாசம் செய்கின்ற கயிலாச நாதர் கோயில், புலர் காலே இருளில், மிக அமைதியாக இருந்தது.

அதன் அற்புத வடிவமைப்பு எளிதில் புலப்படா வண்ணம் வைகறையின் இருள் அதன்மீது படர்ந்திருந்த போதிலும், அந்த வடிவமைப்பின் ஒப்பற்ற அழகைக் காண விரும்பி, வானிலிருந்து விழுந்து கொண்டிருந்த காலேப் பனிமழை, அதன் மீது பட்டு, இத்துணைக் கலேநயம் இதிலிருக்கிறதா என்பது போன்று அதிசயித்து வெண் முத்துக்களாய்த் தன் நீர்த் துளிகளே அரும்பி நின்றது.

இன்னும் சிறிது நேரத்தில் காலே வரப் போகின்றது என் பதை அறிவிப்பது போன்று பறவைகளின் ‘கீச் கீச்’ என்ற ஒலியும், அப்பகுதியெங்கும் கேட்கலாயிற்று.

அதற்குப் போட்டியாகத் தூரத்தில் காஞ்சிக் கோட்டையைக் காவல் புரிந்த யவன வீரர்களின் கூவல் ஒலிகள், இடையிடையே எழும்பி ஒலித்தன.

இருள் விலகி, ஒளி வரப் போகின்றது! அதற்காக மகிழ்கின்றவர் அநேகம்! ஆனால், அந்தக் காலை ஒளி வரக்கூடாது என்பது போலக் கயிலாசநாதர் கோவிலுக்கு எதிர்ப்புறத்தில் அமைந்திருந்த நந்தி மண்டபத்திற்கு வலப்புறத்திலிருந்த குளத்தின் படிக்கட்டுக்களில் உட்கார்ந்திருந்த சாம்பனுக்கு?...

வரக் கூடாது என்கிற மாதிரி இங்குமங்கும் நிலை கொள்ளாமல் பார்த்துக் கொண்டிருந்தான். அதே சமயம் அவன் கண்கள், அடிக்கடி கோவிலையொட்டி இடப்பக்கமிருந்த வீதியை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தன.

ஆத்திரமும், ஆவேசமும் அவன் முகத்தில் அடிக்கடி எழ, அடக்க முடியாமல் பற்களைப் பலமாகக் கடக்கென்று கடித்தான்.

அதிகாலை இருளில் மேலே வந்து புலர் காலை ஒளியைப் பார்க்க விரும்பிப் படிக்கட்டுக்களில் அவனைப் போலத் தவமிருந்த தவளைக் கூட்டத்தில் சில, அவன் ஆத்திரத்துடன் பற்களைக் கடித்ததனால் ஏற்பட்ட ஓசைக்குப் பயந்து, தண்ணீரில் குதித்து நீந்தி மறைந்தன.

பொழுது விடிந்து விட்டால் எல்லாக் காரியமும் கெட்டுத் தொலையப் போகின்றது. என்ன செய்வது என்று அவன் மனதில் எழுந்த படபடப்பு பெருமூச்சாக வர, அக்காலைப் பனிமூட்டத்தில் அம்மூச்சு, ஆவியாகி பனிமூட்டத்தோடு சேர்ந்து மறைந்தது அப்போது.

'சட்! இன்னும் என்ன அப்படி?' என்று சிறிது கோபமாகவே முணுமுணுத்தான் அவன். அதற்கு முற்றுப்புள்ளி வைப்பது போலத் தூரத்தில் 'சலுங் சலுங்' என்று சலங்கையொலி கேட்டது.

9

கோவிலின் அற்புதமான கலை வண்ணத்தைக் கண்டு விட்ட மகிழ்வில், மலர்ந்து நின்ற பனித்துளிகள் போல, அவன் முகமும் அவ்வோசை கேட்டு மலர்ந்தது.

எழுந்து நின்ருன்.

தூரத்தில்— காலை ஒளி வந்து கொண்டிருப்பதற்கு அறிகுறியாக மறைந்து கொண்டிருந்த இளம் இருட்டில் பனித் தாரைகள் உண்டாக்கிய மெல்லிய தடையை நீக்கிக் கொண்டு வருவது போன்று, மங்கை ஒருத்தி, ஒயிலாக நடந்து வந்து கொண்டிருந்தாள்.

சாம்பனுக்கு உற்சாகம் கரை புரண்டது. அவசரம் அவசரமாகக் கைகளை நன்கு தேய்த்துச் சூடேற்றிக் கொண்டான். மேற் போர்வையை விலக்கிப் பரந்த மார்பு தெரிகிற மாதிரி நிமிர்ந்து நின்ருன்.

இப்போது அவள், மிக நெருக்கத்தில் வந்து விட்டாள். அவள் உடலின் அமைப்பு அந்நேரத்தில் அவனுக்குக் கிளுகிளுப்பைத் தந்தது. என்னமாய் இருக்கிருள்? கண்களில் மயக்கம் அலைபாயப் பெருமூச்சு விட்டான்.

செக்கச் சிவந்த அந்த மென்வதனத்தில் வாரிச் செருகியிருந்த சுருண்ட கூந்தல் அசைய, துயிலெழுந்த மயில்போல அவள் காலிலிருந்த பரிபுரம் 'சலுங்' 'சலுங்' என்று ஒலிக்க அவனிடம் வந்து சேர்ந்தாள். விழிகள் கயலெனச் சுழன்றன. கூடவே அவன் மனதும் சுழன்றது.

உடனே அவன் உள்ளுணர்வு எச்சரித்தது. 'சாம்பா! இவள் எழிலைப் பார்ப்பதற்கா இவ்வளவு நேரம் காத்திருந்தாய்? இதுவா உன் இலட்சியம்? உன் வேலையென்ன? அதைக் கவனி முதலில்!'...

சாம்பன் சமாளித்து, "மணிமொழி, என்ன இவ்வளவு நேரம்? நான் நடுநிசிக்கே இங்கே வந்துவிட்டேன்!" என்ருன்.

“நான் என்ன பண்ணட்டும்! இவ்வளவு நேரம் ஆகி விட்டது!” என்று கலவரத்துடனே சுற்றும் முற்றும் பார்த்தாள்.

ஏற்கனவே கயலெனச் சுழன்ற விழிகளில், இப்போது கலவரமும் சேர்ந்து கொள்ளப் பார்ப்பதற்கு அதுவும் ஒருவித அழகாகத்தான் இருந்தது சாம்பனுக்கு!

“நான் சீக்கிரம் போக வேண்டும்! அவர் எழுந்து விடுவார்!” என்ருள் பரபரப்புடன்.

— அவன் ‘ம்’ கொட்டி விட்டு “முக்கிய செய்தியா?” என்ருன்.

“ஆமாம்!” என்று குனிந்து அவன் செவியருகில் தன் இதழ் களைக் கொண்டு சென்ருள்.

குனிவினுல் அவள் நாசியிலிருந்து எழுந்த இலேசான வெப்பக்காற்று, அவன் செவியில் பட்டு மனதில் கிளுகிளுப்பை உண்டாக்க, ‘இதற்கெல்லாம் மசிந்து விடக் கூடாது’ என்று கவனமானுன் சாம்பன்.

அவள் சொல்ல வந்ததை இரண்டொரு வார்த்தைகளோடு நிறுத்திக் கொண்டு நிமிர்ந்தாள்.

“இவ்வளவுதானு?”

“ஆமாம், அவர் எழுந்து விடுவார்; நான் வருகின்றேன்!”

அவன் பதிலைக்கூட எதிர்ப்பார்க்காமல் திரும்பி, “நான் வருகின்றேன்!” என்று வேகமாக நடக்கத் தொடங்கினுள்.

அந்த அதிகாலைக் குளிரில், அவள் நாசியிலிருந்து வந்த வெப்பக்காற்று, சாம்பன் செவியில் பட்டு அதனுல் ஏற்பட்டிருந்த இதம் மனதில் மெல்ல மறைய, அவளையே... அவள் நடந்து செல்வதையே வெறித்து நோக்கினுன்.

அசைந்து, ஒசிந்து, அதனுடன் சல் சல் என்று பரிபுரம் ஒலிக்க அவள் அடியெடுத்துச் சென்ற விதம், சாம்பன் மனத்தில் பெருங் கிளர்ச்சியை உண்டு பண்ணி விட்டது.

அச்சமயம் உள்ளுணர்வு திரும்பவும் சாம்பனை எச்சரித்தது.

'என்ன, இவள் நடையழகைக் காணவா இங்கு வந்தாய்? உன்னிடம் அவள் சொன்ன செய்தி என்ன? அதை நீ என்ன செய்ய வேண்டும்?'

சாம்பன், விழிப்புப் பெற்றுச் சீக்கிரம் செயல்பட வேண்டும் என்று, அவனுக்கு எதிர்ப்புறத்திசையில் நுழைந்து வேகமாய் நடக்கலானான்.

அதே சமயம் —

சலுங் சலுங் என்ற ஒலியுடன் சீக்கிரம் அவர் எழுவதற்குள் போக வேண்டும் என்ற பரபரப்போடு மணிமொழி நடையை வேகப்படுத்த, அதனால் பரிபுரத்தின் ஒலி அதிகமாகி அமைதியா யிருந்த வீதியில், அவ்வொலி எங்கும் நிரம்பி ஒலிக்க, யாராவது தன்னைக் கவனித்து விடப் போகிறார்களென்ற அச்சம், அச் சமயம் அவள் மனத்தில் எழுந்தது. உடனே தன் நடையை மட்டுப் படுத்தினாள். ஆனால், அடுத்த நொடியே அவர் எழுந்துவிட்டுத் தன்னைத் தேடினால்?... இந்தக் கேள்வி திரும்பவும் அவள் நடையில் வேகத்தைக் கூட்டியது. இவ்விதம் நடையைக் கூட்டுவதிலும், குறைப்பதிலும் அகப் பட்டுக் கொண்டு இதுவரை அழகாய் அளவோடு அசைந்து கொண்டிருந்த பின்னழகின் அசைவில் இப்போது ஒருவிதச் சிதைவு தோன்றியது.

அந்தப் பரபரப்புடனே வலப்பக்கம் திரும்பி மறைந்தாள் மணிமொழி.

2

புலர் காலைப் பொழுது மறைந்து, காலைக் கதிரவன் தன் பொன்னிறக் கதிர்களை எங்கும் பரப்ப, காஞ்சியின் மாட

மாளிகைகளும், கூட கோபுரங்களும் அந்த வெளிச்சத்தில் பார்ப்பதற்குப் பெரு விருந்தாக அமைந்திருந்தன.

கயிலாசநாதர் கோவில் விமானத்தில் அரும்பியிருந்த பனித் துளிகள், தம் நீர் முத்துக்களால், அதன் கலைநயத்தைக் கண்டு இரசித்து, அதற்கு மேலும் மெருகூட்ட தன் பங்குக்கு, முத்துக்களால் உண்டான ஆடையை அதன் மேலே போட்டு அழகு பார்ப்பது போல ஆயிரக் கணக்கில் அரும்பி நின்று, அக்காலைக் கதிரொளியில் ஒளிர்ந்த காட்சி, மனதிற்குப் பிரமிப்பூட்டுவதாக இருந்தது.

உன் பங்குக்கு நீ மட்டும் செய்தால் போதுமா? என் பங்குக்கு என்று தன் பொன்னிறக் கதிர்களை அவ்விமானத்தின் மீது பரப்பி, அதனால் ஏற்பட்ட வர்ண ஜாலத்தைக் காண மேலும் அதிகக் கதிர்கள் ஊடுருவ அந்த நிகழ்ச்சியைக் கண்டு களி கூர்வதற்காகவே பறவைகள் பல, அங்கே வந்து அமர்ந்தன.

இந்த அற்புதத்தைக் காணக் கொடுத்து வைக்காத சாம்பன், மிக வேகமாக நடந்து கொண்டிருந்தான். போகப் போகப் பெரிய மாளிகைகளும், சிறிய வீடுகளும் குறைந்து அடர்த்தியான தென்னந் தோப்பு ஒன்று அவனுக்குத் தென் பட்டது.

சுற்றும் முற்றும் கவனித்து விட்டுச் சாம்பன், அத் தோப்புற்குள் நுழைந்தான்.

மிக நெருக்கமான மரங்கள்... அதற்கு நடுவே இடிந்தும், சிதைந்தும் ஒரு மண்டபம் தெரிந்தது.

சாம்பன், அருகே சென்றதும் நின்றான். சுற்றிலும் மீண்டும் பார்வையைச் சுழல விட்டான். யாரும் இல்லை என்று அவனுக்குத் தீர்மானமானதும், சிதைந்து கிடந்த அந்த இடிபாடுகளுக்கிடையே சாக்கிரதையாகக் காலை வைத்து மண்டபத்தை நெருங்கினான்.

அப்போது—

மனித அரவம் கேட்டு, மேற்புறத்தில் இரைக்காக வந்த நல்ல பாம்பு ஒன்று வேகமாக இடுக்கில் புகுந்து மறைய முயற்சித்தது.

சாம்பன், அதைப்பற்றிக் கவலை கொள்ளவில்லை. “சூ!” என்று அதை அதட்டிவிட்டு எச்சரிக்கையுடன் காலைத் தூக்கி வைத்து, மண்டபத்திற்குப் போகச் சரியான பாதையில்லாததால், இப்படியும் அப்படியும் சமாளித்து உள்ளே நுழைந்தான்.

தூரத்தில் குயில் கூவியது; பறவைகள் கீச் கீச் என்று கத்திக் கொண்டிருந்தன.

மனிதன் வாழ்வதற்கே அருகதையில்லாத அந்த மண்டபத்திற்குள் ஏன் சாம்பன் நுழைகின்றான்?

வௌவால் ஒன்று, இப்படியும் அப்படியும் பறந்து கொண்டிருந்தது.

‘சனியன்!’ என்று அதை விரட்டிய சாம்பன், மண்டபத்தை ஒட்டியிருந்த அறையின் கதவைத் தள்ளித் திறந்தான்.

உள்ளே புகுந்து, திரும்பி அதே வேகத்தில் அவன் வெளி வந்தபோது கையில் மணிப்புரு ஒன்று இருந்தது.

‘உக்கூர்’ ‘உக்கூர்’ என்று சப்தித்து, இங்கும் அங்கும் கண்களை ஓட்டி, கீழே விழாதிருக்க அவன் கையைத் தன் கால்களால் கெட்டியாகப் பற்றிக்கொண்டு நின்றது.

அவன், இடிபாடுகளைக் கடந்து, சிறிது தள்ளியிருந்த சுமை தாங்கிக் கல் மீது மணிப்புருவை விட்டான். அருகேயிருந்த புதர்ப்பக்கம் சென்று இலையைப் பறித்தான். அதைச் சுமை தாங்கிக் கல்லிலிருந்த பள்ளத்தில் சாருகப் பிழிந்து விட்டான். கொஞ்சம் சாறு பள்ளத்தில் சேர்ந்ததும் இடுப்பில் தயாராகச் செருகி வைத்திருந்த பட்டுத் துணியை எடுத்து விரித்தான்.

சிறு குச்சியை எடுத்துக் கல்லில் தேய்த்துக் கூராக்கிச் சாறில் தொட்டு, மணிமொழி சொன்ன செய்தியை அதில் எழுதினுன். முடிந்ததும் அதை அப்படியே சிறிது நேரம் உலரட்டும் என்று விரித்து வைத்திருந்து, காற்றில் காய்ந்ததும் அதை எடுத்துப் புருவின் கழுத்தில் மெதுவாகச் சுற்றினுன். அப்படிச் சுற்றும்போது துணியால் கழுத்து இறுகிப் போகாம லிருக்கிறதா என்றும் பார்த்துக்கொண்டான். பிறகு மணிப் புருவை மெல்லக் கையால் தடவிவிட்டு வானில் உயரத் தூக்கிப் பறக்கவிட்டான் சாம்பன்.

புரு படபடவென்று சிறகடித்து வானேக்கிப் பறந்தது. மிக உயரத்தில் சென்று வேகமாகப் பறக்கத் துவங்கியதும், சாம்பன், திரும்பி மண்டபத்திற்குள் நுழைந்து மறைந்தான்.

3

கயிலாசநாதர் கோவில் ஆலய மணி 'டாண் டாண்' என்று ஒலிக்க, மன்னன் இராசசிம்மன் அரண்மனையின் முன்பு நின்று கொண்டிருந்த இரதம் புறப்படத் தயாராகியது.

அரண்மனை வாயிலில் முதலமைச்சர் பிரம்மராயர் நின்று கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் கடிகையரும், மூலப்பிரகிருதியாரும் இருந்தனர். நிசப்தமாக இருந்த அந்த இடத்தில், 'டக், டக்' என்ற பாதரட்சையின் ஒலி எழுந்தது.

நின்று கொண்டிருந்த அனைவரும் நிமிர்ந்து நின்றனர். ஏனைய அரசு அதிகாரிகள் தங்கள் உடைகளைச் சரிப்படுத்தி நேராக நின்றனர்.

இதுவரை குதிரைகளைத் தடவியபடி இருந்த இரதசாரதி கண்ணன் அதைத் தட்டிக்கொடுத்துவிட்டு வாயிலை நோக்கிய படி நின்றுன்.

பாதரட்சையின் ஒலி முன் கூடத்தில் கேட்டது. அனை வரும் பரபரப்புக்குள்ளாயினர். சிலர் மூச்சுக்கூட விட வில்லை.

"மன்னர் வந்து விட்டார்" என்று கடிகையரில் ஒருவர் பக்கத்திலிருந்தவரிடம் சொன்னார். அவரும் 'ஆமாம்!' என்று தலையசைத்து விட்டு மன்னனை எதிர் நோக்கினார்.

வீரர்கள் கூடத்திலிருந்து தேர் இருக்கும் இடம் வரை வரிசையாக அணி வகுத்து நின்றனர். ஒரு வீரன் ஓடிவந்து மன்னர் அமரும் இடம், இரதத்தின் கீழ்ப்புறம், பக்கம், அச் சாணி எல்லாவற்றையும் சரிபார்த்தான்.

முன் கூடத்தில் திரும்பி மன்னன் நின்றான். ஆகா, என்ன கம்பீரம்! வயது கூடியிருந்த போதிலும் நிற்பதில்தான் என்ன மிடுக்கு? முருக்கிய மீசையுடன் அவன் முகத்தில் நிலவிய அந்த அரச லட்சணத்தை இன்று முழுவதும் பார்த்து கொண்டிருக்கலாம் போலிருக்கிறதே!

அனைவரும் ஒரு நொடி பிரமித்து நிற்க, மன்னன் கண்கள், யாரையோ எதிர்பார்ப்பதுபோல இங்குமங்கும் நோக்கின.

முதலமைச்சர் அருகே வந்து நின்றார். மன்னனை ஏறிட்டு நோக்கினார்.

உலகப் புகழ் பெற்ற காஞ்சி கயிலாசநாதர் கோயிலை அமைத் தவனும், புகழ் வாய்ந்த மாமல்லைக் கடற்கோவிலை நிர்மாணித்த வனும், பகைவர்க்கு இடியேறு போன்றவன் என்று சிறப்புடன் பேசப்பட்டவனுமான இராசசிம்மன், அமைச்சரை நோக்கி, "விஜயவர்மனை அனுப்பி விட்டீர்களல்லவா?" என்று கேட்டான்.

"மூன்று நாழிகைக்கு முன்பே அனுப்பிவிட்டேன் மன்னா!"

"நல்லது!" என்று உட்பக்கம் திரும்பினான். அவன் மனைவி ரங்கபதாகை தோழிகள் புடைசூழ ஆறு வயதுச் சிறுவ னுடன் வந்து கொண்டிருந்தாள்.

சிறுவன் இராரசிம்மனைக் கண்டதும், ரங்கபதாகையின் கையிலிருந்து விடுபட்டு, "தாத்தா!" என்று ஓடி வந்தான்.

குனிந்து சிறுவனைத் தூக்கிக்கொண்ட மன்னன், "புறப்படலாமா குழந்தாய்!" என்றான்.

சிறுவன் தலையாட்ட, புன்முறுவல் செய்த மன்னன், தன் மனைவியின் பக்கம் திரும்பி, "தேவி, நான் வரட்டுமா?" என்றான்.

புன்னகையுடன் தலையசைக்க, மன்னன், தேரை நோக்கி நடந்தான்.

சிறுவன் பல்லவ மன்னனைத் தேரில் ஏற்றித் தானும் அமர, ரதசாரதி கண்ணன், அரசன் பக்கம் திரும்பினான். அமைச்சர் பிரம்மராயர் அருகில் வந்தார்.

"இளவரசன் பரமேசுவரவர்மனைக் கோட்டையிலேயே இருக்கச் சொல்லுங்கள். நான் இரு தினங்களில் வந்து விடு. கின்றேன்!" என்றான்.

அமைச்சர் தலையாட்ட, "இரதம் புறப்படட்டும்!" என்றான் இராசசிம்மன்.

சுளீர் என்று சாட்டையடி குதிரைகள்மீது விழுந்தது. அவை வில்லிலிருந்து விடுபட்ட அம்பென ஓடத் தொடங்கின.

* * *

இந்தக் கதை நிகழும் காலம் கி.பி 705 ஆம் ஆண்டாகும். இவ்வாண்டில்தான் இராசசிம்மன் ஆட்சி முடிந்து, அவன் மகனான இரண்டாம் பரமேசுவரவர்மன் ஆட்சி தொடங்கியது. இவனது ஆட்சி நீண்ட நாட்கள் நடக்கவில்லை. சில ஆண்டு களே அவன் அரசாண்டான். அதற்குப் பிறகுதான் புகழ் பெற்ற பிற்காலப் பல்லவர் ஆட்சியில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. அதன் விளைவு? இதுவரை ஆட்சி செய்த மரபு போய்ப் புதிய மரபு தோன்றியது.

இராசசிம்மன் மகனுன இரண்டாம் பரமேசுவர வர்மன் திடீரென இறந்துவிட, முறைப்படி அடுத்து ஆட்சி ஏற வேண்டியவன் அவன் மகனுன சித்திரமாயன். ஆனுல், பல்லவ ஆட்சிக்கு ஊறுநேரும் வகையில், அவன் பொறுப்பில்லாது பாண்டியரைச் சார்ந்தும். மற்றும் பல்லவ ஆட்சிக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தபடியிருந்த கும்பலிடம் தொடர்பு கொண்டும் இருந்தமையால், அவனிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க அமைச்சர் முதலானேர் விரும்பவில்லை. அதனுல் அவர்கள் பிற்காலப் பல்லவருள் முதல்வனுன சிம்ம விஷ்ணுவின் தம்பியான பீமவர்மன் வழிவந்த இரணியவர்மனிடம் இது பற்றி முறையிட்டனர். அவன் தன் மகனுன பல்லவமல்லன் என்பவனுக்கு முடி சூட்டுமாறு கருத்துத் தெரிவித்தான். அவ்விதமே அமைச்சர், கடிகையர், மூலப்பிரகிருதியார் முதலானேர் இரண்டாம் நந்திவர்மன் என்ற சிறப்புப் பெயரிட்டு முடி சூட்டினர். பல்லவமல்லன் அரசுப் பொறுப்பேற்கும் போது வயது பன்னிரண்டு. மிகச் சிறிய வயதிலேயே அரசுப் பொறுப்பேற்ற அவன், ஏறக்குறைய அறுபத்தைந்து ஆண்டு காலம் வெகு சிறப்புடன் ஆட்சி செய்தான். இவ்விதம் அவன் பட்டமேற்கும்வரை நடக்கும் நிகழ்ச்சிகளை விவரிப்பதே இந்நாவல். வாசகர்கள் இனித் தொடர்ந்து படிக்கலாம்.

4

மாமல்லபுரம் —

கடல் அலைகள் 'ஹோ' வென்று முழங்கிக் கொண்டிருந்தன.

மணிப்புரு மேற்கொண்டு பறப்பதை நிறுத்தி வட்டமடிக்க ஆரம்பித்தது. பிறகு தாழ்வாக இறங்கிப் பசுமைக் காடாய்த் தெரிந்த தென்னந்தோப்புக்குள் புகுந்தது.

அதன் நடுவில் —

மிகப் பெரிய பள்ளமாக இருந்த இடத்தின் ஓரத்திலுள்ள பனைமரத்தின் உச்சியில் உட்கார்ந்தது. சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு 'உக்கூர்' 'உக்கூர்' என்று கத்த ஆரம்பித்தது.

அப்பள்ளம் அமைந்திருக்கும் பாணியே அலாதியாக இருந்தது. மிக ஆழமாய் அமைந்த அப்பள்ளத்தின் ஓரத்தில் பாதி மணலிலும் மீதி வெளியிலுமாகத் தெரிந்த ஒரு மண்டபம், அவ்வளவு எளிதில் பார்ப்பவர் கண்ணுக்குப் புலனாகாத வகையில் அமைந்திருந்தது. அதையடுத்து ஒரு மணல் மேடு. அதற்குப் பாதுகாப்புச் சுவர்போல் அதிருக்க, அதையடுத்துள்ள பள்ளத்தில், சுற்றுப் பகுதியில் பெய்த மழை நீரெல்லாம் இறங்கிப் பெரிய தடாகம் போன்றிருந்தது. அசப்பில் பார்த்தால் பள்ளத்தில் நீர் தேங்கியிருப்பதுதான் தெரியுமே தவிர, மண்டபம் இருப்பது அவ்வளவு சீக்கிரம் யாருக்கும் தெரியாது.

பனைமரத்தில் உட்கார்ந்திருந்த மணிப்புரு, மண்டபத்தின் உச்சிக்குப் போய் அமர்ந்து திரும்பவும் 'உக்கூர், உக்கூர் என்று சப்தித்தது.

நிசப்தமாயிருந்த அத் தோப்பில், மணிப் புருவின் கூவல், பள்ளத்தில் எதிரொலித்துத் திரும்பவும் 'உக்கூர்' 'உக்கூர்' என்று கேட்டது.

மிக வேகமாக வீசிய தென்னங் காற்றினுல் அத் தடாகத்தின் நீரில், சிறுசிறு அலைகள் தோன்றி, கரையில் வந்து மோதி, 'சளக், புளக்' என்ற சப்தம் எழும்பி மணிப் புருவின் கூவலுடன் சேர்ந்து கொண்டது.

தன் கூவலுக்கு எவ்விதப் பதிலும் தெரியாததால் திரும்பவும் 'உக்கூர்!' என்று பலமாகக் கத்தியது.

இம்முறை அதற்குப் பதில் கிடைத்து விட்டது. மண்டபத்திலிருந்து ஒரு யௌவன நங்கை வெளியே வந்தாள். அழகும், இளமையும் அவள் மேனியிலிருந்தது. சுழல்கின்ற கரிய விழி

களிலிருந்து அபரிதமான கவர்ச்சி வெளிப்பட்டுக் கொண் டிருந்தது.

அவளைக் கவனித்துவிட்ட மணிப்புரு படபடவென்று சிறகடித்தது. அவள் தோளின்மேல் போய் உட்கார்ந்தது.

தன் மெல்லிய விரல்களால் மணிப்புருவை எடுத்துத் தடவிக் கொடுத்தாள்.

அதை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டதுபோல மணிப் புருவும் உற்சாகத்துடன் கண்களை மூடித் திறந்தது.

கழுத்திலிருந்த துணியைச் சாக்கிரதையாகப் பிரித் தெடுத்தாள். துணியில் என்ன எழுதியிருக்கிறது என்று பார்ப்பதற்கு அவள் முனைந்த சமயம், பின்னுல் காலடியோசை கேட்டது.

நிமிர்ந்து பார்த்தாள். பள்ளத்தின் மேற்புறத்தில் ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

அவனின் பருத்த உடம்பில், பெருத்த வயிறு சிறு மலைபோல் தெரிய கழுத்தைச் சுற்றி மண்டையோடுகளால் ஆன மாலையை அணிந்திருந்தான் தலையிலிருந்து முதுகின் நடுப்பகுதி வரை சடைமுடி அழுக்கேறிச் சிக்குப் பிடித்து ஆல விழுதுபோன்று தொங்கிக் கொண்டிருந்தது. மண்டையோட்டு மாலையுடன் ஒரு மாட்டுக் கொம்பையும் கட்டித் தொங்க விட்டிருந்தான். கையில் கபாலம் ஒன்றை (பிச்சைப் பாத்திரம்) வைத்திருந்தான். உடலெங்கும் சாம்பல் பூசிப் பார்க்க அருவருப்பான தோற்றத்தில் இருந்தான்.

ஆனுல், அவள் அருவருப்புக் கொள்ளவில்லை. மாருக, அவளின் செக்கச் சிவந்த இதழ்களிலிருந்து முறுவல் அரும்பியது.

இருக்கின்ற அருவருப்புப் போதாதென்று கறுப்பேறிய தன் பற்கள் நன்கு தெரியச் சிரித்து, ‘‘என்ன கயல்விழி? சாம்பனிட மிருந்து செய்தியா?’’ என்ருன் கரகரப்பான குரலில்.

அவள் தலையசைத்து ஆமோதித்தாள்.

"என்ன செய்தி கயல்விழி?"

"இன்னும் படிக்கவில்லை அப்பா?"

"அப்படியா சீக்கிரம் படித்து என்னவென்று சொல்லு!" — முகத்தில் அளவற்ற ஆர்வம் தெரிந்தது.

கயல்விழிகளின் விழிகள், அந்தத் துணியிலிருந்த செய்தியைத் தெரிந்து கொள்ள அதன் மீது பரவியபோது, தொலைவில் குதிரை வரும் ஓசை கேட்டது.

சடக்கென்று துணியை இடுப்பில் செருகிக் கொண்டு, மேலே நின்று கொண்டிருந்த தன் தந்தையிடம், "யார் வருவது?" என்று கலவரம் நிறைந்த குரலுடனே கேட்டாள்.

உடனே அவன் கைகளை அர்த்தசந்திர அமைப்பில் வளைத்துக் கண்ணருகே வைத்துக் குவித்துக் குதிரையின் குளம்பொலி வரும் பக்கம் கவனித்தான்.

அப்போது—

இதுவரை மிகவும் இலேசாய்க் கேட்ட அந்த ஓசை பெரிதாகி அருகில் கேட்பது போலிருந்தது. கூர்ந்து கவனித்த நாக பைரவன் கண்களுக்குத் தென்னந் தோப்பின் குறுகிய வழியில் புரவி ஒன்று வேகமாக வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

மணற்சரிவின் கீழே மண்டபத்தின் அருகிலிருந்த கயல்விழியின் செவியிலும் அந்த ஓசை விழ, "யாரப்பா அது?" என்றாள் திரும்பவும். உற்றுக் கவனித்துக் கொண்டிருந்த அவன் முகத்தில் மலர்ச்சி தோன்றியது. மகளின் பக்கத்தில் திரும்பிப் "பல்லவ சக்கரவர்த்தி!" என்றான்.

உடனே அவள் முகத்திலும் மகிழ்ச்சி பரவியது. உற்சாகத்துடன் அவள் கால்கள் வேகமாகப் பதிய மேலேறி வந்தாள்.

நாகபைரவன், "வாழ்க பல்லவர் குலத்திலகம்! வருக வருங் காலப் பல்லவ சக்கரவர்த்தி!" என்று முழக்கம் செய்தான்.

அவன் முழங்கிய முழக்கம் அத் தோப்பையே அதிர வைப்பது போன்று எதிரொலித்து முழங்க, இருபது வயது நிரம்பிய இளைஞன் ஒருவன் புரவியிலிருந்து இறங்கினான். நல்ல உயரமான உடல்! பரந்த அவன் முகத்தில் அரசருக்குரிய கம்பீரம் தவழத்தான் செய்தது.

அப்பொழுது மற்றொரு புரவி வரும் ஓசை கேட்டது.

அதைக் கேட்ட நாகபைரவன் முகம் சுருங்கிக் கண்கள் இடுங்கிப் புருவங்கள் மேலேற, அதே சமயம், சிறிது கலவரமும் முகத்தில் தோன்ற, ஓசை வரும் பக்கம் திரும்பினான்.

"வீரசேகரன் தான் வருகிறான்!" என்று இளைஞன் சொல்ல "ஓ, அப்படியா?" என்ற நாகபைரவன் சிரித்துக் கொண்டான்.

பள்ளத்தின் மேற்பரப்புக்கு வந்த அவளின் விழிகள் அந்த அரச குடும்பத்து வாலிபனை உற்று நோக்கின. மிக ஆர்வத்துடன் மணற்சரிவிலிருந்து மேலேறி வந்ததினால் மூச்சு வாங்கியது. அதனால் சிறிது மேலேறி இறங்கிய அவளின் மார்பகங்கள், இளைஞனுக்கு மன்மத ஜாலம் காட்டின.

கண்களைத் தாழ்த்திக் கொண்டான்.

திரும்பவும் அந்தக் காட்சி, அவன் மனக்கண் முன் வந்தது.

செவ்வரி ஓடிய கண்கள் தன்னை நோக்க, மேல்பகுதி மூச்சின் வேகத்தினால் குலுங்க, அந்தப் பாரம் தாங்காமல் வேய்த் தோள்களும் மேலேறி இறங்க, அந்தக் காரணத்தினால் அவளின் மணி வயிறு சிறிது உள்ளடங்க, அதன் நடு நாயகமாக இருந்த உந்திச் சுழியும் ஆயிரம் அர்த்தங்கள் சொல்வது போன்று பூரித்து நின்றதே!... அந்தப் பூரிப்பில் இருந்த இளமையின் வளத்தை என்னவென்று சொல்வது!

உணர்ச்சி வேகத்தினுல் அந்த இளேஞனும் பெருமூச்சு விட்டுக் கயல்விழியைப் பார்த்தான். அகன்ற அவளின் கரு விழிகள், இன்னும் தன்னேயே நோக்கிக் கொண்டிருப்பதை அறிந்து, அந்த நோக்கின் வெம்மையைத் தாங்க மாட்டாமல் திரும்பவும் வேறு பக்கம் திரும்பிக் கொண்டான். ஆனுல்? அவன் மனம் மீண்டும் அவளேப் பார் என்று சொல்கிறது. அந்தக் கட்டளே மிக இனிமையான கட்டளேதான்! முடிய வில்லேயே! என்ன செய்வது?

"சக்கரவர்த்தி!" — நாகபைரவனின் அழைப்பு அவனே உணர்வு பெறச் செய்தது.

"என்ன நாகபைரவா?" — சமாளித்து அவனேப் பார்த்து வினவினுன்.

அந்நேரத்தில் வீரசேகரன் குதிரையை நிறுத்திவிட்டு அருகில் வந்தான்.

இருவரையும் கவனித்த நாகபைரவன், "சாம்பனிடமிருந்து செய்தி வந்திருக்கிறது!" என்ருன்.

சக்கரவர்த்தி என்று நாகபைரவனுல் அழைக்கப்பட்ட இளேஞன், பரபரப்போடு, "என்ன செய்தி அதில் சொல்லப் பட்டிருக்கிறது?" என்ருன்.

"அதை அறிந்து கொள்வதற்குள் தான் நீங்கள் குறுக்கிட்டு விட்டீர்கள்!" என்ருள் கயல்விழி.

"அப்படியா?" என்ற அவ்விளேஞன் "எங்கே அந்தச் செய்தி வந்த ஓலேயைக் கொடு பார்க்கலாம்!" என்ருன்.

தன் இடுப்பில் செருகியிருந்த துணியை எடுத்து அவனிடம் தந்தாள்.

இருவிரல்களும் தொட்டுக் கொண்டன. அந்தத் தீண்டலின் சக்திக்கு இருந்த மகத்துவத்தை என்னவென்று சொல்வது? இரு நெருப்புக் கற்கள் ஒன்றையொன்று உரசிக் கொண்டால் 'தீ தோன்றும்! அதுபோல இருவர் மனதிலும் காதலெனும் தீ தோன்றிக் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. பறித்துப் போட்ட அல்லித் தண்டாய் கயல்விழி துவண்டாள். அவன், தன்னை மறந்து. அந்த ஸ்பரிசத்தின் நுகர்வில் உண்டான ஆனந்தத்தில் திளைத்து நின்றான்.

"சக்கரவர்த்தி" என்றான் நாகபைரவன் மறுபடியும்.

"ஓ!" என்று மென்முறுவலால் தன்னைச் சுதாரித்து, அதில் எழுதியிருந்த செய்தியை மனதிற்குள் படித்தான்.

கண்கள் சிவந்தன; நாசி உணர்ச்சியால் துடித்தது. பற்கள் கடிக்கப்படும் ஒலி......

நாகபைரவன் என்னதோ ஏதோவென்று பயந்து, "என்ன சக்கரவர்த்தி?" என்றான் கலவரத்தோடு.

"கிழக்குரங்கு, என் ஜென்மப் பகைவனுடன் மாமல்லைக்குப் புறப்பட்டு விட்டதாம்!" — அந்தத் துணியைக் கசக்கித் தூர எறிந்தான்.

"என்ன?"

"ஆமாம்!"

இப்போது அவன் முகத்தில் ஆத்திரம்!

"பல்லவமல்லன்... பல்லவமல்லன்.... கேவலம்... அந்த ஆறுவயதுப் பையலுக்கு இருக்கிற மரியாதைகூட எனக்கு இல்லை. நான் என்ன பாவம் செய்தேன்? இறைவா, என்னை ஏன் இவ்வுலகில் மனிதனாகப் படைத்தாய்?" என்ற அந்த இளைஞன் கண்கள், அளவற்ற சோகத்திற்கு 'ஆளாகின' ஆத்திரமும், குரோதமும், மாறி மாறித் தோன்றத் தலைகுனிந் தான் அந்த வாலிபன்.

அதைக் கவனித்த நாகபைரவன், "கவலைப் படாதீங்க சக்கரவர்த்தி. நாங்கள் இருக்கும் போது நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?... விடுங்கள் அந்தக் கவலையை...? என்ருன்."

"ஆமாம் ஏன் வீணுக வருத்தப்படுகிறீர்கள்?..." என்ருன் வீரசேகரனும்.

"பிள்ளைவழிப் பேரன் நான் இருக்க பங்காளி வழிவந்த ஆறு வயதுப் பையனுடன் கொஞ்ச இந்தக் கிழவனுக்கு என்ன புத்தியா மழுங்கி விட்டது?" என்ருன் அந்த இளைஞன்.

கிழவன் என்று அந்த இளைஞன் அழைத்தது இராசசிம்மனை. பங்காளி வழிவந்த பையன் என்று அவன் குறிப்பிட்டது மாமல்லைக்கு அவனுடன் வந்த சிறுவன் பல்லவமல்லனை... இந்த இளைஞன் தான் இராசசிம்மன் புதல்வனை இரண்டாம் பரமேசுவரவர்மனின் மகன். சித்திரமாயன் என்ற பெயருடையவன். நியாயமாக இராசசிம்மன், சித்திரமாயனிடம் தான் அன்பு செலுத்த வேண்டும். அவன் நடத்தை நாட்டிற்கு விரோதமாக இருந்ததால் இராசசிம்மன், சித்திரமாயனை அறவே வெறுத்து வந்தான்.

"நன்ருகச் சொன்னீர்கள் சக்கரவர்த்தி. அந்தக் கிழவனுக்கு உண்மையிலேயே புத்திதான் மழுங்கி விட்டிருக்கிறது... நாளைக்கே ஒரு பெரும்படை இந்தக் காஞ்சியைத் தாக்க வந்தால் இந்த ஆறுவயதுப் பையன் என்ன செய்வான்? வாளெடுத்துப் போர் புரிவானு? அல்லது அந்த வாளைத் தூக்கத்தான் இவனுக்கு சக்தி இருக்கின்றதா?"

வீரசேகரன் குறுக்கிட்டான்.

"நீங்கள் என்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள். அப்படி ஒரு நிகழ்ச்சி நம் நாட்டில் நடந்து விட்டால், மரத்தால் செய்த வாளுடன், இப்பொழுது விளையாட வைத்துக் கொண்டிருக்

கிருனே அத்தேர் ஏறிப் பகைவர்களை பனங்காயாக சீவி விட மாட்டான்!''

அதைக் கேட்டதும் அனைவரும் 'கொல்' என்று சிரித்து விட்டனர். சித்திரமாயன் சிரிப்பு அடங்க நீண்ட நேரம் பிடித்தது.

''நன்ருகச் சொன்னுய் வீரசேகரா,... நன்ருகச் சொன்னுய்!'' என்று திரும்பவும் உரக்கச் சிரிக்கலானுன் அவன்.

அச்சிரிப்பின் ஓசை கேட்டுத் தென்னை மரங்களின் உச்சியில் உட்கார்ந்திருந்த பறவைகள், பயந்து, உயரக் கிளம்பிச் சிறகடித்து மறுபடியும் உட்காருவதற்குப் பாதுகாப்பான இடம் தேடி அங்குமிங்கும் அலைந்தன.

அதைக் கவனித்தான் நாகபைரவன்.

''அதோ பாருங்கள் சக்கரவர்த்தி! இருக்க இடம் தேடி அலைகின்ற பறவைகளை! அதுபோன்று அந்தப் பயல் பல்லவ மல்லனும் அலைய வேண்டும். அப்படி அலையச் செய்யும் வரை நாம் ஓயக் கூடாது!''

''உண்மை! அவ்விதம் செய்வது தான் நமக்கும் நல்லது!'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது கயல்விழி குறுக்கிட்டு கேட்டாள்.

''கிழவன் இராசசிம்மன் எதற்காக அந்தப் பையனுடன் மாமல்லைக்கு வரவேண்டும்?''

''எதற்காக வந்திருப்பான்? என்னமோ பெரியதாகக் காஞ்சியில் கயிலாசநாதர் ஆலயத்தைக் கட்டி விட்டதாகத் தம்பட்டம் அடித்துக் கொண்டு அதே போலக் கடற்கரையிலும் ஒரு கோவிலைக் கட்டி விட்டான்! அவனைச் சுற்றி இருக்கிற 'ஆமாம் சாமிகள், ஆகா, இம்மாதிரி கலையமைப்பே இல்லை... உலகிலேயே இது ஒன்றுதான் அதுபோல இருக்கிறது என்று

தம் வயிற்று சோற்றுக்காகத் தாளம்போடத் துவங்கி விட்டனர். இந்த ஜனங்களுக்கும் புத்தியில்லே. ஏன் அந்தக் கிழவன் வயிற்றில் பிறந்து, இப்போது இளவரசுப் பட்டம் கட்டிக் கொண்டிருக்கும் என் தந்தை பரமேசுவரவர்மனுக்கு மட்டும் என்ன கூடை கூடையாகவா புத்தி இருக்கின்றது? தனக்கு இளவரசுப் பட்டம் கிடைத்து விட்டது. அதனுல் தன் மகனே உதாசீனப் படுத்திக் கிழவன் பங்காளிப் பையனைக் கொஞ்சினுலும் 'கவலே இல்லேயென்று, எனக்கு விரோதமாக நாட்டில் நான் உருப் படாதவன் என்று பார்க்கிறவர்களிடத்திலெல்லாம் சொல்லிக் கொண்டு வருகிருரே...! இவர் எனக்கு தந்தையா?... இப்படி ஈவு இரக்கமற்ற ஒருவருக்கு மகனுகப் பிறக்க நான் என்ன பாவம் செய்தேன்?'' என்று அதற்கு மேல் பேச முடியாமல் துயரத் தினுல் மௌனமானுன் சித்திரமாயன்.

சிறிது நேரம் அமைதி நிலவிய அந்த இடத்தில் அதை அழிப்பது போல நாகபைரவன் கனேத்து விட்டு உரக்கப் பேசினுன்:

''நீங்கள் கவலேப்படாதீர்கள் சக்கரவர்த்தி! நாங்கள் இருக் கிறேம். உங்களே அரசு கட்டில் ஏற்றும்வரை நாங்கள் ஓயப் போவதில்லே! இது சத்தியம்!'' என்று இடையில் செருகியிருந்த குறுவாளே எடுத்துத் தன் கையில் சரக்கென்று கீறினுன். மறு கணம் கீறின அந்த இடத்திலிருந்து குபுகுபுவென்று இரத்தம் கொப்பளித்தது.

''நான் வணங்கும் பைரவர் மீது ஆணே! சக்கரவர்த்தி சித்திரமாயன் அவர்களே அரசு கட்டிலே ஏற்றும்வரை நான் ஓயம் போவதில்லே! இது சத்தியம்! என் கடமைகளில் இதைத் தலேயாய கடமையாகக் கருதுகின்றேன்! அவ்விதம் நான் இக்கடமையில் தவறி விட்டால், அடுத்த நொடியே என் உயிர் உடலில் இருக் காது! இது சத்தியம்!'' என்று தரையில் சொட்டுச் சொட்டாக விழுந்து கொண்டிருந்த குருதியைத் தொட்டுத் திலகமாக நெற்றியில் இட்டுக் கொண்டான். அப்போது அவன் கண்கள் நெருப்புருண்டைகள் போல ஜொலித்தன.

மெய் சிலிர்க்க வைத்த அந்நிகழ்ச்சியைக் கவனித்த சித்திர மாயன், ஒரு நொடி திகைத்து நின்று விட்டான். தனக்கு ஒப்பற்ற துணையாக நாகபைரவன் இருக்கின்ருன் என்பதை அவன் உணர்ந்த போது, அவன் உதடுகள் அதைப் புன் முறுவலாய்ப் பிரதிபலித்தன.

''நாகபைரவா, உன் உண்மையான நட்பை நினைத்து நான் பெருமையடைகின்றேன். இம்மாதிரி நண்பர்கள் இருக்கும் வரை எனக்கு என்ன குறைச்சல்? என் மனம் இன்றுதான் உண்மையிலே அளவற்ற உவகையில் ஆழ்கிறது. அதைத் தாள மாட்டாமல் என் இதயமும் படபடவென்று அடித்துக் கொள்கிறது. ஆகா, இனி எனக்கு என்ன வேண்டும்?'' என்று கயல்விழியின் பக்கம் திரும்பினுன் சித்திரமாயன்.

''தந்தைக்குக் குருதி அதிகமாக வெளிப்பட்டுக் கொண் டிருக்கிறது! அதற்கு ஏதாவது மருத்துவம் செய்யேன்!'' என்று சொன்ஞன். கயல்விழி, வேகமாகப் பள்ளத்தில் இறங்கி, மண்டபத்திற்குள் நுழைந்து துணி ஒன்றை எடுத்து வந்தாள். மறு கையில் கறுப்பாக ஒன்று இருந்தது. அதைக் காயப்பட்ட பகுதியில் வைத்துத் துணியால் கட்டுப் போட்டாள். இரத்தம் ஒழுகுவதும் நின்றது. கையை அசைத்து விட்டு நிமிர்ந்து, ''சக்கரவர்த்தி!'' என்ருன்.

''என்ன நாகபைரவரே?''

அவன் தயங்கி, புன்னகையை உதிர்த்து, ''எனக்கு ஒரு வரம் வேண்டும்!'' என்ருன்.

''என்ன வரம் பைரவரே?''

''ஒன்றுமில்லை, தாங்கள் காஞ்சியில் முடிசூடியதும், தற்போது மெல்ல மக்கள் மத்தியில் செல்வாக்கிழந்து வரும், நான் சார்ந்திருக்கும் மதமான கபாலிக சமயத்தை எங்கும் பரப்பத் தாங்கள் உதவி செய்ய வேண்டும்!''

"இவ்வளவுதானே, நான் என்னமோ ஏதோவென்று நினைத்தேன்! சவலைப்படாதே நாகபைரவரே, அப்படியே செய்கின்றேன்!" என்ருன் சித்திரமாயன்.

நாகபைரவன் முகத்தில் அளவற்ற சந்தோஷமும், மன நிறைவும் பரவி, அந்தக் குரூர முகத்தில் ஒருவித மலர்வு தோன்றியது.

"இது போதும் எனக்கு! இதைவிட எனக்கு என்ன வேண்டும்? இந்தக் கபாலிகமதம் எங்கும் பரவி மக்கள் மத்தியில் அளவற்ற செல்வாக்குடன் இருப்பதைப் பார்த்து விட்டதும் அந்த நிறைவிலேயே கண்களை மூடிவிடுவேன்" என்ருன் உருக்கத்தோடு.

"கிழவனும், அந்தப் பையன் பல்லவமல்லனும் மாமல்ல புரத்திற்கு வந்திருப்பது நல்ல சந்தர்ப்பம்! அதை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்!" என்ருள் கயல்விழி.

"சந்தர்ப்பமா? எப்படிச் சொல்கிருய் கயல்விழி?" — சித்திர மாயனின் கேள்வி.

"ஆம்! இது நல்ல சந்தர்ப்பமாகவே எனக்குப்படுகிறது!"

"எப்படி?"

"காஞ்சிக் கோட்டையை விட மாமல்லை அரண்மனையில் அவ்வளவு பாதுகாப்பிருக்காது! இதைப் பயன்படுத்தி நாம் மல்லனைக் கடத்தி விட வேணடும்!"

சித்திரமாயன் முகத்தில் மகிழ்ச்சி நிலவியது.

"நல்ல யோசனை... நல்ல யோசனை... யோசனை சொன்ன வாய்க்கு அதிரசம்தான் போட வேண்டும்! நாக பைரவரே... உன் மகள்... இதுவரை அழகிற் சிறந்தவள் என்றுதான் நினைத்திருந்தேன்! அறிவிலும் அவள் சிறந்தே இருக்கிருள்..."

அந்த வார்த்தைகள் கயல்விழியின் முகத்தில் நாணத்தைப் படர வைத்தன. சிவந்த தன் முகத்தைக் கீழே தாழ்த்தினுள்.

''சக்கரவர்த்தி, அப்படிக் கடத்தப்படும் பல்லவ மல்லனை நம் பைரவருக்குப் பலி தந்தால் என்ன? நீண்ட நாளாக என்னிடம் அரச குடும்பத்துப் பலிக்குகைப் பைரவர், அடிக்கடி என் கனவில் வருகிருர்... அவரை மகிழ்வித்தது மாதிரியும் இருக்கும். உங்கள் ஜென்மப் பகைவனைத் தொலைத்தது போலவும் இருக்கும்!''

சித்திரமாயன், இடி இடியெனச் சிரித்தான் அதைக் கேட்டு. வீரசேகரன் பக்கம் திரும்பி, ''என்ன இது? இன்று என் காதில் விழுகின்ற செய்திகள் மகிழ்ச்சி தருகின்றவைகளாக இருக்கின்றனவே!... சபாஷ்! அதைச் செய்து முடிக்க என் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். நம் நாகபைரவருக்கு!'' என்ருன் மகிழ்ச்சியுடன்.

''யார் அந்தப் பயலைக் கடத்துவது?'' — வீரசேகரன் கேட்டான்.

உடனே நாகபைரவன், ''நான் கொண்டு வருகின்றேன் அவனை!'' என்ருன்.

சித்திரமாயன், மேலும் கீழும் பார்த்து ''பைரவரே! இந்தக் கோலத்துடன் நீர் எப்படி அரண்மனைக்குள் நுழைய முடியும்?'' என்ருன்.

''நான் எப்படியும் அரண்மனைக்குள் நுழைந்து விடுவேன்! அதைப் பற்றிக் கவலை வேண்டாம்! நான் திரும்பி அந்தப் பையனுடன்தான் வருவேன்! இல்லையென்ருல் என் உடலைத் தான் அவர்கள் சிறைபிடிக்க முடியும்!''

சித்திரமாயன், அதை ஏற்றுக் கொள்ளாது பலமாகத் தலையசைத்து, ''உங்களிடம் நான் வேறு பெரிய வேலையை எதிர்ப் பார்க்கின்றேன்! நீங்கள் இந்த வேலைக்குப் போவது

வீண் என்றுதான் எனக்குப் படுகிறது... தவறி விட்டால் அப்புறம்..." என்று மேற்கொண்டு பேசாமல், "வேறு யார் இந்தக் காரியத்தை நிறைவேற்ற முன் வருகிறீர்கள்!" என்பது போலச் சுற்று முற்றும் பார்த்தான்.

கயல்விழி, ஒரு அடி எடுத்து வைத்து முன் வந்து நின்றாள். அவளைக் கவனித்தான் சித்திரமாயன்.

"நீ இப்பொறுப்பை ஏற்றுக் கொள்கிறாயா கயல்விழி?"

"ஆம் சக்கரவர்த்தி!" — அவள் பதிலில் உறுதியும் அழுத்தமும் தொனித்தன.

சில நொடிகள் மௌனம் சாதித்த சித்திரமாயன் வீரசேகரன் பக்கம் திரும்பினான்.

"என்ன சக்கரவர்த்தி?"

"கயல் விழி..." என்று அவன் வார்த்தையை ஆரம்பிக்கும் முன்பே நாகபைரவன், "சக்கரவர்த்தி, கயல்விழியால் இந்தக் காரியம் சுலபமாக முடியும்! ஏனென்றால் மல்லை அரண்மனையில் அவள் பணிப் பெண்ணாகச் சேர்ந்திருக்கிறாள்... அதனால் இந்தக் காரியத்தை அவளால் எந்தவித ஆபத்துமின்றி நிறை வேற்ற முடியும் என்று நினைக்கின்றேன்!" என்றான்.

சித்திரமாயன், "கயல்விழியிடம் இப் பொறுப்பை ஒப் படைக்கிறோம். இன்று இரவு அவள் பல்லவ மன்னனைக் கடத்திக் கொண்டு வருவாள்... அதற்குப் பிறகு நாளைய இரவு நம் பைரவருக்கு அவனைப் பலி கொடுக்கப் போகிறோம்! என்றான்.

நாகபைரவன், கயல்விழியின் அருகில் சென்று, "வெற்றி யோடு திரும்பி வா மகளே!" என்று வானத்தைப் பார்த்து, மனதிற்குள் எதையோ முணு முணுத்துத் தரையிலிருந்து சிறு மணலை எடுத்து அவள் நெற்றியில் பொட்டு வைத்தான்.

"நான் புறப்படுகிறேன் அப்பா!" என்ருள் கயல்விழி.

"சென்று வா மகளே!... பல்லவ மல்லனுடன் திரும்பு... முடிந்தால் இன்றைய இரவே அவனைப் பலி கொடுத்து விடுவோம்!" என்ருன்.

தலையசைத்து, மரத்தில் கட்டியிருந்த புரவியை அவிழ்த்து அதில் ஏறி உட்கார்ந்தாள்.

நாகபைரவன் கையசைத்து விடை தந்தான்.

புரவியை வாரினுல் அடித்துக் காலால் இலேசாய் உதைத்தாள். அது தென்னந் தோப்பின் குறுகிய வழியில் வேகமாய் ஓடத் துவங்கியது.

சித்திரமாயன், அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்து விட்டுத் திரும்பினுன்.

சில நொடிகள்... மூவரும் மண்டபத்திற்குள் செல்வதற்காக மணற் சரிவில் இறங்கினர்.

இதுவரை அங்கே உட்கார்ந்திருந்த மணிப்புரு உயரக் கிளம்பி வானத்தில் பறக்கத் துவங்கியது.

5

"தடமார்ந்த கடல் மல்லைத் தலசயனத்துத்
தாமரைக் கண் துயிலமர்ந்த தலைவன்"

என்று திருமங்கையாழ்வாரால் சிறப்பித்துப் பாடப்பட்ட மாமல்லபுரக் கடற்கரையில் ஆனந்த நித்திரை புரியும் அண்ணல் திருமாலின் கோவில் ஒரு புறமும், பிறப்பறுக்கும் பிஞ்ஞ

கன் தன் பெயர் சொல்ல மற்றொரு கோவில் இன்னொரு பக்கமும், இவ்விதம் சைவமும் வைணவமும் வேறு வேறல்ல ஒன்றே என்று காண்பிக்கும் விதத்தில் கடற்கரைக் கோவிலாக அமைந்திருந்த அவை, அந்தப் பகல் நேரத்தில், பகலவன் ஒளியில் வெண்ணிறமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தன.

ஆரவாரிக்கும் அலைகள் உயர எழும்பி, அதே வேகத்தில் ஓடி வந்து அந்தக் கோவிலைத் தொட முயலும் விரைவைப் பார்த்தால், அவற்றின் அற்புத நேர்த்தியைக் காண, அவ்விதம் ஓடி வந்தன போல் தோன்றியது.

தொலைவில் கலங்கள் வந்து நின்றிருந்தன. அவைகளில் அந்தந்த நாட்டுக்குரிய கொடிகள் கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தன. அவற்றிலிருந்து உயர்ந்த ஜாதிக் குதிரைகளும், வாசனைத் திரவியங்களும் இறங்கிக் கொண்டிருந்தன. அவை கனைக்கின்ற கனைப்புச் சப்தங்களும், வாசனைப் பொருள் களிலிருந்து எழுந்த வாசனையும் காற்றில் பரவி, அப்பகுதியெங்கும் கலகலப்பாக இருந்தன அது தவிரக் கலங்களிலிருந்து இறங்கும் பொருட்களை, அவற்றுக்கென்று உரிய இடத்தில் சேர்ப்பிக்கப் போடும் கூலியாட்களின் கூச்சல் வேறு, அக் கலகலப்பில் கலந்து கொண்டது.

பரதவர் தெருக்களில் மிக நெருக்கமாக மக்கள் நடமாட்டத்தின் ஓசைகளும், பல்வேறு பொருள்கள் விற்போர் கூவல்களும்; அதை வாங்க வந்த மக்களின் பேச்சுக்களும்... ஆக எல்லாமாகச் சேர்ந்து மாமல்லை சுறுசுறுப்புள்ள துறைமுகம் என்று தெரிந்தது.

பல்வேறு நவமணிகளை முத்து, இரத்தினம் என்று தரம் பிரித்துக் குவித்து வைத்திருப்பவர்களும், அவ்விதம் குவித்து வைத்த நவமணிகளுக்கு ஈடாகக் கலங்களிலிருந்து வந்தவர்கள், வாசனைத் திரவியங்களைத் தந்து வாங்கிக் கொள்பவர்களும்... இவ்விதம் பலவித வாணிகங்கள் நடந்த அவ்விடத்தில், எந்த

விதக் குழப்பமும் நேராதிருக்கக் குத்தீட்டிகளுடனும் இடையில் வாளுடனும் காவல் புரியும் யவன வீரர்களுமாக பலரின் நடமாட்டத்தினுல், மக்கள் நெருக்கடியிருந்த அந்தப் பகல் வேளேயில்...

அந்நகருக்கு நடுநாயகமாக இருந்த மூன்றடுக்கு உப்பரிகையின் முன்பு நந்திக் கொடி பறந்த தேர் ஒன்று வந்து நின்றது.

மாளிகையின் முன் காவல் புரிந்த வீரர்கள், "பல்லவச் சக்கரவர்த்தி வாழ்க! பகைவருக்கு இடியேறு போன்ற சிங்கம் வாழ்க!" பூவுலகம் காக்க வந்த புண்ணியரே வாழ்க!" என்று முழங்கத் தேரிலிருந்து இராசசிம்ம பல்லவன், கம்பீரமாகச் சிறுவன் பல்லவமல்லனுடன் இறங்கினுன்.

தேரிலிருந்து மாளிகை வரை யவன வீரர்கள் உருவிய வாட்களுடன் அணிவகுத்து நிற்க, விஜயவர்மன் மன்னனே வரவேற்ருன்.

வேந்தனேப் பார்க்க வீதியில் கூடிய மக்கள் கூட்டம் அலே மோதியது..' வாழ்த்தொலிகள் முழங்கின... இராசசிம்மன், புன்முறுவலுடன் மக்கள் கூட்டத்தைப் பார்த்துக் கையசைத்து விட்டு அரண்மனேக்குள் நுழைந்தான்.

முன் கூடத்தில் நகரப் பிரமுகர் முதலானேர் எழுந்து நின்று மன்னனே வணங்கி நின்றனர். அவர்களின் மரியாதையை ஏற்றுக் கொண்டு, தன் அறைக்குச் சென்ருன் அரசன்.

போடப்பட்டிருந்த சிங்கமுக ஆசனத்தில் அமர்ந்தான். விஜயவர்மன், அருகில் வந்து நின்ருன்.

"பகல் உணவு முடிந்து சிறிது நேரம் கழித்துக் கடற்கரைக் கோவிலேயும், மற்றும் ஐந்து ரதங்களேயும் பார்க்க விரும்பு கின்றேன். அது முடிந்ததும் யவன நாட்டிலிருந்து இறங்கிய

புரவிகளைப் பார்வையிட விரும்புகின்றேன். அதற்கான ஏற்பாடுகளை விரைந்து செய்க!'' என்ருன்.

விஜயவர்மன், தலையசைத்து விட்டுச் சென்ருன்.

பகல்வேளை முடிந்து மாலைக் காலம் வந்து கொண்டிருந்த நேரம்.

நீண்டு, எழுந்து, இறங்கிக் கரையை வேகமாய் வந்து மோதிக் கொண்டிருந்த கடல் அலைகளின் முன்னால், எழில் ஓவியமாக நின்று கொண்டிருந்தது அக்கடற்கரைக் கோவில்.

'பிணங்கனிடு காடதனுள் நடமாடு பிஞ்ஞகனேடு
இணங்குதிருச் சக்கரத்தெம் றெருமானார்க் கிடம் விசும்பில்
கணங்களியங் கிடு மல்லைக் கடன்மல்லைத் தலசயனம்
வணங்குமனத் தாரவரை வணங்கென்றன் மடநெஞ்சே!

எனத் திருமங்கையாழ்வாரால் சிறப்பித்துப் பாடிய ஜலசயனம், தலசயனம் என அழைக்கப்படும் அக் கோவிலின் முன் நின்ருன் இராசசிம்மன்.

தன்னால் கட்டப்பட்ட கோவில்! அதைக் காண்பதில்தான் மன்னன் முகத்தில் எத்தனை வித மகிழ்ச்சி!

அசப்பில் பார்த்தால் சாதாரணக் கோபுர அமைப்பில் உள்ள கோவிலைப் போல் தோன்றினாலும் உற்றுப் பார்த்தால், அவை சிறிது வித்தியாசப்பட்டிருப்பது நன்கு தெரியும்... கடாரம், சாவகம், சீனம் முதலிய கோவில்களின் அமைப்போடு பொருந்தி, மாமல்லையில் இருக்கும் மற்ற கோவில்களைப் போல ஒரே கல்லால் அமைக்கப் படாமல், பல்வேறு பெருங்கற்களைக் கொண்டு செதுக்கப்பட்டு ஒன்ருக அமைக்கப்பட்ட அதன் நேர்த்தியை என்னவென்று சொல்வது?

சதுர அமைப்பில் வரவரக் குறுகி உச்சியில் ஈட்டி போன்று கலச அமைப்புடனிருந்த அதன் கம்பீரத்தை இராசசிம்மன் கண்கள் சுற்றிச் சுற்றிக் கவனித்தன.

கடற்கரை ஓரத்தில் கோவிலை அமைக்கத் தான் எண்ணிய போது, அமைச்சர் உட்படப் பலர், அதற்குச் சிறிது மாறுபாடான கருத்துத் தொனிக்க, 'கடல் ஓரத்தில் கோவில் அமைத்தால் அலைவாய்க்குத்தான் போகும்!' என்று சொன்னதை ஏற்றுக் கொள்ளாது, இங்குதான் அமைக்க வேண்டும் என்று தன்னால் வற்புறுத்திக் கூறப்பட்டதின் நோக்கத்தை இப்போது எல்லோரும் புரிந்து கொண்டு பாராட்டுகின்றார்களே!

இராசசிம்மன், குனிந்து சிறுவன் பல்லவ மல்லனுக்குக் கோவிலைக் காட்டினான்.

அளவற்ற மகிழ்ச்சியால் அவன், தன் சிறு கைகளைத் தட்டி, "தாத்தா, கோவில் பார்க்க நன்றாக இருக்கிறது!" என்று துள்ளிக் குதித்தான்.

"ஆமாம் பல்லவ மல்லா! ஆனால் இக் கோவில் கடற்கரை ஓரம் அமைக்கப்பட்டதற்கு ஒரு காரணம் இருக்கிறது! தெரியுமா உனக்கு?" என்று சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்தவாறு கேட்டான் மன்னன்.

"என்ன காரணம் தாத்தா?" — சிறுவன் கேட்ட கேள்வியே அங்கிருந்த ஒவ்வொருவர் மனத்திலும் அப்போது எழுந்தது.

மன்னன், தன் முறுக்கு மீசையைத் தடவி விட்டுக் கொண்டான் கம்பீரமாக.

பக்கத்தில் விஜயவர்மனும், நகரப் பிரமுகர்களும் மன்னன் என்ன சொல்லப் போகின்றான் என்பதைக் கவனிக்க ஆயத்தமாயினர்.

"மல்லா! அதிகாலை அருணோதயத்தில் கடல் நீரிலிருந்து சிவந்த பந்து போலக் கதிரவன் வெளிப்படும்போது, அதன் கதிர் ஒளிபட்டுப் பொன்னிறமாக இக்கோயில் ஒளிவிடும்!

அதே கதிரவன் உச்சிக்கு வரும்போது தகிக்கும் அதன் ஜுவாலையில் அந்தப் பொன்னிறம் வெண்ணிறமாக மாறும் விந்தை இருக்கே! அது சொல்லத் தரமன்று! இன்னொரு வேடிக்கை... அதே கதிரவன் மேற்கு நோக்கி மெல்லச் சாயும் போது, அதனின் நீண்ட சிவந்த கதிர்கள் இவ் விமானத்தின் மீது பட்டு... நன்ருகக் கவனி மல்லா! இப்போது நாம் இந்த நேரத்தில்தான் இங்கே இருக்கிறோம்... கதிரவன் மேற்கு நோக்கி மெல்லச் சாய்ந்து கொண்டிருக்கிறது! அதன் நீண்ட சிவந்த கதிர்கள் கோவில் விமானத்தின் மீது படுகிறது. இப்போது இதன் வெண்ணிற ஒளி மறைந்து வேருெரு நிறம் உண்டாகிக் கொண்டிருக்கிறது... அது என்ன நிறம்? அது தான் கருமை... அந்தக் கருமையின் முழு அழகும் முற்றிலும் இந்த இடத்தை இருள் சூழும்போது தான் தெரியும்... அப்படி வெளிப்படும் கருமையின் எழில், இன்னும் சிறிது நேரத்திற்குப் பிறகு இங்கே தோன்றும் நிலவொளியில் மிளிரும் அழகிருக்கே...'' மன்னன் உணர்ச்சி வசத்தால் மேற்கொண்டு பேச முடியாமல் நிறுத்திக் கொண்டான்.

மன்னன் சொன்னது போலவே, மாலைச் சூரியன் ஒளி அதன்மீது வர்ணஜாலம் புரிந்து கொண்டிருந்தது.

அனைவரும் அதைப் பார்த்து வியந்து நின்றனர். மன்னனுக்குத்தான் எத்தனை கலையுணர்வு? நீலத் திரைக்கடல் ஓரத்தில் இக்கோவிலை அமைத்து அழியாப் புகழ் கொண்ட அவன் பெருமைக்குத்தான் அளவேது!

''கோவிலுக்குள் நுழையலாமா மல்லா?''

சிறுவன் தலையாட்டினுன்.

விண்ணிழி விமானம் உடையதாய்க் கடலை நோக்கி ஒரு கோவிலும், அதன்பின் சிறிய அளவில் மேற்கு நோக்கியபடி ஒரு விமானமும், இவை இரண்டுக்கும் இடையில் சற்றுத் தென் புறத்தில் நீண்ட சதுர வடிவில் ஒரு கோயிலுமாக இம்மூன்றும்

சேர்ந்து ஜலசயனம் என்ற பெயருடன் விளங்கிய அக் கோவிலுக்குள் அனைவரும் நுழைந்தனர்.

அந்தணர், மன்னனுக்குப் பூரண கும்பத்துடன் மரியாதை செய்து வரவேற்க, வெளியே மன்னரை வாழ்த்தி எழும்பிய பேரொலி, கடல் அலையை மிஞ்சி விண்ணைத் தொட்டது.

கிழக்கு நோக்கிய கோவிலில் பட்டை தீட்டப்பட்ட தாரலிங்கம் இருந்தது. அதன் பின்னால் பின்புறச் சுவரில் சோமாஸ் கந்த மூர்த்தியின் உருவம் அமைக்கப்பட்டிருந்தது. கருவறையின் முன்னே இடைகழி இருக்க, அதன் ஒரு சுவரில் திருமால் தேவியுடன் காட்சி தந்தார். மற்றொரு சுவரில் நான் முகன் தன் தேவியுடன் கம்பீரகமாக இருந்தார். வாயிலில் இரு காவலர் தமக்கே உரிய மிடுக்குடன் சிலையாக நின்று கொண் டிருந்தனர்.

மன்னன் உட்பட அனைவரும் சிவனை தரிசித்து விட்டு, அதன் சிற்பத் திறனை வியந்து திருமால் அனந்த சயனியாகப் படுத்து உறங்கும் காட்சி காண நீண்ட சதுர வடிவில் இருந்த கோயிலுக்குள் புகுந்தனர்.

சுமார் எட்டடி நீளத்தில் துயிலும் அரங்கன் முகத்தில்தான் என்ன அமைதி! வெளியே புயலெனச் சீறும் கடல் அலைகளின் பேரொலி... அதைப் பற்றிக் கவலைப்படாமல் மால்வண்ணன் படுத்துறங்கும் அந்த நிலை... ஆகா! நாள் முழுவதும் பார்த்துக் கொண்டிருக்கலாம் போன்று இருந்தது!

மன்னனுடன் வந்த மாமல்லை நகரத்தலைவன், இதைச் சுவைபட விவரிக்க இராசசிம்மன் அதைக் கேட்டுச் சப்தமின்றிச் சிரிக்கின்றான்.

அனைவரும் வெளியே வந்தனர். மேற்கு நோக்கியுள்ள கோயிலில் நுழைந்தனர். அங்கேயும் இலிங்கம்தான் பிரதிட்டை செய்யப்பட்டிருந்தது.

இராசசிம்மனுக்குத்தான் சைவமும் வைணமும் ஒன்று என்பதில் எவ்வளவு அக்கறை! முதலில் கடலை நோக்கியுள்ள கோவிலில் சிவன் தாரலிங்கமாகக் காட்சி தருகின்ருர். அதைப் போன்று மேற்கு நோக்கியிருந்த கோவிலிலும் இலிங்கம்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனுல் இரண்டுக்கும் நடுவில் உறங்கும் நிலையில் திருமால்... வைணவத்துக்குச் சைவம் பாதுகாப்பு என்பது போல...

"அங்கே பார்க்கலாமே!" என்று இராசசிம்மன் சுட்டிக் காட்டிய திசை பக்கம் அனைவரும் திரும்பினர்.

அங்கே

அமர்ந்த நிலையில் சிம்மம் ஒன்று செதுக்கப்பட்டிருந்தது.

அதன் சிற்பத்திறனைக் கண்டு வியந்து அருகே சென்றனர்.

அதன் வயிற்றில் சதுரமாக ஒரு குகைபோலக் குடையப் பட்டிருந்தது. அதில் கொற்றவை, பல கைகளையுடைய தேவி யாகப் பாய்ந்து வரும் நிலையில் செதுக்கப்பட்டிருந்தாள். சிம்மத்தின் உக்கிரத்தை அதன் முகத்தில் சில கோடுகளை வரைந்தே காட்டியிருந்தான் சிற்பி! காலடியில் குள்ளக்கணம் ஒன்றும், இயற்கையாகப் படுத்திருக்கும் கலைமான் ஒன்றும் மிக அழகாகச் செதுக்கப்பட்டிருந்தன.

எல்லோரும் அதை வியந்து நிற்க, மன்னன், விஜயவர்மன் பக்கம் திரும்பினுன்.

குறிப்பினுல் அதை உணர்ந்த அவன், தன்னருகில் நின்ற வீரனிடம் எதையோ சொல்ல, அவன் தலையாட்டி விட்டு வெளியே வேகமாகச் சென்ருன்.

"புறப்படலாமா மல்லா!"

"எங்கே தாத்தா?"

'என்ன சொல்லப் போகின்ருர்?' என்று அனைவரும் மன்னனைக் கவனித்தனர். இராசசிம்மன் சிரித்து விட்டு, "புறப்படும் இடம்... இரகசியமாகவே இருக்கட்டும்! அப்போது தான் அதில் புதுமையிருக்கும்! என்று சிறுவனுடன் முன்னே நடந்தான். கோயில் வாயிற்புறத்தில் இரதம் தயாராக நின்றிருந் தது இராசசிம்மன், பல்லவ மன்னனுடன் ஏறிக் கொண்ட தும், இரதம் புறப்பட்டது.

கடல் அலைகள், மன்னன் வரவு கண்டு அளவற்ற ஆனந் தம் அடைந்தவை போன்று கரையை மிக வேகத்துடன் வந்து மோதின.

கடற்காற்று இதமாக வீசியது. சாரதி சாட்டையைச் சொடுக்கினுன். குதிரைகள் காற்றைக் கிழித்துச் சிவ்வென்று பறந்தன.

விஜயவர்மனும், நகரப் பிரமுகர்களும் இரதத்தைப் பின் தொடர்ந்து குதிரையை வேகமாகச் செலுத்தினர்.

6

தென்னை ஓலையால் வேயப்பட்ட பெரிய பந்தல்...... அதற்குப் பக்க வாட்டில் அதே ஓலையால் மறைப்பை ஏற்படுத்தி யிருந்தனர். மிகப் பெரிய இடமாக அது பார்ப்பதற்கு இருந்தது.

மன்னன் இரதம், அதை நெருங்கியதும் நின்றது அதி லிருந்து இறங்கிய இராசசிம்மனை வரவேற்கப் பந்தலிலிருந்து யவன வணிகன் ஒருவன், குறுந்தாடியுடன் ஓடி வந்தான். அதற்குள் விஜயவர்மனும், மற்ற நகரப் பிரமுகர்களும் அங்கே வந்து சேர்ந்தனர்.

முப்பது முழ உயரத்தில் மூங்கிற் கொம்பு ஒன்றில், பல்லவ நாட்டுக்குரிய நந்திக் கொடி, கம்பீரமாகக் காற்றில் அசைந்து கொண்டிருந்தது. அதற்குக் கீழே யவன தேசத்துக் கொடி காற்றில் அசைய, இராசசிம்மன் அதைக் கவனித்துப் புன்முறுவல் செய்தான்.

முரசங்கள் முழங்கின... துந்துபிகள் எக்காளமிட்டன. யவன வீரர்கள் வேல்களைக் கையில் பிடித்தபடி வரிசையாக நின்றனர். விஜயவர்மனும், மற்றும் நகரப் பிரமுகர்களும் புடை சூழ, மன்னன் பல்லவமல்லனுடன் பந்தலை நோக்கி நடந்தான்.

"வர வேண்டும்! வரவேண்டும்!" என்று யவன நாட்டுப் பாணியில் குனிந்து மன்னனை வரவேற்றான் அந்த யவன வணிகன். பிறகு மன்னனை அழைத்துக் கொண்டு பந்தலுக்குள் நுழைந்தான். ஆற்று மணல் பரப்பி அதன் மீது புற்களைப் போட்டு வரிசையாகக் கலத்திலிருந்து இறக்கப்பட்ட குதிரைகள் கட்டப்பட்டிருந்தன.

"மாமன்னர் வருகை உள்ளபடியே எங்களுக்குப் பெருமை யைத் தருகின்றது!" என்றான் வணிகன்.

"ம்... அப்படியா?" என்ற இராசசிம்மன், வரிசையாகக் கட்டியிருந்த புரவிகளைப் பார்வையிட்டான்.

அப்போது—

கடைசியில் தனியாகக் கட்டப்பட்டிருந்த வெண் புரவி ஒன்று மன்னன் கவனத்தை ஈர்த்தது. திரும்பி விஜயவர்மனுக்கு அப்புரவியைச் சுட்டிக் காட்ட, அதற்குள் பல்லவமன்னன், "எனக்கு அந்தக் குதிரை வேண்டும்!" என்றான் உற்சாகத் துடன்.

உடனே யவன வணிகன், "அது உயர்ந்த சாதியைச் சேர்ந்தது மன்னா! தங்களுக்காகவே அதை இங்குக் கொண்டு வந்திருக்கின்றேன்!" என்றான்.

'இது வணிகத் தந்திரமா?' என்று அவனை உற்று நோக்க, அவன் முறுவல் செய்து நின்றான்.

இராசசிம்மன், தன் பார்வையை அந்த வெண் புரவியின் மீது ஓட்டியபோது, மற்ற குதிரைகளுக்கில்லாத சிறப்பம்சம் அதிலிருக்கக் கண்டான்.

விஜயவர்மன் மெல்லிய குரலில் "அருமையான குதிரையாகத்தான் இது இருக்கிறது!" என்றான்.

புன்முறுவலுடன் இவர்களைக் கவனித்தபடியிருந்த வணிகன், "மன்னா, இடையில் குறுக்கிடுவதற்கு என்னை மன்னியுங்கள்! சமீப காலமாக வந்து இறங்கிய புரவிகளில் இம்மாதிரிப் புரவி வந்ததேயில்லை. தூய வெள்ளை நிறத்தில் இதுபோன்ற குதிரைகள் உயர்ந்த இனத்தைச் சேர்ந்தவை! அது மட்டுமல்லாது இது அடிக்கடி தலையசைக்கிறது பாருங்கள்! இம்மாதிரி தலையசைப்பு சாதாரண இனத்தைச் சேர்ந்த புரவிகளுக்கு இருக்காது மன்னா!" என்றான்.

மன்னன், அதைக் கேட்டு மெல்லத் தலையாட்டி விட்டு, "இதன் விலை எத்தனை பொன்?" என்றான்.

வணிகன் பணிவுடனே, "விற்பதற்காகக் கொண்டு வரப் பட்டதல்ல!" என்றான்.

இராசசிம்மனுக்குத் திகைப்பேற்பட்டது.

"அப்படியென்றால்...?" என்று வணிகனைப் பார்த்தான்.

"தங்களுக்கு என் அன்புப் பரிசாக இதைத் தர விரும்புகின்றேன்!"

"பரிசா, இக்குதிரை நல்ல விலை போகுமே, பரிசு என்று ஏன் நல்ல தொகையை இழக்க விரும்புகின்றாய்?"

"அன்பிற்கு விலை இல்லை மன்னா!"

இராசசிம்மன், விஜயவர்மன் பக்கம் திரும்பினான்.

"பார்த்தாயா விஜயவர்மா! கடல்கடந்து இங்கு வாணிகம் செய்ய வந்திருக்கும் இவருக்கு என் மீது எவ்வளவு அன்பிருக்கிறது பார்த்தியா?" என்று சொல்லி முறுவலித்தபோது, "எனக்கு இக்குதிரை வேண்டும்! நான் இதில் சவாரி செய்யப் போகின்றேன்!" என்றான் பல்லவமல்லன்.

"நல்ல வேடிக்கை! நம் மல்லன் கூட இக் குதிரையில் சவாரி செய்ய விரும்புகின்றான்!" என்று சொல்லி மெல்லச் சிரித்தபோது, இராசசிம்மன் கைகளிலிருந்து விடுவித்துக் கொண்டு சிறுவன் குதிரையை நோக்கி ஓடினான்.

"என்ன இது?" என்று வியந்த வேந்தன், "மல்லா நில்! அது புதிய குதிரை! உனக்குப் பழக்கமில்லாதது!" என்றான்.

ஆனால் சிறுவன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாது மேலும் குதிரையை வேகமாக நெருங்க, "விஜயவர்மா, அவனைத் தடுத்து நிறுத்து!" என்றான்.

விஜயவர்மன், வேகமாகச் சென்று பல்லவமல்லனைத் தடுக்க அவன், மாட்டேன்! எனக்கு இந்தக் குதிரைதான் வேண்டும்! அதில் சவாரி செய்யப் போகின்றேன்!" என்று உரக்கக் கூவினான்.

அருகில் வந்த இராசசிம்மன், "என்ன மல்லா விபரீத விளையாட்டு? இது யவன தேசத்துக் குதிரை! மிக உயரம் வாய்ந்தது! அதுவுமல்லாமல் பழக்கப்படாத குதிரை.... இதன் மீது சிறுவனான நீ சவாரி செய்ய முடியாது! எங்களைப் போன்ற பெரியவர்களுக்கே இது பழக்கப்பட வேண்டும்!" என்றான்.

கையையும் காலையும் உதறி, "முடியாது இதில்தான் நான் சவாரி செய்யப் போகின்றேன்!" என்று சிணுங்க ஆரம்பித்தான்.

"மல்லா, நான் சொல்வதைக் கேள்! அரண்மனையில் நிறையக் குதிரைகள் இருக்கின்றன... அவற்றில் ஒன்று... ஏன் நான்கு குதிரைகள்... விஜயவர்மா, அரண்மனை போய்ச் சேர்ந்ததும் நான்கு குதிரைகளை மல்லனுக்கு ஒதுக்கிவிடு இப்போது இது வேண்டாம்!" என்ருன்.

ஆனுல் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் பல்லவ மல்லன், "எனக்கு இந்தக் குதிரை தான் வேண்டும்!" என்ருன்.

"என்ன இது? தொல்லையாகப் போய் விட்டது!" என்று மன்னன் நிமிர்ந்து பார்க்க, அனைவரும் வேந்தனைச் சங்கடத் துடன் கவனித்தனர்.

அச்சமயம் விஜயவர்மனை விலக்கிக் கொண்டு குதிரையிடம் செல்ல மல்லன் முயற்சி செய்தான்.

"சொல்வதைக் கேளுங்கள்! அங்கே போகக் கூடாது!" என்று விஜயவர்மன் கூற, அதைப் பற்றிக் கவலைப்படாது அவன் போக முயற்சி செய்ய, உடனே இராசசிம்மன், "மல்லனைத் தேருக்கு அழைத்துச் செல்!" என்று வீஜயவர்மனுக்குக் கட்டளை இட்டான்.

அவன், மல்லனை அப்படியே இரு கைகளாலும் தூக்கித் தேருக்கு அழைத்துச் செல்ல, "மாட்டேன்! நான் தேருக்கு போக மாட்டேன்!" என்று கைகால்களை உதறி அடம்பிடிக்க, அதைப் பற்றிக் கவலைப்படாமல் விஜயவர்மன், அவனை அப்படியே மேலுக்குத் தூக்கித் தேரை நோக்கி நடந்தான்.

தன் முயற்சி தடைப்படும் போலிருக்கவே சிறுவன் 'ஹோ! வென்று அழ ஆரம்பித்தான். இராசசிம்மன் குதிரைகளைப் பார்வையிடுவதை நிறுத்தி விட்டுத் தேரை நோக்கி நடந்தான்.

அரசனையும், மற்றும் திரளாக வந்த நகரப் பிரமுகர்களையும் கவனித்த யவன வணிகன், இன்று தனக்கு நல்ல வேட்டை

தான்!' என்று மகிழ்ச்சியுடன் இருந்தான். ஆனால் எல்லாம் இந்தச் சிறுவன் செய்த அமர்க்களத்தினால் பாழாகி விட்டது! வருந்தியபடி மன்னனை வழியனுப்பத் தேரை நோக்கிச் சென்றான்.

தேரில் அவனை ஏற்றுவதற்குள் விஜயவர்மனுக்குப் போதும் போதும் என்றாகி விட்டது. அதற்குள் அவன் செய்த அமர்க்களம், அப்பகுதியையே கலக்கி விட்டது.

மன்னன் தேரில் அமர்ந்து, விரைந்து தேர் போகட்டும்!'' என்று சாரதிக்குக் கட்டளையிட்டான். இரதம் பறந்தது.

பின்னால் நகரப் பிரமுகர்கள் தம்தம் புரவியில் அமர்ந்தனர். சற்று நேரத்திற்கெல்லாம் மன்னர் வருகையில் கலகலப்புக் குள்ளாகிச் சிறுவனின் பிடிவாதத்தால் அமர்க்களப்பட்ட அந்த இடம், இப்போது மிக அமைதியாகி அவ்வப்போது எழுந்த குதிரைகளின் கனைப்பு ஒலியால், அந்த அமைதியில் லேசான சலனம் ஏற்படச் செய்தது.

மிகச் சோர்வுடன் யவன வணிகன், எல்லாம் பாழாகி விட்டதே என்ற கவலையுடன், இருக்கையில் வந்து சலிப்புடன் உட்கார்ந்தான்.

அப்போது —

அந்தத் தற்காலிகப் பந்தலுக்குப் பின்னாலிருந்த மரத் தினின்று ஒரு உருவம் வெளிப்பட்டது.

தொலைவில் கேட்டுக் கொண்டிருந்த இரதத்தின் ஒலியும், அதையொட்டி வேகமாகச் சென்ற புரவிகளின் ஓசையும் மெல்லத் தேய்ந்து கொண்டிருந்தன. அதையே கவனித்த அவ்வுருவம், 'நல்ல சந்தர்ப்பம்! இன்றே முடித்து விடலாம்!' என்று சொல்ல அதன் கண்களில் குரூரம் மின்னியது.

அவ்விதம் சென்ற உருவம்தான் பல்லவமல்லனைக் கடத்துவதற்காகப் போய்க் கொண்டிருக்கும் கயல்விழி!

7

இராசசிம்மனின் மாமல்லபுர அரண்மனை! சிறுவன் பல்லவ மல்லன் விசித்து விசித்து அழுது கொண்டிருந்தான். தங்கப் பூணிட்ட பிரம்பு ஒரு மூலையில் கிடந்தது. இரண்டாவது அடுக்கு உப்பரிகையின் ஓரமாக வந்து நின்று, தூணில் சாய்ந்தபடி தூரத்தில் தெரிந்த கடலை வெறித்து நோக்கியபடி இருந்தான் மன்னன் இராசசிம்மன்.

'வந்து ஒரு நாழிகைக்கு மேல் ஆகிறது! இன்னும் மல்லன் அழுகையை நிறுத்தாது பிடிவாதம் பிடிக்கிறானே என்ன பண்ணலாம்? என்ற சிந்தனையோடு தூணில் சாய்ந்தவாறு நின்றிருந்த மன்னனின் கவனத்தைத் திருப்பியது அங்கே கேட்ட காலடிச் சத்தம்!

திரும்பினான்.

மிக யௌவனமும் சுந்தரச் சிவப்பும் நிரம்பிய வானத்திலிருந்து இறங்கி வந்த விண்மகளைப் போன்ற அழகுடன் இளமை பூரிக்க நின்று கொண்டிருந்தாள் ஒரு பெண்.

'ஓ... கயல்விழி!... அண்மையில் பணிப் பெண்ணைச் சேர்ந்தவள்... எதற்கு இப்போது வந்தாள்! —கேள்வியாக மன்னன் வாயிலிருந்து புறப்பட்டது.

தன் முத்துப்பல் வரிசை பால் நிலா போன்று ஜொலிக்கப் பணிவுடன் சொன்னாள்.

"தங்களைப் பல்லவமன்னன் மிகவும் தொல்லைப்படுத்தி விட்டான் என்று நினைக்கிறேன்."

"ஆம் கயல்விழி! எத்தனையோ பிரச்சனைகளைச் சமாளித்த எனக்கு இது பெருந் தொல்லையாகத்தான் இருக்கிறது!"

"தாங்கள் அனுமதித்தால் மல்லனின் அழுகையை நிறுத்திச் சிரிக்கச் செய்ய என்னால் முடியும்!"

"என்னது?" — வியப்புடன் இராசசிம்மன் திரும்பினான். கயல்விழியை ஆச்சரியத்துடன் நோக்கினான். ஆனால் அவள், எவ்வித பரபரப்பும் காட்டாது செவ்விதழ்களில் முறுவலை மட்டும் உதிர்த்து நின்றாள்.

உன்னால் முடியுமா?" "மன்னன் கேள்வியில் ஐயம் மேலோங்கியது.

அவள் அழுத்தமாகத் தலையசைத்து விட்டுத் திரும்பவும் முறுவல் செய்தாள்.

அப்படியென்றால் உனக்குப் பரிசுதான் தரவேண்டும்! எங்கே மல்லனைச் சாந்தப்படுத்து பார்க்கலாம்"

"கொஞ்சம் தனிமையில் மல்லனை எடுத்துப் போக அனுமதியுங்கள்"

"ஆகா, தாராளமாக! எனக்கு வேண்டியது அவன் பிடிவாதம் போய் மகிழ்ச்சியாக என்னைத் 'தாத்தா!' என்று கூப்பிட வேண்டும்!"

"அப்படியே செய்கின்றேன்! மன்னா!"

மல்லன் அருகில் சென்று கயல்விழி அவனைத் தூக்கினாள்.

சிணுங்கல் அதிகமாகியது.

'என்ன இருந்தாலும் கயல்விழி பெண்... ஒரு வேளை அவனைச் சமாதனப்படுத்தி விடலாம் என்று நம்பிக்கையுடனே, அவன் பண்ணும் அழிச்சியாட்டத்தைக் கவனித்த மன்னனுக்கு இவள்கூடச் சமாதானப் படுத்துவது சந்தேகம் தான் என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

பலவந்தமாக அவனைத் தூக்கிக் கொண்டு கயல்விழி அப்புறம் செல்ல, மன்னன் செவிகளில் அவள் சமாதானப் படுத்துவதற்காகச் சொன்ன சொற்கள் செவியில் விழுந்து கொண்டிருந்தன. "இன்று இரவு முழுவதும் இதே கூத்துத் தான்!" என்று தூரத்தில் தெரிந்த கடல் அலைகளைக் கவனித்தான். அவை நில வொளியில் வெள்ளிப் பாளங்களாய் மினனிக் கொண்டிருந்தன.

சிலநொடிகள் சென்றன. பல்லவமன்னன் சிணுங்கல் நின்றுவிட்டது என்பதற்கு அடையாளமாக அவ்விடம் மிக அமைதியாகப் போனது. மன்னன் கண்கள் அகல விரிந்தன. புருவங்கள் மேல் நோக்கி ஏறின, 'உண்மையிலேயே சாமர்த்தியம் நிறைந்த பெண்தான்' என்று மனத்திற்குள் வியந்து, "கயல்விழி!" என்று உரக்கக் கூப்பிட்டான்.

பதிலில்லை.

திரும்பவும் குரல் கொடுக்கப் பதில் வராது போகவே, பல்லவமல்லனுடன் கயல்விழி சென்ற பக்கம் நோக்கி வேகமாக நடந்தான்.

திருப்பு வாட்டத்தில், கீழ்பகுதிக்குச் செல்வதற்காக மரத்தில் செய்யப்பட்ட படிகளில் அவள் இறங்கிக் கொண் டிருந்தாள் பல்லவமல்லனுடன்.

மேலேயிருந்தபடி, "என்ன கயல்விழி, எங்கே போகிறாய்?" என்றான்.

கயல்விழி ஒரு கணம் திடுக்கிட்டு, "ஓ மன்னரா என்று சமாளித்து திரும்பவும் மேல் நோக்கிப் படியேறினுள். அச் சமயம் பல்லவமல்லன் பெட்டிப் பாம்பாய் அவளின் வேய்த் தோள்களில் சாய்ந்து கொண்டு, மன்னனை எவ்விதச் சலனமும் இல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

மேலேறி வந்த கயல்விழியிடமிருந்து அவனைப் பெற்றுக் கொள்வதற்காகக் கைகளை நீட்டி, "வா மல்லா!" என்று அன்புடன் அழைத்தான் இராசசிம்மன்.

'முடியாது' என்று தலையசைத்து விட்டுக் கயல்விழியைப் பார்க்க, அவள், "போ மல்லா!" என்று சொல்ல, மனமின்றி மன்னன் தோள்களில் சரிந்தான்.

'கொஞ்ச நேரத்தில் அழுகையை நிறுத்தி விட்டாளே, பாராட்டுக் குறியவள் தான்!' என்று மனதிற்குள் எண்ணியவாறு "மல்லனின் அழுகையை நிறுத்தியதற்கு மகிழ்ச்சி! உனக்கு என்ன பரிசு வேண்டும்?" என்று கேட்டான் வேந்தன்.

"மன்னர் எதைத் தந்தாலும் நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன்! ஆனல் பரிசு பெறும் அளவுக்குப் பெரியதாக நான் ஒன்றும் செய்துவிடவில்லை என்பது என் தாழ்மையான கருத்து!"

"அப்படியா!" என்ற இராசசிம்மன், "நன்ருகத்தான் உரையாடுகிருய், இம்மாதிரி புத்திக் கூர்மையுள்ள பெண்கள் கண்டிப்பாக ஊக்குவிக்கப் படவேண்டும்!... அந்த ஊக்குவிப்பு, உரிய நேரத்தில் உனக்குக் கிடைக்கும்!" என்ருன் புன்முறுவலுடன்.

"நன்றி மன்னு!" என்று கூறிவிட்டு மடமடவென்று மரப்படிகளில் இறங்கி கீழே போனுள்.

இரவு!

விண்மீன்கள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. பால் நிலவு மேற்குநோக்கி மெல்லச் சரிந்து கொண்டிருந்தது. கடற்காற்று உஸ்ஸென்று ஓசையுடனே வீசிய வண்ணமிருந்தது. யவன வீரர்களின் இரவுகால எச்சரிக்கையொலி நடுநடுவே அந்த இரவின் அமைதியை அழிப்பது போலக் கேட்டுக் கொண்டிருந்தது. அதற்கு எதிரொலியாக ஆந்தைகளின் அலறலும் கேட்டது. இது போதாதென்று நரிகளின் ஊளைக் குரல் வேறு!

இரண்டாவது அடுக்கு உப்பரிகையின் நடு அறையில் ஒரு மூலையில் மங்கையொருத்தியின் கையிலிருந்த விளக்கு, காற்றில் அணைந்து விடுவதுபோலப் பலமாக ஆடி இறுதியில் ஜுவாலை யுடன் பிரகாசிக்கலாயிற்று. எவ்வளவு நேரம் அந்த மங்கை விளக்குடன் நின்று கொண்டிருப்பாள்? என்று வியப்புக் கொள்ளும் அளவுக்கு உலோகத்தால் ஆன அச்சிலை, உயிருள்ள பெண்போலக் காட்சியளித்தது.

அது அணைந்து விடுவதுபோல் பலமாக ஆடி, அதன் ஜுவாலை குறையும்போது, அந்த அறை கண் சிமிட்டும் நேரம் இருளில் ஆழ்ந்தது.

மன்னன் பஞ்சணையில் தன்னை மறந்து உறங்கிக் கொண் டிருந்தான். பக்கத்தில் பல்லவமல்லன் படுத்திருந்தான்.

அச்சமயம்...

யாரோ வரும் காலடியோசை. படுத்திருந்த சிறுவன் பல்லவமல்லன் கண்களைத் திறந்தான். அக் காலடிச் சப்தம் இச் சிறுவனை நோக்கி வருவது போலிருந்தது. மிக நிசப்தமான, அந்த வேளையில் காற்றின் உஸ்ஸென்று ஓசையைத் தவிர, வேறு எதுவும் கேட்காத அத் தருணத்தில் அச்சமூட்டும் வகையில் இருந்தாலும் சிறுவன் அதைக் கேட்டு மகிழ்ச்சியே அடைந்தான் என்பதை, அவன் முகம் மிகத் தெளிவாகக்

காட்டியது. எழுந்து உட்கார்ந்தான். அச்சமயம் பார்த்து விளக்கொளி காற்றின் வேகத்தால் அணைந்து விடுவது போன்று அலைபாய, அந்த அறை முழுவதும் ஒரு நொடிப் பொழுது பாதி இருளும் பாதி ஒளியுமான நிலைக்கு ஆளானது.

சிறுவன் கண்களைச் சுற்றிலும் ஓட்டி ஒலி வந்த திசைப் பக்கம் பார்த்தான். "பல்லவமல்லா!" என்று கூப்பிடும் ஓசை; மிக மெலிதாய் அவன் காதில் விழுந்தது.

அந்த அரை இருளில் அக்குரலைக் கேட்டு அவன் அச்சமுற வில்லை. மாறாக மகிழ்ச்சியுற்றான். திரும்பி இராசசிம்மனைப் பார்த் தான். மன்னனின் ஆழ்துயில் அவனுக்குத் திருப்தியைத் தரவே திரும்பவும் குரல் வந்த பக்கம் தன் கண்களை ஓட்டினான்.

அப்போது. கூகை பயங்கரமாக அலறியது. அதற்குப் பதி லடி கொடுப்பது போல நரிகளும் பலமாய் ஊளையிடத் துவங்கின. இவை இரண்டும் செய்த அமர்க்களத்துக்குப் பயந்தோ என் னவோ எல்லாக் காற்றும் ஒரு முகமாகத் திரண்டு, வேகமாக இரண்டாவது உப்பரிகையை நோக்கி வீசியது. அந்த வேகம் தாளமாட்டாது மங்கையின் கையிலிருக்கும் விளக்கும் பொட் டென அணையச் சிறுவன் இதயம் பயத்தினால் பட படவென்று அடிக்கத் துவங்கியது. அதற்கு ஏற்றாற் போல் "மல்லா!" என்ற குரல் இப்போது மிகத் தெளிவாய்க் கேட்டது.

தன்னைக் கூப்பிடுகிறார்கள்!... விளக்கு நின்று இருள் சூழ்ந்துவிட்ட அந்தச் சமயத்தில் தன்னைக் கூப்பிடுகிறார்கள். அச்சத்தின் சாயல் அந்த இளம் முகத்தில் மெல்லப் பரவ ஆரம்பித்தது.

'ஏன் தயங்குகிறாய்? சீக்கிரம்!...' இதுவும் அவன் செவி களில் விழுகிறது.

இப்போது அவன் மனதில் பயம் போய்க் குழப்பம் தான் எஞ்சி நின்றது. குரல் சொன்னபடி கேட்பதா?...... அல்லது...

அல்லது... என்று திரும்பிக் கவனித்தான். அந்நேரம் பார்த்து மன்னன் புரண்டு வலப்பக்கம் திரும்பிப் படுக்க, செய்வது புரியாமல் பெருமூச்சொன்றை விட்டான் சிறுவன் பல்லவமல்லன். 'கிரீச்' மன்னன் புரண்டதின் விளைவாகப் பஞ்சணை அவ்விதம் கிரீச்சிட்ட ஒலி மெல்லியதாக இருந்தாலும், அமைதியான அந்த இரவில் சிறிது பலமாகவே அந்த அறையெங்கும் ஒலித்தது.

அவ்வோசையைக் கேட்டதாலோ என்னவோ இதுவரை மல்லனைக் கூப்பிட்ட குரலும் சட்டென்று நின்றுவிட்டது.

மல்லன், கண்களைக் கசக்கிச் சுற்றும் முற்றும் பார்த்தான். ஒரே இருள் — வெளியே விசாலமான கூடத்தில் ஒரு பக்கம் நிலவின் ஒளி தெளிவாக விழுந்து கொண்டிருந்தது. அதுவும் ஒரு நொடிதான்... அந்த ஒளியும் எங்கிருந்தோ வந்த கரு மேகத்தால் மறைந்து போக, இப்போது அந்த உப்பரிகை முழுவதுமே இருட்டு மயமாகி விட்டது. என்ன செய்வது?

இப்போது மன்னன் உறங்கி விட்டான் என்பதை உறுதிப்படுத்தி விட்டது போல, அந்தக் குரல், திரும்பவும் "மல்லா!" என்று அழைக்க, அவன் பஞ்சணையிலிருந்து கீழிறங்கிக் குரல் வந்த பக்கம் நோக்கிச் சென்றான்.

"என்ன இவ்வளவு நேரம்?"— அதற்குப் பிறகு ஒன்றும் கேட்கவில்லை... கொஞ்ச நேரம் கழிந்து ஏதோ அபசகுனம் நடந்து விட்டது என்பதை உணர்ந்த காற்று மட்டும் மனம் தாளாமல் மிக வேகமாக வீசிச் சாளரத்தின் கதவுகளை படீர் படீர் என்று பலமாக அறைய, அந்த ஒலியைக் கேட்டு, மன்னன் கண் விழித்தான்.

நடந்துவிட்ட அபசகுனத்தை மன்னனுக்கு அறிவுறுத்துவது போன்று ஆந்தையும் பலமாக அலறியது.

"சட்" என்ன இது?

விளக்கு அணைந்து போய்விட்ட.தா? 'என்று தன் பக்கத்தில் படுத்திருந்த பல்லவமல்லன் பயப்படப் போகின்ருன் என எண்ணி அவனை அணைக்கக் கைகளைத் துழாவினுன். வெறும் பஞ்சு மெத்தைதான் கைகளுக்குத் தட்டுப் பட்டது.

'தூக்கத்தில் புரண்டு கீழே விழுந்து விட்டானே?' துணுக் குற்ற மன்னன் சட்டென்று எழுந்து 'யாரங்கே?' என்று உரக்கக் குரல் கொடுத்தான்.

பதிலில்லை.

எழுந்து பலமாகக் குரல் கொடுத்தான். சயன அறையில் வெளிப்புறத்தில் மரப்படிகள் சமீபம் உருவிய வாளுடன் இருந்த இருவீரர்கள், 'என்ன மன்னா?' என்று ஓடி வந்தனர்.

"எங்கே போய் விட்டீர்கள் ஒரே இருளாக இருக்கின்றது! தீப்பந்தம் கொண்டுவா!" என்று கட்டளையிட்டான். அடுத்த நொடியே தீப்பந்தத்துடன் வந்தான் ஒரு வீரன்.

அந்த ஒளியில் பஞ்சணையும் தரையும் வெறுமையாய்க் காட்சி தந்தன. மன்னனுக்குப் பக்கென்றது.

"என் பக்கத்தில் படுத்திருந்த பல்லவமல்லன் எங்கே?' என்று அந்த இரண்டாம் உப்பரிகையே அதிரும்படி கேட்க, வீரர்கள், என்ன செய்வது என்று புரியாமல் திகைத்து நிற்க, கீழ்ப் பகுதியில் படுத்திருந்த விஜயவர்மனை உலுக்கி எழுப்பியது அம் மன்னன் கேள்வி.

'என்ன என்ன' என்று அவ்வரண்மனையே விழித்து எழுந்தது. அம்மாளிகை முழுவதும் தீப்பந்தங்கள் ஒளியால் நிரம்ப அனைவரும் பல்லவமல்லனை மூலை முடுக்கெங்கும் தேட லாயினர்.

"வெண்ணிலவு மறைந்தது. விண் மீன்கள் ஒளிந்தன. வானம் இருண்டது. மல்லன் மாயமாய் விட்ட துயரச் செய்தி

யினைக் கேட்டதாலோ என்னவோ மேகங்கள் அதைத் தாங்க மாட்டாது மழைத் தூறல்களாய் சட சடவென்று பூமியில் இறங்கின. பூ மகளும் தன் புவி மகனைக் காணாத வருத்தத்தால் நீர்த் தாரைகளை கன்னத்தில் சரிய விடுவது போன்று, பூமியில் இறங்கிய மழைத் தூறல்கள் தரையில் உருண்டு ஓடின.

விஜயவர்மன், கைகளைப் பிசைந்து செய்வதறியாது... திகைத்து நிற்க, சோகமே உருவாய் நின்ற மன்னன் அவனை நோக்கினான். பளிச்சென்று வானில் மின்னல் தோன்றியது.. மன்னனின் கோபப் பார்வை போல! அதைத் தொடர்ந்து இடியோசை. வேந்தன் வருத்தத்துடன் சொன்னான்.

"விஜயவர்மா, எத்தனை ஆட்கள், எத்தனை காவல் இருந்தென்ன... நொடியில் அனைவரையும் ஏமாற்றி விட்டு அந்த வஞ்சகி, என் மல்லனுடன் மறைந்து விட்டாளே?... நான் பல போர் கண்டவன்... பல படை கண்டவன் என்று இனி யாரும் தம்பட்டம் அடிக்க முடியாது. எல்லாவற்றையும்... அந்தச் சிறுபெண் மிஞ்சி விட்டாள்! இனி மல்லனை நான் எப்போது காண்பேன்! பல்லவ குலத்துக்கு அவன் கொழுந்தாக இருந்தான் என்று இறுமாந்திருந்தேனே... எல்லாம் பாழாய்ப் போய் விட்டதே!" என்ற மன்னனின் கண்கள் கலங்கின. திகைத்து நின்ற விஜயவர்மன், நிமிர்ந்து நின்றான் உறுதியாக.

"பல்லவ மன்னன் மீது ஆணை... சிறு நாகமென வஞ்சித்து விட்டு மல்லனுடன் மாயமாய் விட்ட அந்த நஞ்சியினும் கொடியாளைக் கண்டுபிடித்து அவள் தலையைக் கொய்து திரும்பாவிடில், நான் இம்மண்ணில் பிறந்த பெருமையை இழந்து நாயினும் கேடாய்ப் பேயினும் கடையேனாய் அழிந்து ஒழிவேன்! இது சத்தியம்!"

அதை உறுதி செய்வது போன்று வின்னும் தொடர்ந்து இரண்டு, மூன்று முறை இடித்தது.

உருவிய வாளை உறையிலிட்டு, "விடை கொடுங்கள் மன்னா!" என்று தலைவணங்கி நின்றான்.

"வெற்றியோடு திரும்பு விஜயவர்மா! எல்லாம் வல்ல அந்த ஈசன் உனக்குத் துணையிருப்பான்!"

இதுவரை தூறலாக இருந்த மேகம், பெரு மழையாகப் பெய்யத் தொடங்கியது.

"கொண்டு வாருங்கள் என் புரவியை!" என்று கட்டளையிட்டான் விஜயவர்மன். இந்த மழையிலா என்று வீரன் திகைத்து விஜயவர்மனைப் பார்க்க, அவன் இருந்த கோபம் கண்டு ஒன்றும் பேசாது வேகமாகப் புரவியை அழைத்து வர ஓடினான்.

முதலில் வர மறுத்து... முரண்டு பிடித்த புரவி, தன் தலைவன் போக்குணர்ந்து அப் பெருமழையில் கம்பீர நடை போட்டு வந்து நின்றது.

"துணைக்கு வீரர்களை அழைத்துப் போ விஜயவர்மா!"

அவன் "ஆகட்டும் வேந்தே!" என்று நின்ற வீரர்களில் இருவரை மட்டும் அழைத்தான்.

'போதாது பத்துப் பேரையாவது அழைத்துச் செல்!" என்ற மன்னனின் கட்டளைப்படி, பத்து வீரர்களுடன் அப்பெரு மழையில் புரவியைச் செலுத்தினான் விஜயவர்மன்.

8

விஜயவர்மன் நிலைகண்டு மேகத்துக்கு இரக்கம் வந்து விட்டது போலும்! இதுவரை பெரு மழையாய்ப் பெய்த மழை தூறலாய் மாறிய அதே சமயம், அத்தூறல் கடற்கரைக்கு மூன்று காததூரம் தள்ளிப் பெருமழையாகப் பொழிந்துக் கொண்டிருந்தது.

இனிமேல் குதிரையை மழையில் செலுத்த முடியாது என்ற நிலைக்கு வந்து அதனுல் எங்கேயாவது தங்க இடம் கிடைக்குமா என்று பல்லவமல்லனுடன் சுற்றும் முற்றும் பார்த்த அந்த உருவத்துக்கு அந்த இருளில் பாதையின் ஒதுக்குப்புறமாக ஓங்கி வளர்ந்த அரசமரத்தின் பக்கத்திலிருந்த பாழடைந்த மண்டபம் தென்பட்டது.

வேகமாக புரவியை அங்கே செலுத்தி, அதை மரத்தின் கீழே நிறுத்தித் தோளில் மயக்க நிலையுடன் சாய்ந்திருந்த சிறுவன் பல்லவமல்லனுடன் அவ்வுருவம் மண்டபத்திற்குள் நுழைந்தபோது மண்டபமே அதிர்வது போன்று பெரிய இடி இடித்தது.

மயக்க நிலையிலிருந்த சிறுவன்கூட இலேசாய் உடலைக் குறுக்கி அந்த இடியில் ஏற்பட்ட அதிர்ச்சியின் விளைவைக் காண்பித்தான்.

தோளில் இருந்து அவனைக் கீழிறக்கிச் சுவர் ஓரமாகச் சாய்த்த பின்பு, பெருமூச்சு விட்டுத் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டது அவ்வுருவம். மழையில் நனைந்து விட்ட தன் உடைகளைப் பிழிவதற்காக களைந்த போதுதான் அந்த உருவத்திற்குரியவள் கயல்விழி என்பது வெளிச்சமாகியது. ஏறக்குறைய மேலாடைகளைக் களைந்து, உள்ளாடைகளுடன் நின்ற அவள் எழிலுக்கு எழிலாசியாய்த் தோன்றினுள். இத்தகையவளிடமா சிறுவனைக் கடத்தும் அளவுக்குத் துணிவு இருக்கிறது?

பௌர்ணமி சமயம் பூரண சந்திரன் எத்தகைய ஜொலிப்புடன் இருக்குமோ, அத்தகைய ஜொலிப்பு அவள் மேனியில் இருந்தது. கரிய மேகம் நிலவை மறைத்தில்கூட, அந்த மறைப்பிலும் அதன் ஜொலிப்பு தனி அழகுடன்தான் இருக்கும். அதுபோன்று அவளின் அழகிய மேனி அந்த மண்டலத்தில் சூழ்ந்து நின்ற இரவின் இருளிலும் பூரணப் பொலிவுடன் இருந்தது.

அவள் கண்கள் மின்னலாய்ப் பளிச்சிட்டன. புருவம் வானவில்லாய்க் காட்சியளித்தது. சிவந்த அந்த இதழ்கள் அடிவானத்துச் சிவப்பாய்ப் பளிச்சிட்டன, பற்கள், காட்டு மல்லிகை அரும்புகளாய் இருந்தன. அந்த வலை கழுத்திலும் அதற்கும் கீழே அழகாய்ச் சரிந்த தோள்களிலும் எவ்வித மணப்பும் இல்லை என்று வருந்திய மழைத்துளிகள், முத்து முத்தாய்த் துணியைப் போர்த்தது போல் அவற்றின்மேல் அரும்பி நின்றன.

மிகுந்த ஈரமாயிருந்ததால் மார்க்கச்சையை அவள் நீக்கிப் பிழிய முயல, இதற்காகவே இதுவரை காத்திருந்ததுபோல் வானமும் தன் மின்னலாகிய ஒளியின்மூலம் அவள் அழகை இரசிக்க விரும்பிப் பளிச்சென்று வெளிச்சம்போட, அப்போது தான் கயல்விழிக்கும் தெரிந்தது அந்தப் பாழ்மண்டடத்தில் இன்னொரு உருவமும் இருக்கிறதென்று!

விரைந்து செயல்பட்ட அவள் கைகள் மேலழகை மறைக்க முயன்றன. அது முடியாது என்பது போன்று அவளின் கமல மொட்டுகள் அந்த மறைப்பிற்குள் அடங்க முடியாது. மேலும் எழில் கூட்ட, தன்னையும் மீறி இன்னொருவனா என்று அச் சமயம் பொறாமைப்பட்ட வானமும் சடக்கென்று தன் ஒளியினை மறைத்துக் கொண்டது.

ப அந்த ஒரு நொடி! அதற்குள் ஆயிரம் ஜாலம் காட்டி
ட விட்டதே அவளின் மேலழகுகள்!

மூலைப்பக்கம் இருந்த அவ்வுருவமும் அந்த ஜாலங்களை யெல்லாம் பார்த்து விட்டேன் என்பது போல அர்த்த புஷ்டியுடன் சிரித்தது.

இன்னொரு ஆண்மகன் அம்மண்டபத்தில் இருப்பது தனக்குத் தெரியாமல் போய்விட்டதே என்று இதுவரை வருத்தமுற்றபடி இருந்த கயல்விழி, அச்சிரிப்பினைக் கேட்டு கோபமுற்றாள்.

“பெண்கள் ஆடை மாற்றும்போது ஆண் மகன் இருக்கின்றேன் என்று சொன்னுல் குறைந்து விடுமோ!” என்ருன்.

அதற்கு அந்த மூலேயிலிருந்த உருவம் பலமாகச் சிரித்து, “எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை இழப்பதற்கு நான் தயாராக இல்லே கயல்விழி!”

“நல்ல சந்தர்ப்பம் என்று, கண்களேத் திறந்து கொண்டிருந்தாயாக்கும்!”

அவன் சொன்ஞன் :

“இங்கு நிலவும் இருளே ஊடுருவும் சக்தி என் கண்களுக்கில்லே கயல்விழி. ஆனுல் இயற்கையே அம்மாதிரி ஒரு சூழ்நிலேயை எனக்கு அமைத்துத் தரும்போது அதை நழுவ விட நான் என்ன அறிவிலியா”

“உயரத்தில் கொம்புத்தேன் இருக்கிறது அதை அடையலாம் என்று ஆசைப்பட்ட முடவன் கதை தெரியுமா உனக்கு?”

“நான் நிச்சயம் அம்முடவன் இல்லே. எனக்குக் கயல்விழியைக் கடிமணம் புரிய அருகதையுண்டு! உரிமையும் உண்டு!”

“அந்த அருகதையும் உரிமையும் என்ஞல் மறுக்கப்பட்டு விட்டது!”

“நீ பெண் பிள்ளே...உன்னேச் சிறையெடுத்து மணமுடிக்க நீண்ட நாள் ஆகாது!”

“அவ்வளவுதான் இந்தக் கயல் விழியை நீ எடை போட்டது! சிறையெடுக்க உனக்கு வலிமை இருந்தால், எனக்கு உன்னேச் சிறைபிடிக்க வலிமை இருக்கிறது!”

எதனுல், கண்களால்தானே? அவளுக்கு ஆத்திரம். மிகப் பற்களைக் கடித்தாள். "என் குத்துவாளால்தான் உன் வாழ்வே மூடியப்போகிறது!"

"இருக்கட்டுமே, உன்னுல் வாழ்வு கிடைக்காத எனக்கு, என் மாமன் மகளின் வாளே அந்தப் புண்ணியத்தைத் தேடிக் கொண்டால் என் பாக்கியம்தான்!"

"மூடு வாயை!"

"மூடிவிட்டேன் கயல்விழி உனக்காக!" கயல்விழி ஆடையைத் திருத்திக்கொண்டாள். இடையில் சொருகியிருந்த வாளை உருவி அவனை நோக்கி நெருங்கினுள்.

அவன் அதற்காகக் கவலைப்படவில்லை.

"இந்த வாளின் கூர்மையும், உன் விழிகளின் கூர்மையும் எனக்கு ஒன்றுதான்! இது என் உடலைத்தான் காயப்படுத்தும்! ஆனுல் அந்த விழிகளோ...அப்பப்பா!...அதைவிட இந்த வாளையே நான் ஏற்றுக் கொள்கின்றேன்!" என்று நெஞ்சை நிமிர்ந்தினுன். அப்போது குதிரைகளின் குளம்பொலிகள் கேட்கத் துவங்கின.

என்ன அது?—க்ஷண நேரத்தில் சடக்கென்று வாளை இடையில் செருகி மண்டபச் சுவரில் இருந்த பல்லவ மல்லனைத் தோளில் சாய்த்துக்கொண்டு, "சாக்கிரதை அவர்கள் வந்து கேட்டால் என்னைப்பற்றி எதுவும் சொல்லக்கூடாது!" என்று குதிரையில் தாவி இருளில் மறைந்தாள்.

அவள் போனதிக்கையே அவன் அசையாது பார்த்து விட்டுத் திரும்பவும் மூலையில் சாய்ந்து கொண்டான். அப்போது குலம்பொலி மிக நெருக்கத்தில் கேட்க ஆரம்பித்தது.

சாய்ந்தவன் நிமிர்ந்து உட்கார்ந்தான். இருளில் சரியாகப் புலப்படாததால் கண்களை இடுக்கிப் பார்க்க, அச்சமயம் பார்த்து வானத்தில் மின்னல் ஒன்று தோன்றியது. புரவிகளின் எண்ணிக்கை ஆறு ஏழுக்கு மேலிருக்கலாம்:

மழையும் கனத்துப் பெய்யவே அவர்களும் ஒதுங்குவதற்காக இங்கு வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்தான்.

கயல்விழி ஏன் ஓட வேண்டும்? அது அவனுக்குப் புரியாத புதிராக இருந்தது. தோளில் யாரோ ஒரு சிறுவனைக் கொண்டு போகிறாள்...பார்த்தால் அந்தச் சிறுவன் அரச குடும்பத்தைச் சேர்ந்தவன் போன்று இருக்கின்றான்...எதற்காக? பைரவருக்குப் பலி தரவா?...இதெல்லாம் மாமன் நாகபைரவன் ஏற்பாடா? வருகிறவர்கள் இச்சிறுவனைத்தான் தேடி வருகின்றார்களா?... இவர்கள் கேட்டால் என்ன சொல்வது? பைரவா, என்னை இவர்களிடமிருந்து காப்பாற்று! கயல்விழியை அவர்கள் கண்டு பிடிக்காத அளவுக்கு அவளைத் தப்பியோடச் செய்துவிடு!... என்று கபாலி சமயத்துக்குரிய இறைவனான பைரவரை அவன் வழுத்திக் கொண்டிருந்தபோது....விஜயவர்மனும் மற்ற வீரர்களும் அந்த மண்டபத்தை அடைந்தனர்.

புரவிகளை அடர்த்தியான அந்த அரச மரத்தின் கீழ் நிறுத்தி விட்டு அனைவரும் அப்பெரு மழைக்காக மண்டபத்திற்குள் ஒதுங்கி நின்றார்கள்.

"ப்பா! மழையின் பயங்கரம் மிக கடுமையாக இருக்கிறதே!" என்று ஒரு வீரன் நடுங்கியபடி சொல்ல, இன்னொரு வீரன் "சேனாதிபதி, இந்த மழையில் எப்படி அவரைக் கடத்திக் கொண்டு போக முடியும்? அங்கேயே எங்கேயாவதுதான்! மறைந்திருக்க வேண்டும்!" என்று தனக்குத் தோன்றியதைச் சொன்னான்.

பல்லவமல்லனைப் பற்றி எந்தவிதத் தகவலும் கிடைக்காத நிலையில், குழப்பத்துடனிருந்த விஜயவர்மனுக்கு அவ்வீரன் சொன்னது சரி என்றே பட்டது.

அதுதான் உண்மையோ! நாம் தான் உணர்ச்சி வசத்தில் அவசரப்பட்டு விட்டோமோ! இதுவரை மூன்று காத தூரம் வரை வந்துவிட்டோம் ஒன்றும் மல்லனைப் பற்றி அறிய முடியவில்லை... அங்கேயோ எங்கேயாவது ஒரு வீட்டிற்குள் மறைத்து வைத்திருந்தால்...?...இப்படிப் பெய்கின்ற மழையில் யார்தான் மல்லனை வெளியே கடத்த முடியும்?...இந்த விஷயத்தில் மிகவும் அவசரப் பட்டு விட்டதாகவே விஜயவர்மன் அச்சமயம் உணர்ந்தான்.

பெய்து கொண்டிருந்த மழைக்கிடையே பெரிய இடி ஒன்று அப்பகுதியே அதிர்வது போன்று இடித்தது. அதைத் தொடர்ந்து மின்னல்...

அந்த வெளிச்சத்தில் மூலைப்பக்கம் சாய்ந்திருந்தவனைக் கவனித்து விட்டான் ஒரு வீரன்.

'யாரோ ஒருவன் மண்டபத்தில் இருக்கின்றான்!' என்று அவன் சொல்ல, "யாரடா அவன்?" என்று இன்னொரு வீரன் அதட்டினான்.

இனிமேல் சும்மா இருக்க முடியாது என்பதை உணர்ந்து, "நான் கபாலிக சமயத்தைச் சேர்ந்தவனுங்க! என் பெயர் சோமன்!" என்றான்.

"ஓ...கபாலிக சமயத்தவனா...என்று இகழ்ச்சித் தொனிக்கச் சொன்ன அவ்வீரன், நேராக சுவர்க்கம் போகும் உத்தமர்கள்!" என்று முணு முணுத்தான்.

"பேசாமல் இரு, நமக்கு எல்லாச் சமயமும் ஒன்றுதான்!" என்று அந்த வீரனை அடக்கிய விஜயவர்மன், இவனைக் கேட்டால் ஏதாவது செய்தியாவது தெரியாதா என்ற எண்ணத்துடன், "நாங்கள் வருவதற்கு முன் இந்தப் பக்கம் யாராவது மழைக்கு வந்து ஒதுங்கினார்களா?" என்று கேட்டான்.

சோமன், மூலையில் சாய்ந்தவாறே "இல்லீங்க!" என்ருன் மெல்லிய குரலில். அதில் எங்கே கயல்விழியைப் பற்றிக் கேட்டுத் தொலைப்பார்களோ என்ற பயம் இழைந்திருந்தது. அச்சத்தி ஞூடே மெல்லிய குரலில் மனமின்றி அவன் சொன்ன அப்பதில் விஜயவர்மனுக்குப் பெருமழையின் ஓசையினுல் கேட்காததால், "என்ன சொல்கிருய்?" என்று திரும்பவும் உரக்கக் கேட்டான்.

இங்கு வந்தது பற்றி இவர்களுக்கு ஏதாவது தெரியுமோ என்று விஜயவர்மன் கேட்ட விதத்திலிருந்து இலேசான கலக்க முற்ற சோமன்; திரும்பவும், "இல்லீங்க!" என்ருன். ஆனுல் அந்த வார்த்தையும் மெலிதாகவே ஒலித்தது.

"என்னப்பா. உரக்கப் பேச வராதா உனக்கு?" என்று விஜயவர்மன் உரக்கக் கேட்க, இதுதான் சமயம் என்று, "என்னடா திமிராக அங்கேயே உட்கார்ந்து கொண்டு பதில் சொல்கிருய்? எழுந்திரு!" என்று அதட்டினுன் ஒரு வீரன்.

உடனே இன்னெரு வீரனும், "நானும் வந்ததிலிருந்து கவனித்துக் கொண்டுதான் வருகிறேன்! நீ ரொம்பவும் திமிராய்த் தான் இருக்கிருய்!" என்று அவனும் அந்த அதட்டலில் சேர்ந்து. "எழுந்திருடா!" என்று கத்த, "நீ கபாலிகனு? அல்லது கள்ளனு?" என்று கேட்டபடி மூலையில் சாய்ந்திருந்த அவனின் அருகில் சென்ருன் மற்ருெருவன்.

"மன்னிக்கனும், எனக்கு உடல் நலமில்லை! அதனுல் தான்..." என்று சோமன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அருகில் சென்றவன் அவன் தலைமயிரைப் பிடித்துக் தூக்கி நிறுத்தினுன். "நான் கள்வனல்ல. கபாலிக சமயத்தைச் சேர்ந்தவன்! எல்லாம் வல்ல அந்த பைரவர் மீது சத்தியம். எனக்கு உடல் நலமில்லை. அதனுல்தான் மூலையில் உட்கார்ந்து கொண்டிருக்கின்றேன்! பொறுத்தருளவும்" என்ருன்.

"ஏய் திருட்டுப் பயலே!... நீதானே பல்லவ மல்லரைக் கடத்தியவன்..." என்று ஒரு வீரன் அதட்டிக் கேட்டான் அப்

போது!... எல்லாம் தெரிந்து விட்டதோ என்று நடு நடுங்கி, "இல்லே... இல்லே... எனக்கு ஒன்றும் தெரியாது! உடல் நல மில்லாததால் மழைக்காக இம்மண்டபத்தில் ஒதுங்கியிருக் கிறேன்!" என்ருன்.

நீண்ட நெடுங் கோடாக வானத்தில் அப்பகுதியெங்கும் பகலாக்குவது போல மின்னியது. அந்த வெளிச்சத்தில் சோம னைக் கவனித்த விஜயவர்மன் கண்களுக்கு அந்த மரத்தின் கீழ்ப் புரவிகள் நிறுத்தப்பட்டிருந்த இடத்தில் ஏதோ மினுக் மினுக்கென்பது போல் ஒன்று ஒளிரவே, என்னவென்று அதைக் கூர்ந்து கவனிப்பதற்குள் மின்னல் மறைந்து மறுபடியும் இரு ளில் மூழ்கியது அவ்விடம்.

"சேனுதிபதி இந்தப் பயல் நிச்சயம் திருட்டுப் பயல்தான்? இவன் விழிக்கிற விழியைப் பார்த்தால் அப்படித்தான் தெரி கிறது!" என்ருன் ஒரு வீரன்.

அப்போதைக்கு அவன் சொன்னதை விஜயவர்மன் ஏற்கவில்லை. மினுக்கென்று மின்னியது என்னவாக இருக்கும் என்பதிலேயே அவன் கருத்து இருந்தது. பலமாகப் பெய்த மழையின் வேகமும் மெல்லக் குறைய, விஜயவர்மன், அந்தப் பொருள் தெரிந்த இடத்தை நோக்கி ஓடினுன்.

"சேனுதிபதி, எங்கே போறீங்க? இந்த மழையில்!" என்று சோமனைப் பிடித்திருந்த பிடியை விட்டு மண்டபத்திலிருந்து இறங்க, இதுதான் சமயம் என்று சோமன் தனக்கு அருகில் நின்றிருந்த இன்னெரு வீரனைப் பலமாகக் கீழே தள்ளி விட்டு, மழையையும் பொருட்படுத்தாமல், மண்டபத்திலிருந்து குதித்துத் தெற்குப் பக்கமாக ஓட்டமெடுத்தான்.

'ஏய்' பிடி! பிடி!' என்று வீரர்கள் அவனைத் துரத்தி ஓட அப்பகுதி முழுவதும் சோமனுக்கு மிகவும் பழக்கமான இடமானதால் அருகிலுள்ள மாந்தோப்புக்குள் புகுந்து மறைந்தான்.

அந்த இடம் துரத்தின வீரர்களுக்குப் புதிதானதாலும், அத்துடன் அடர்ந்திருந்த இருள் அவர்களுக்கு எவ்வித வழியையும் காட்டாது குழப்பத்தையே தந்தாலும் வீரர்கள் சோமனைத் தொடர்ந்து செல்ல முடியாமல் திகைத்து நின்று விட்டனர்.

'மினுக் மினுக்கென்று மின்னொளியில் தெரிந்த அப்பொருள் இருக்கும் இடத்தை நோக்கி இறங்கிய விஜயவர்மன், திடீரென்று ஏற்பட்ட பிடி பிடி யென்ற ஆரவாரத்தைக் கேட்டு "அவன் தப்பித்து விட்டான்?" என்று சோமனால் கீழே தள்ளப்பட்டுத் தட்டுத் தடுமாறி எழுந்து நின்ற வீரனைப் பார்த்துக் கேட்டான்.

"ஆமாம்!" என்று சொல்வதற்கு அவனால் முடியாமல், இடுப்பைப் பிடித்தபடி, "மகா கள்ளப் பயல்!" என்றான் கோபத்தோடு.

அந்தப் பதிலால் எரிச்சலுற்ற விஜயவர்மன், "என்ன நடந்தது?" என்றான்.

சோமனைத் தொடர்ந்து சென்ற வீரர்கள் மிக வேகத்துடன் திரும்பி வந்தனர்.

"என்ன ஆயிற்று?" என்று அவர்களிடம் கோபமும் எரிச்சலும் இழையக் கேட்ட விஜயவர்மனிடம், "சேனாதிபதி, இந்த இருளை அவன் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டான்!" என்றனர்.

"எனக்கு அப்பவே தெரியும்! அவன் விழித்த விழியிலிருந்து!" என்றான் அவர்களில் ஒருவன்.

"பேசாமலிருங்கள்!" என்று அதட்டி விட்டு, அவன் ஓடிய பக்கம் கவனித்தான்.

மழைத் தூறலுடன் பெரிய கருப்புத்திரை தொங்கு விட்டதைப் போன்று கனத்த இருள், கேலியாகச் சிரித்தது. அத்துடன் காற்றும் வீசிக் கொண்டிருந்தது.

"நான்கு பேர் குதிரைகளில் சென்று தேடிப் பாருங்கள்! எங்கே சென்றாலும் திரும்பவும் இம் மண்டபத்துக்கே வந்து சேருங்கள்!" என்றான்.

தலையாட்டின வீரர்கள், புரவிகளை அவன் ஓடின பக்கம் செலுத்தினர்.

மழைத்தூறல் வலுத்தது. காற்றும் பலமாய் வீசியது. குதிரைகள் செல்லச் சிரமப்பட்டன.

'கள்ளப் பயல்' மட்டும் கிடைக்கட்டும் அவன்! தலையைச் சீவி உடலைத் துண்டு துண்டாக வெட்டி... என்று ஒருவன் கோபத்துடன் சொல்ல "ஆகட்டும்டா! ஆளைவிட்டு விட்டு என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு?" என்றான் இன்னொருவன்.

பெரிய இடி இடித்தது கருமேகத்தை இரண்டாய்ப் பிளந்தது போல நீண்ட மின்னல் வானத்தில் வளைந்து வளைந்து கீழ் வானம் வரை வெண் கோடிடத் தூரத்தில் ஒருவன் ஓடுவது, அவர்கள் கண்களுக்குத் தெரிந்தது

"அதோ கள்ளப் பயல் ஓடுகிறான்! பிடியுங்கள்!" என்று கூவியபடி நால்வரும் குதிரையை வேகமாகச் செலுத்தினர்.

அதே சமயம் அந்த ஒளிக்காகவே காத்து நின்ற விஜய வர்மன் சட்டென்று தரையில் அப்பொருளைத் தேடத் துவங்கினான். அவன் நின்ற வெகு சமீபத்தில்தான் அதுவும் மினுக் மினுக்கென்று மின்னியபடி தரையில் கிடந்தது.

எடுத்துக் கொண்டான் மகிழ்ச்சியுடன். அந்த மகிழ்ச்சி அந்தப் பொருள் என்ன என்றுப் பார்த்தபோது மறைந்தது. திடுக்கிட்டுப் போனான்.

"யாரப்பா அங்கே, இங்கே வாருங்கள்!" என்று ஒரு வீரனைக் கூவி அழைத்தான்.

"என்ன சேனாதிபதி?" என்று ஒருவன் பதறிவர, தன் கையிலிருந்ததை அவனிடம் கொடுத்து இது பல்லவமல்லன் காதில் உள்ள குண்டலம் அல்லவா?" என்றான் பதட்டத் தோடு?

அவன் அதை உற்றுப் பார்த்துத் தொட்டுத் தடவி ஆமாம் சேனாதிபதி? காபலிகர்கள் கூட்டம் தான் அவனைக் கடத்தியிருக் கிறது! 'சீக்கிரம்' என்று அதை வாங்கித் தன் கச்சையில் பத்திரப் படுத்திப், புரவியில் அமர்ந்தான் விஜயவர்மன்.

"என்னுடன் இருவர் வாருங்கள்! மீதி நான்குபேர் இந்தப் பக்கமாக போய்த் தேடுங்கள்? அப்படி அவன் கிடைத்தாலோ அல்லது வேறு எந்த முக்கியச் செய்தியிருந்தாலோ இம் மண்டபத்துக்கே வாருங்கள்! இதுதான் நாம் சந்திக்க வேண்டிய இடம்! சாக்கிரதை என்று அவர்களுக்குக் கட்டளையிட்டு விட்டு இருளில் புரவியை வேகமாகச் செலுத்த, இருவீரர்கள் அவனைத் தொடர்ந்தனர்.

9

கயல்விழியின் வேகம் குதிரை பாய்ந்து செல்ல வேண்டும் என்பதிலேயே இருந்தது. கனமழை, அத்துடன் இடிமுழக்கம் அத்தோடு 'பளிச் பளிச்'சென்று மின்னல்...

இவை எதைப் பற்றியும் அவள் கவலைப்படாது புரவியை விரைந்து செலுத்திக் கொண்டிருந்தாள். இதுவரை ராஜ பாட்டையில் ஓடிக் கொண்டிருந்த குதிரை, திரும்பி அடர்ந்த

தென்னந் தோப்புக்குள் நுழைந்தது. அவ்விடத்தில் மழைத் தண்ணீர் அங்கங்கே குட்டை குட்டையாக தேங்கி நின்று கொண்டிருந்தது... ஆள்மட்டும் செல்லக் கூடிய அந்த ஒற்றையடிப் பாதையில் அப்புரவி காற்றிலும் கடிதாய் ஓடிக் கொண்டிருந்தது.

அவள் மன வேகத்திற்கு அந்த அசுவம் போகும் வேகம் திருப்தியைத் தராததால், வாரினால் ஓங்கி அடித்தாள். ஏற்க னவே அதிவேகத்திலிருந்த அக்குதிரை அந்த அடி தாள மாட் டாது சீறிப் பறந்தது. எதிரே, பாதைக்குச் சிறிது தள்ளி மழைத் தண்ணீர் குட்டையாய்த் தேங்கியிருக்க, ஓடிவந்த வேகத்தில் அம்மழைத் தண்ணீர் குளம்பில் பட்டுத் தெறிக்க, அசுவம் அதே வேகத்துடன் அடுத்த அடி எடுத்து வைக்கும்போது, நானும் இருக்கேன் என்று சிறிய கல் ஒன்று தடுக்கியது. அத னால் குதிரையின் முன்னங்கால் இடற, அதே வேகத்தில் அக் கால் தரையில் பலமாக மோதி பளக்கென்று முறிந்தது. குதிரை யும் கீழே விழுந்தது.

கயல்விழி ஒருக்களித்து வீழ்ந்தாள். அந்த வீழ்தலிலும் பல்லவமல்லனுக்கு ஒன்றும் நேரக் கூடாதென்று மார்புற நன்கு அணைத்துக் கொண்டாள். அவள் விழுந்த இடம் மணற்பகுதி யாக இருந்ததால் முழங்கை உராய்வுடன் நின்றது. அதே சமயத்தில் நெற்றியில் பலமான அடி, சதை பிளந்து குருதி வழிய ஆரம்பித்தது.

எழுந்து நின்றாள். அடிபட்ட இடம் விண் விண் என்று வலித்தது. மல்லனுக்கு ஒன்றும் நேரவில்லையே என்று அவ னைத் தொட்டுப் பார்த்துக்கொண்டாள். சிறிது அசைந்து கொடுத்தது, மூலிகையின் மயக்கம் தெளிய இன்னும் நேர மிருந்ததால், மறுபடியும் அவளின் அழகிய தோள்களில் நன்கு சாய்ந்து கொண்டான் சிறுவன்.

குதிரைகள் குளம்பொலி தன்னைத் துரத்தி வருவது போன்று மனப்பிரமை. சீக்கிரம் போக வேண்டும் என்று புரவியின்

பக்கம் அவசரமாகத் திரும்பினாள். குதிரை இருந்த நிலையைக் கண்டதும் அவளுக்குப் பகீரென்றது. விழுந்த குதிரை எழுந்து விட்டிருக்க வேண்டும்! ஆனால் எழவில்லை, படுத்தபடியே எழுந்து நிற்க முயற்சி செய்து, முடியாமல் போனதால் அதைக் காண அவளுக்குச் சகிக்கவில்லை. அருகில் சென்றபோதுதான் அதன் முன்னங்கால்களில் ஒன்று முறிந்து விட்டது அவளுக்குத் தெரிந்தது. என்ன செய்வது? சில நொடிகள் ஒன்றும் புரியவில்லை அவளுக்கு. அதே நேரம் தூரத்தில் கேட்ட புரவிகளின் குளம்பொலி அருகில் கேட்பது போலிருந்தது. என்ன செய்யலாம்?... என்ன செய்வது? திகைத்து இறுதியில் எதையாவது செய்யவேண்டும் என்று முடிவுக்கு வந்தாள் கயல்விழி. இன்னும் அந்த இடத்திற்குப் போய்ச் சேர வேண்டுமென்றால் குறைந்தது இரு காத தூரமாவது போக வேண்டும், எப்படிப் போவது? கைகளைப் பிசைந்தபடி இடுப்பில் செருகியிருந்த குத்துவாளை எடுத்துக்கொண்டாள். இதுதான் அப்போதைய ஆயுதம். எதிரிகள் எத்தனைபேர் இருப்பார்கள். திடீரென்று அவர்களைத் தாக்க வேண்டுமென்றால் இந்தக் குத்துவாளை வைத்துக் கொண்டு என்ன செய்யலாம்? குறைந்தது இருவர் உயிரைப் போக்க முடியும் இதனால்! இதற்குள் அவர்கள் தன்னைப் பிடித்து விட்டால்... உயிருடன் பிடிக்க முடியுமா?... என் பிணத்தைத்தான் அவர்கள் தொடமுடியும். அதற்குள் எதிரிக் கூட்டத்தில் இரண்டு அல்லது மூன்று தலைகள் சாய வேண்டும். பல்லவ மல்லன் உயிரையும் போக்கிக் கடைசியில் இதே குறுவாளால் தன் மார்பையும் பிளந்து கொண்டு... சே! என்ன பைத்தியக் காரத்தனமான கற்பனை? ஏன் தப்ப முடியாது அவர்களிடமிருந்து முயன்று பார்ப்பது என்று குறுக்கு வழியில் வேகமாக ஓடலானாள் கயல்விழி!

மூச்சிரைக்க ஓட்டமும் நடையுமாக ஓடிக் கொண்டிருந்த சோமன் பின்னால் குதிரைகள் வரும் சப்தம் கேட்டுத் திகைத்தான்.

இனி ஓடுவதில் பயனில்லை என்று நின்ருன். என்ன செய்யலாம் என்று யோசிக்கும்போது, பளிச்சென்று ஒரு எண்ணம் தோன்றியது. சாலை ஓரமாக மிகத் தாழ்வாக இறங்கிப் பரவலாக கிளைவிட்டு வளர்ந்து நின்ற வேப்பமரத்தைப் பற்றி மட மடவென ஏறி மறைந்து கொண்டான்.

குதிரைகள் வரும் ஒலி பெரிதாகிச் சோமனுக்கு இதயம் படபடவென்று அடித்தது. 'பைரவா, என்னைக் காப்பாற்று! இந்தப் பாவிகளிடம் சிக்கி என் உயிர் போக வேண்டாம்!... அதைவிட உன் சந்நிதானத்திலேயே என் தலையை அறுத்துக் கொண்டு உயிர் விடுகின்றேன்! பைரவா என்னைக் காப்பாற்று!" என்று அவன் வேண்டிக் கொண்டிருக்கும் போதே, நான்கு குதிரைகள் கரிய இருளில் வேகமாக வந்து கொண்டிருந்தன.

மரத்தோடு மரமாகத் தன் உடலை மறைத்துக் கொண்டு, எங்கே மூச்சு விட்டால், அதன் மூலம் தான் மறைந்திருக்கும் இடத்தைக் கண்டு பிடித்து விடுவார்களோ என்ற பயத்தில் சுவாசத்தைக் கூட அடக்கிக் கொண்டான் சோமன்.

குதிரைகள் நெருங்க நெருங்கச் சோமனின் இதயம் 'படக் படக்' என்று அடித்துக் கொண்டது.

நான்கு குதிரைகளும் மரத்தைக் கடந்து சிறிது தூரம் சென்று ஒரு திருப்பத்தைக் கடந்த பிறகுதான் சோமனுக்கு நிம்மதி வந்தது. பைரவனுக்கு நன்றி சொல்லிவிட்டு மிகுந்த சந்தோஷத்துடன் கீழே இறங்கினுன்.

அப்படிச் சந்தோஷத்துடன் இறங்கிய சோமனின் சந்தோஷம், நீண்ட நேரம் நிலைக்கவில்லை.

கயல்விழியைத் தேடி வந்தது ஏறக்குறையப் பத்து பேர் இருக்கும். நான்கு பேர் தன்னைத் தேடிப் போகும் போது, மீதி ஆறுபேர் சல்லடை போட்டுத் தேட வேறுபக்கம் நிச்சயம்

போயிருப்பார்கள்!... இப்படி மூலைக்கு மூலை ஆட்கள் குதிரைகளில் போகும்போது கயல்விழியும் நம் ஆட்களும் நிச்சயம் கண்டு பிடிக்கப்பட்டு விடுவார்கள்! அதனுல் முதலில் இந்தச் செய்தியைக் கயல்விழியிடம் சொல்லி எச்சரிக்கை பண்ண வேண்டும் என்று எண்ணிய சோமன், தன்னைப் பற்றிய கவலையல்லாமல் குறுக்கு வழியில் அந்த இடத்திற்குப் போக முடிவு செய்து இருளில் வேகமாய் நடக்க ஆரம்பித்தான் இல்லை... ஓட ஆரம்பித்தான்.

அதே சமயம், மிகுந்த ஆக்ரோஷத்துடன் விஜயவர்மனின் புரவி மழையையும் பொருட்படுத்தாது வேகமாகப் பறந்து கொண்டிருந்தது. அவனைத் தொடர்ந்து இரு வீரர்களும் அதே வேகத்தில் புரவிகளைச் செலுத்த மிகவும் சிரமப்பட்டனர். மேகங்கள் மழையைப் பலத்துப்பொழிய, இடையிடையே மின்னல் வெளிச்சம் காட்ட, அடிக்கடி இரவின் இருள் அவர்களை அசுர வைக்க, எதையும் பொருட்படுத்தாது அவர்கள், மிகத் தீவிரத்துடன் புரவிகளைச் செலுத்திக் கொண்டிருந்தபோது சாலையிலிருந்து சிறிய பாதை ஒன்று பிரிந்து தென்னந் தோப்புக்குள் செல்வதைப் பளிச்சென்று மின்னிய மின்னல் மூலம் கவனித்தான் விஜயவர்மன். குதிரையின் கடிவாளத்தை இழுத்து நிறுத்தினுன். பின்னுல்வந்த இரு வீரர்களும், "என்ன சேனுதிபதி?" என்றனர் பதட்டத்துடன்.

"சாலையிலிருந்து ஒரு பக்கமாகச் சிறியவழி பிரிகிறது! அதில் எதிரி எந்த வழியைத் தேர்ந்தெடுத்திருப்பான் என்று பார்க்கவே நிறுத்தினேன்!" என்ருன். கூடவந்த இரு வீரர்களும் மழையில் நனைந்து விட்டிருந்தனர். வீசிய காற்று சில்லென்று அவர்கள் உடலைத் தழுவ, "அப்படியா?" என்று இறங்கிக் கொண்டனர். கை கால்கள் நடுங்கின.

விஜயவர்மனும் அவ்விதமே நனைந்திருந்ததால் அந்த நடுக்கம் அவனுக்கும் இருந்தது. ஆனுல் அதை வெளியில் காட்டாது இறங்கினுன்.

"இந்த மழை, நம்மை விடாது போலிருக்கிறதே!" என்று தலையிலிருந்து வழிந்த நீரை வழித்து விட்டு வானத்தைப் பார்த்தான். அவன் சொன்னதற்கு மதிப்பளித்தது போலச் சடக்கென்று பெருமழையின் வேகம் குறைந்து தூறலாகப் பூமியில் விழ ஆரம்பித்தது.

"சேனாதிபதி!" என்றான் ஒரு வீரன்.

"என்ன?"

"இதோ பாருங்கள்!"

அவன் காட்டிய திசையில் குதிரையின் சுவடுகள் சாலையிலிருந்து பிரிந்து செல்லும் வழியில் தென்பட்டன.

"அப்படியென்றால் இப்படித்தான் போயிருக்க வேண்டும்!" என்று மற்றொரு வீரன் மகிழ்ச்சியால் குதிக்க, விஜயவர்மன், "பேசாதிரு!' என்று அவனுக்குச் சாடை காட்டினான்.

அனைவரும் நிசப்தமாயினர். விஜயவர்மன் செவிகளைக் கூர்மையாக்கி, "என்னமோ முனகும் ஒலி போல் கேட்கிறதே!" என்று அது என்ன என்று அறிவதற்காக இன்னும் தீவிரமாக கவனிக்க ஆரம்பித்தான்.

காற்றின் வேகம் குறைந்து, மழையும் பிசு பிசுத்தது.

"சேனாதிபதி, இந்தச் சிறிய பாதை போகிற அந்தத் தென்னந் தோப்பிலிருந்து தான் முனகல் சப்தம் கேட்கிறது?"

—அதை ஆமோதித்து விட்டு விஜயவர்மன், புரவியேறினான், இரு வீரர்களும் குதிரையில் அமர்ந்தனர்.

பாதை வலப்பக்கமாகத் திரும்பியது... அனைவரும் அதில் குதிரையைச் செலுத்தினர். முனகல் சப்தம் கூப்பிடு தூரத்தில் கேட்பது போலிருந்தது.

"இந்தப் பக்கம் தான் கேட்கிறது!" என்று விஜயவர்மன் குதிரையைத் தட்ட, அது ஜிவ்வென்று பறக்கத் துவங்கியது

நெருங்க, நெருங்க அந்த ஒலி பெரியதாய்க் கேட்கத் துவங்கியது. முனகல் ஒலி போல அது இல்லாதிருக்கவே விஜயவர்மன், திகைத்துக் கடிவாளத்தை இழுத்து நிறுத்தினுன்.

"அதோ பாருங்கள் சேனுதிபதி!"

—ஒரு வீரன், பரபரப்புடன் இருளில் கருங்குன்று போல் தெரிந்த ஒன்றைக் காட்டினுன்.

விஜயவர்மன் கவனித்தான்.

ஏதோ ஒன்று, பலத்த அடிபட்டு வீழ்ந்திருக்க வேண்டும். அந்த அதிர்ச்சியில் அது முனகிக் கொண்டிருந்தது.

யானையா அல்லது குதிரையா? எது...? அருகில் சென்று பார்த்தான்.

உயர்ந்த ஜாதிக் குதிரை ஒன்று முன்னங்கால் உடைந்து எழுவதற்கு முயற்சிக்க முடியாமல், வேதனை தாளமாட்டாமல் முனகிக் கொண்டிருந்தது...

"அருமையான குதிரை... எப்படியோ கால் உடைந்து விட்டிருக்கிறது!" என்று ஒரு வீரன் அனுதாபப்பட, இந்தக் குதிரையில் தான் பல்லவமல்லனைக் கடத்தியிருப்பார்களோ? மிக வேகமாகச் செலுத்திக் கொண்டு வந்ததினுல் பாதையில் இருந்த கல்லோ அல்லது எதனுலோ தடுக்கப்பட்டு அதனுல் வழுக்கிக் கீழே விழுந்து முன்னங்கால் முறிந்து விட்டிருக்க வேண்டும் வேறுவழியல்லாது மல்லனுடன் ஒன்று குதிரையிலாவது, அல்லது கால்நடையாகவாவது அவனைக் கடத்தியவன் தப்பி இருக்க வேண்டும்! என்று விஜயவர்மன் முடிவு கட்டி நிமிர்ந்தான்.

"என்ன சேனாதிபதி?"

தனக்குத் தோன்றியதைச் சொன்னான்.

இருவரும், "இருக்கலாம்!" என்று தலையாட்டினர்.

இப்போது என்ன செய்யலாம்? என்று சுற்றும் முற்றும் பார்த்தான் விஜயவர்மன்.

அப்போது தொலைவில் ஒருவன் ஓடி வருவது தெரிந்தது.

"யாரோ ஒருவன் ஓடி வரானே?"

"ஆமாம் சேனாதிபதி!"

மிக நிதானித்துக் கண்களை கூர்மையாக்கிப் பார்க்கும் போது—

அவன் மிக நெருங்கி வந்து கொண்டிருந்தான்.

"கால் ஒடிந்திருக்கும் குதிரைக்குச் சொந்தகாரனோ?"

"இருக்கலாங்க!"

மூச்சிரைக்க மிக வேகமாக வந்து அவன் சட்டென்று நின்றான். நின்றவன் யார் என்று பார்ப்பதற்குள் திரும்பி வந்த திசையை நோக்கி ஓட ஆரம்பித்தான்.

"பைத்தியக்காரன்?... ஏன் திரும்பி ஓடுகிறான்?"

"சத்திரத்தில் பார்த்த கபாலிகன் மாதிரி தெரியவில்லை?"

"ஆமாம்! அப்படித்தான் தெரிகிறது சேனாதிபதி!"

கண்ணிமைக்கும் நேரத்தில் புரவியின் மேல் தாவி அதைத் தட்டி விட்டான் விஜயவர்மன்.

என்னதான் வேகமாக ஓட்டினுலும் அசுவத்தின் வேகத்திற்கு ஈடாக முடியுமா? அவனை விஜயவர்மன் குதிரை நெருங்க, ஓடிக் கொண்டிருந்த சோமன் திடீரென நின்ருன்.

குனிந்து மடியிலிருந்து எதையோ எடுக்கிருனே?

என்னவென்று நிதானிப்பதற்குள் விஜயவர்மனை நோக்கிக் கத்தி ஒன்று பாய்ந்து வந்தது.

விஜயவர்மன் இதைச் சிறிதும் எதிர்பார்க்காததால் திடுக்கிட்டு அதே நேரத்தில் மின்னல் வேகத்தில் செயல்படும் அவனின் அறிவாற்றலால் தக்க நேரத்தில் குனிந்து கொண்டான்.

அவனை நோக்கி வந்த கத்தி, அவன் மீது பாய முடியாமல் தலைக்குமேல் பாய்ந்து சென்றது. அந்த நேரத்தில் விஜயவர்மனைப் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்த ஒரு வீரனின் கழுத்தை அது பதம்பார்க்க, 'ஹா' வென்று புரவியிலிருந்து கீழே விழுந்தான்.

எல்லாம் ஒரு நொடியில் நடந்து விட்டது.

தன்னுடன் கூட வந்த வீரன் வீழ்த்தப்பட்டு விட்டான் என்பதை அறிந்த விஜயவர்மன், எவ்விதப் பதட்டத்துக்கும் இடம் தராமல் காபாலிகனைப் பிடிப்பதற்காக அவன் மேல் பாய்ந்தான்.

கத்தியை வீசி விட்டதால் தனக்கு வந்த ஆபத்து நீங்கவில்லை என்பதை உணர்ந்து அவனும் ஓட முயன்று அது பலனளிக்காமல் போகத் தன் மேல் பாய்ந்த விஜயவர்மனை எதிர்த்துத் தாக்க முனைந்தான்.

இருவரும் தரையில் புரண்டனர்.

மான்போன்று துள்ளிப் புலிபோல் பின்னேக்கிச் செல்வது போலப் பாவனை காட்டி உடல் வலிமையத்தனையும் காலில் திரட்டி, விஜயவர்மன் விலாவைக் குறிவைத்து உதைத்தான் சோமன்.

கீழே அவனுடன் புரண்டதுமே ஆள் சாதாரண ஆளல்ல என்பதை ஏற்கனவே புரிந்து கொண்டிருந்த விஜயவர்மன், தன் பிடியிலிருந்து விலகியவன் தன்னைத் தாக்க வருவதைக் கண்டு எச்சரிக்கை பெற்று மிகக் கவனத்துடன் ஒதுங்கிக் கொண்டான்.

தாக்க வந்த கபாலிகனுக்கு விஜயவர்மன் விலாப்பகுதி கிடைக்காததால், வலிமை முழுதுவதும் வீணுகத் தரையில் தலை குப்பற விழுந்தான்.

இதை எதிர்பார்த்தே ஒதுங்கிய விஜயவர்மன், அந்த நல்ல சந்தர்ப்பத்தைக் கோட்டை விடாமல், அப்படியே அவனை அமுத்திப் பிடித்தான்.

ஏற்கனவே ஓடிவந்த களைப்பு, அத்துடன் தன்னைப் போன்று மற்போர் நுணுக்கங்களை தெரிந்த சிறந்த வீரனின் அறிவுடன் கூடிய ஆற்றல்.

இரு காரணங்களினுல் சோமன் ஒன்றும் செய்ய முடியாது செயலற்றித் தலை குனிந்தான்.

தலைமுடியைப் பிடித்துத் தூக்கி நிறுத்தி முஷ்டியை மடக்கி ஓங்கி ஒரு குத்து விட்டான். குத்து விழுந்த இடம், மனிதனை நிலை குலையச் செய்கின்ற நரம்பு மண்டலம் ஓடுகின்ற இடமாக இருந்ததால், சோமன் திகைப்புண்டு செயலற்று நின்ருன். அருகில் வந்த வீரனிடம் அவன் கைகளைப் பிணைக்கச் சொல்லிக் கீழே விழுந்தவன் என்ன நிலையில் இருக்கின்ருன் என்பதை அறிவதற்காக அவனை நோக்கி ஓடினுன்.

கழுத்தின் நடு மையத்தில் கத்தி பாய்ந்து கழுத்து ஓரமாக அதன் முனை வெளி வந்திருந்தது. அவனை மல்லாத்துவதற்காகப் புரட்டக் கண்கள் செருகி, வாயில் நுரைதள்ளிக் கொண் டிருந்தது.

நாடியைப் பார்த்தான். முடிந்துவிட்ட கதை என்பது தெரிந்தது. ஏதோ சொன்னான். அந்த இறுதி மரணப் போராட்டத்தில் வார்த்தையாக அவன் வாயிலிருந்து வராது தொண்டையிலே தங்கி விட்டது.

தலை சரிந்தது கைகள் துவண்டன. துயரத்துடன் எழுந்து நின்றான் விஜயவர்மன்.

"என்ன சேனாதிபதி!"

"இவனை இழந்து விட்டோம்."

"அப்படியா?"—திகைத்துத் திரும்பிய அந்த சந்தர்ப்பத்தை சோமன் நன்றாகவே பயன்படுத்திக் கொண்டான்.

சுழலும் சக்கரம் போல் தலைகுப்புறச் சுழன்று கீழே விழுந் தான் அவனைப் பிடித்திருந்த வீரன்.

அத்துடன் நிற்கவில்லை சோமன். ஒரே பாய்ச்சலாக அந்த வீரனின் குதிரையில் பாயக் காற்றைக் கிழித்துக் கொண்டு அது பறக்க ஆரம்பித்தது.

விஜயவர்மனுக்குத் திகைப்பு. ஆனால் அதற்கே முற்றிலும் மனதில் இடம் தராமல் இனி மேற் கொண்டு என்ன செய்ய வேண்டும் என்று ஒரு நொடியில் தீர்மானித்து, வீரனின் கழுத்தில் பாய்ந்திருந்த கத்தியைப் பிடுங்கிப் பலம் கொண்ட மட்டும் சோமனை குறிபார்த்து பிடுங்கி எறிந்தான்.

அச்சமயம் நேராகப்போன குதிரை இடப் பக்கமாகத் திரும்பி விட, அந்தத் திருப்பமே சோமனுக்குப் பாதுகாப்பைத் தந்தது.

பாய்ந்து சென்ற கத்தி 'ணங்' கென்று வெறுந்தரையில் விழுந்தது.

தன் கண் முன்னே தன் முயற்சி தோல்வியுற்று விடவே, அவனைத் தப்பிவிடக்கூடாது என்ற வைராக்கியத்துடன், சோமனுல் தாக்குண்டு கீழே விழுந்த வீரனிடம் பின் தொடர்ந்து வா! என்று கட்டளையிட்டுவிட்டு அவனும் புரவியில் பாய்ந்தான்.

10

அருகே கடல் அலையின் ஆரவாரம்...அத்துடன் நடுவே பெரிய ஆறு ஒன்று அந்தக் கடலில் சங்கமாகிக் கொண்டிருந்தது.

நள்ளிரவு நெருங்க இன்னும் ஒரு சாமம்தான் இருக்கிறது என்பது வானத்து விண் மீன்கள் இடம் பெயர்ந்திருந்த நிலையிலிருந்து தெரிந்தது.

அச்சமயம், மழை அடர்ந்து பெய்வதும், திடீரென்று நிற்பதும், பிறகு சிறு தூறலாக விழுவதும் இப்படி வேடிக்கை பண்ணிக் கொண்டிருந்தது.

இனிமேல் ஓட்டமும் நடையுமாகப் பல்லவமல்லனைச் சுமந்துகொண்டு செல்ல முடியாத நிலையில் அருகே இருந்த தென்னை மரத்தருகில் நின்ருள் கயல்விழி. மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கியது. இனி அவளால் வேகமாகப் போக முடியாது. இதயம் வெடித்துவிடும் போலிருந்தது. எனவே தோளில் மயக்கத்துடனிருந்த மல்லனைக் கீழே இறக்கினுள். நிதானப் படுத்தி, மூச்சை இயல்பான நிலைக்குவர, அந்த மரத்தின் மீது சாய்ந்தபோது தூரத்தில் யாரோ ஓடிவரும் ஒலி, அவள் செவிகளில் வீழ்ந்தது.

யார்—

வின்புருவம் மேல்,நோக்கி வளையக் கண்கள் அகன்று விரிய விழிகள், அந்தக் கூரிய இருளை ஊடுருவின.

யாரென்று தெரியவில்லை.

ஹோவென்று கடல் அலையின் ஓசை வேறு அக்காலடியின் ஒலியை அடிக்கடி அழுத்திக் கொண்டிருந்தது. யாரோ வருகிறார்கள் என்பது மட்டும் அவளுக்கு நிச்சயமாகி விடவே தப்ப வேண்டும் என்ற அவசரத்துடன் பல்லவமல்லனைத் தோளில் சுமந்து கொண்டு அந்த இருளில் மிக வேகமாக ஓடலானாள்.

ஏற்கனவே ஓடிவந்த களைப்பு அத்துடன் இதயம் தாங்க முடியாத அளவுக்கு மூச்சிரைக்க ஆரம்பிக்கவே, இனிமேல் ஓடுவது பிரயோசனப்படாது என்று நின்றாள். திரும்பவும் பல்லவமல்லனைக் கீழே இறக்கினாள்.

அப்பொழுது—

மிக நெருக்கமாகக் காலடி ஓசை கேட்டது.

கைகளை இறுக்கிப் பற்களைச் சினத்துடன் கடித்துத் தொலைத்து விடுகிறேன் இவர்களை என்று சொல்லியபோது, அந்த உணர்வைத் தாங்க மாட்டாது அவள் உதடுகள் துடித்தன.

நெற்றியில் சதை பிய்ந்திருந்த இடத்திலிருந்து வழிந்திருந்த குருதி கட்டிப் போயிருந்தது.

காலடி ஓசையும் இன்னும் மிக அருகில் கேட்கவே கயல்விழி குத்துவாளை எடுத்துக் கொண்டாள். செவிகளைக் கூர்மையாக்கினாள். தன்னைத் துரத்தி வரும் நபர் பலர் அல்ல ஒருவர் என்பது அவளுக்குப் புலப்பட்டது.

பரவாயில்லை சங்கடப்பட வேண்டியிருக்காது, வருகின்ற ஆளையும் தீர்த்து விட்டுப் பல்லவமல்லனுடன் மிகச் சுலபமாகத் தட்பித்து விடலாம் என்ற நம்பிக்கையுடன் அந்த ஓசை வரும் திசை நோக்கிக் கூர்ந்து கவனித்தாள்.

தட்... தட்... என்று வேகமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. ஆனால் அவனும் ஓடி வருவதற்கு மிகவும் சிரமப்படுவதைக் கயல்விழி எளிதில் புரிந்து கொண்டாள்.

அவன் களைப்புடன் ஓடி வருகிறான்.

மூச்சு நின்று பழைய நிதானம் உடலுக்கு வந்து, பிறகு அவன் தன்னைப் பலத்துடன் எதிர்க்க ஆயத்தமாவதற்குள். அவனை அதற்குள் எளிதில் வீழ்த்தி விடவேண்டும் என்று முடிவு கட்டிச் சுற்று முற்றும் பார்த்தாள்.

அருகே புதர் ஒன்று இருந்தது. பல்லவமல்லனுடன் அருகே சென்று மறைந்து கொண்டாள்.

ஆளை வீழ்த்துவது ஒரு நொடி... அல்லது இரு நொடிக்குள் முடிந்து விடவேண்டும். அதற்குமேல் நேரத்தை வீணாகக் கூடாது. வீணாக்கப்படுகின்ற ஒவ்வொரு நொடியும் தனக்கு ஆபத்தாக முடியும். தான் மண்டபத்தில் இருக்கும்போது குதிரைகளில் வந்த ஆட்களாக இருக்கலாம். இப்போது தன்னைத் துரத்திவரும் காலடி ஓசை ஒன்றாக இருக்கிறது... ஒரு வேளை பின்னால் அவர்கள் வரலாம். அதற்குள் இவனை வீழ்த்தி விடவேண்டும் என்று எச்சரிக்கையோடு குத்துவாளைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

கார்காலக் காற்றுடன் கடற்காற்றும் சேர்ந்து பலமாக வீசியது... தூறலும் இலேசாய்ப் 'பொட்' 'பொட்' என்று தரையில் விழுந்து கொண்டிருந்தது.

இருளைக் கிழித்தபடி கேட்டுக் கொண்டிருந்த ஓசைக்குரிய உருவம், கயல்விழியின் கண்களுக்குத் தெரிந்தவுடன், கத்தியை உயர்த்தினுள். ஒருவேளை வீசியெறியும்போது தவறிவிட்டால்? என்ன மடத்தனம்? இந்நேரத்திலா அச் சந்தேகம் முளைக்க வேண்டும்?...

வீசுவதில் குறி தவறியதில்லை என்று எனக்குப் பெயர் உண்டு. அந்தப் பெயரைக் கெடுப்பது போன்று இச்சந்தேகம் இப்போதா முளைக்க வேண்டும்?...

அதற்குள் ஓடி வருபவன் மிகப் பக்கத்தில் வந்து விடவே, இனிமேல் யோசித்துக் கொண்டு பொழுதை வீணுக்குவது வீண் என்பதை கயல்விழி உணர்ந்தாள்.

முதலில் கத்தியை வீசி விடுவோம்! அப்புறம் மற்றது... அப்படிக் கத்தி வீச்சிலிருந்து அவன் தப்பி விட்டால்...?... உடனே அவன் மீது பாய்ந்து ஆளை அதே வேகத்தில் அழுத்தி, தலைகீழாய்ப் புரட்டிக் கீழே வீழ்த்தி விடவேண்டியதுதான் என்று முடிவு கட்டிக் கொண்டு அவள் கத்தியை அவனை நோக்கி வீச முனைந்தபோது....

ஏன் அவள் கண்கள் வியப்பால் விரிகின்றன?

மிக உற்சாகத்துடன் புதரிலிருந்து எழுந்தாள். கத்தி ஒரு மூலையில் வீசியெறியப்பட்டது... உதடுகளிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை...

இதற்குள் மிக வேகமாக ஓடி வந்தவன் புதரிலிருந்து எழுந்த அவளைக் கவனித்து விட்டான். யார்? என்று நிதானித்துப் பார்த்து அவனும் வியப்பால் திகைத்து நின்று விட்டான்.

மூச்சினைச் சமப்படுத்தி மிகச் சந்தோஷத்துடன் "கயல்விழி நீயா?" என்ருன் சோமன் ஆவலோடு.

"ஆம், நானேதான்!"

ஏன் மிக வேகமாக ஓடி வந்தாய்! இன்னும் ஒரு நொடி தான்! அதற்குள் உன்மீது கத்தியை எறிந்திருப்பேன்!" என்ருள்.

"என் மீதா?" என்று வியப்புடன் அவன் கேட்கக் கயல்விழியும் "ஆம்!" என்ருள்.

"ஏன் கயல்விழி! இன்னும் என் மீது வெறுப்பா வைத் திருக்கிருய்?"

"இல்லே, என்னைத் துரத்தி வரும் ஆள், நீ என்று நினைக்க வில்லே. மண்டபத்தில் மழைக்காக தங்கிய சமயம் புரவியில் வந்தவர்களில் ஒருவன்தான் என்று தவருக எண்ணித்தான் அம்முடிவுக்கு வந்தேன்!"

"நல்ல முடிவுக்கு வந்தாய்! என் ஆயுள் கெட்டியாக இருந்ததிஞல் தப்பினேன்!" என்று அவளைப் பார்த்துப் புன்னகை புரிந்தான் சோமன்.

கயல்விழி அப்புன்னகையைத்தான் என்றும் ஏற்ற தில்லேயே! அதனுல் அவள் மனதில் தோன்றிய ஐயத்தைக் கேள்வியாக்கி அவனைப் பார்த்துக் கேட்டாள்.

"வேகமாக, ஏன் ஓடி வந்தாய்?" "அதைத் தான் சொல்ல வந்தேன்!" என்று அவன் வாயைத் திறப்பதற்கும், புரவிகள் ஓடிவரும் ஒலி கேட்பதற்கும் சரியாக இருந்தது!

சோமன் பரபரப்படைந்தான். கயல்விழி, சீக்கிரம்! அவர்கள் வருகிருர்கள்! அதற்குள் நாம் போய்விட வேண்டும்!" என்ருன் வேகத்தோடு.

அவள் செவிகளிலும் அந்த ஓசை வீழ்ந்தது. சுறுசுறுப் படைந்து, புதருக்குப் பின் ஓடி, மல்லனைத் தோளில் சாய்த்துக்

கொண்டு, சோமனைப் பார்த்து 'ம்' கொட்டிவிட்டு ஓடத் துவங்கினாள். கபொலிகனும் வெறிபிடித்த மிருகம் போல அவளைப் பின் தொடர்ந்தான். அந்த இருளில் அவர்கள் இருவரும் மறைவதற்கும், விஜயவர்மன், புரவியுடன் அந்த இடத்தை அடைவதற்கும் சரியாக இருந்தது.

பின்னால் வந்த வீரன் "சேனாதிபதி!" என்றான் உரக்க.

விஜயவர்மன் வேகமாய்ப் புரவியைச் செலுத்திக் கொண்டு வந்ததினால், இவன் கூப்பிட்டது காதில் விழவில்லை. எனவே, அவன் குதிரை வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

வீரனுக்கு அவசரம் மண்டபத்திலிருந்து புறப்பட்டபோதே சரியில்லை. குதிரையை நிறுத்தினான். மறைவான இடத்தை அவன் கண்கள் தேடின. கிட்டத்தில் புதர் ஒன்றைத் தவிர அவனுக்கு வேறு ஒன்றும் புலப்படாததால் வேகமாக அதை நோக்கி ஓடினான்.

காலில் 'ணங்' சென்று கடினமான பொருள் மோதியது. 'அப்பா!' என்று காலைப் பிடித்துக் கொண்டு குனிந்து அப் பொருளை எடுத்தான்.

"சேனாதிபதி, சேனாதிபதி!" என்று குரல் கேட்டு, "என்ன?" என்று திரும்பினான் விஜயவர்மன்.

பெருமூச்சு வாங்க ஓடிவந்த வீரன், முழங்கை அளவுக்கு நீண்டிருந்த குத்துவாளை விஜயவர்மனிடம் தந்தான்.

வாங்கித் திருப்பிப் பார்த்த அவன "உன்மீது வீசியெறியப் பட்ட குத்துவாளா?" என்றான்.

"இல்லை சேனாதிபதி...புதருக்குப் பக்கத்தில் கீழே கிடந்தது!"

"எந்தப் புதர்?"

அவன் திரும்பி அவ்விடத்தைச் சுட்டிக் காண்பித்தான். விஜயவர்மன், பரபரப்போடு அந்த இடத்தை அடைந்தான்.

"இந்த இடம் தான் சேனாதிபதி!"

கீழே குனிந்து பார்த்தான்... சில காலடித் தடங்கல் தவிர மற்றபடி வேறொன்றும் புலப்படவில்லை.

அரச மரத்தின் கீழ்ப் பல்லவமல்லனின் குண்டலம், அப்புறம் முன்னங்கால் ஒடிந்து கீழே கிடக்கும் உயர்ந்த ஜாதிக் குதிரை, இங்கே குத்துவாள்... இந்த மூன்றுக்கும் ஏதாவது தொடர்பு... யோசிக்க, யோசிக்க, நிச்சயம் இருப்பது போன்று தான் அவனுக்குப் புலப்பட்டது.

"என்ன சேனாதிபதி?"

"இந்தப் பகுதியில்தான் எங்கேயோ பல்லவமல்லன் இருக்கின்றான். நாம் சீக்கிரம் கண்டு பிடித்துவிட வேண்டும் இல்லையென்றால் மல்லன் உயிருக்கு ஆபத்து!"

"ஆமாம் நீங்கள் சொல்வது உண்மைதான் இருவரும் அந்த இருளில் புரவியைச் செலுத்தினர்.

11

'அப்பாடா!'

மிகுந்த பாதுகாப்பான சூழ்நிலைக்கு வந்துவிட்ட பிறகு, ஆபத்தின் அறிகுறி நீங்கி விட்டது என்பதற்கு அடையாளமாக கயல்விழியின் வாயிலிருந்து அந்த வார்த்தை வந்தது.

சோமனும் உற்சாகத்துடன் சிரித்தான். அப்போது 'பொட் பொட்' விழுந்து கொண்டிருந்த தூறலும் நின்று, கதிரவனும் கிழக்கே கிளம்பியிருந்தான்.

காலை வெளிச்சம்—

மண்டபத்தின் மணற்சரிவில் சோமனுடன் இறங்கினுள்.

வேகமாக இறங்கும் காலடியோசை கேட்டு மண்டபத்திலிருந்து நாகபைரவனும், சித்திரமாயனும் வெளிவந்து பார்த்தனர்.

கயல்விழி!— தோளில் பல்லவமல்லன்! தன்னை மறந்து "சபாஷ்" என்று பெருத்த தன் உடம்பு குலுங்கத் தன்னை மறந்து குதித்தான் நாகபைரவன்.

சித்திரமாயனுக்குச் சில நொடிகள் ஒன்றுமே புரியவில்லை.

'கெட்டிக்காரி!' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான். 'இத்தகையவள்...' என்று மேற்கொண்டு அவனுல் தொடர முடியவில்லை. மழையில் நனைந்துவிட்ட உடைகள்...கூந்தல் கலைந்து... அங்குமிங்கும் அலைந்து...முகத்தில் அந்தச் சோபையில்லாதிருப்பது ஒரு மாதிரியாக இருந்தது. பளபளப்பாய் இருக்கும் கருவிழிகள் கூடக் குழி விழுந்து சோர்ந்திருந்தன.

கை கால்கள் முகம்... எல்லாம் வெளுத்து...

"இரவு முழுவதும் இவனைக் கடத்துவதற்கு மிகுந்த துன்பமோ?" என்ருன் சித்திரமாயன்.

"ஆம் சக்கரவர்த்தி!"

மீண்டும் சித்திரமாயன் நினைத்தான். இத்தகையவள் ஏன் தனக்கு மனைவியாகக் கூடாதென்று? நீண்ட நாட்களாகவே அவள் இளமையின் வனத்தில் கருத்து வைத்திருந்த அவன், இப்போது அதைக் கேள்வியாக மனத்தில் உருவெடுக்கச் செய்தான்.

அறிவும், ஆற்றலும், அத்துடன் அழகும் சேர்ந்து ஒரு பெண் கிடைப்பதென்பது இவ்வுலகத்தில் முடியாத ஒன்ருகும். அது இங்கே முடிந்து பெண்ணுய்க் கயல்விழி என்ற வடிவில் வந்து நிற்கும் அவளே, நான் மனைவியாக, ஏன் பட்டத்து அரசியாகவும் ஏற்றுக் கொள்வது என்பது எனக்கு நன்மையே தரும்.

"என்ன சக்கரவர்த்தி யோசனையில் ஆழ்ந்து விட்டீர்கள்?"– நாக பைரவன் கேள்வி.

சுய நினைவு பெற்று, மூச்சொன்றைப் பலமாக வெளியிட்டு, உதட்டில் முறுவலை நெளியே விட்டு. "ஒன்றுமில்லை!" என்ருன்.

சக்கரவர்த்தி சொல்வது உண்மையா? நாகபைரவனுக்குச் சந்தேகமாக இருந்தது. ஆனுல் மேலும் கேட்க விரும்பாமல், "கயல்விழி, மிகக் களைப்பாய் வந்திருக்கிருய்! நீராடி, உணவு உண்டு வேறு உடை உடுத்திக் கொள். சரியாக... இன்று உச்சி வெய்யிலுக்கே இந்தப் பையனைப் பைரவருக்குப் பலி கொடுத்து விடுவோம்!" என்று சித்திரமாயன் பக்கம் திரும்பினுன்.

"ஆமாம்! அப்படியே செய்துவிடு நாக பைரவரே! நானும் பாண்டிய மன்னன் கோச்சடையன் இரணதீரனைப் பார்க்க வேண்டும்!" என்ருன்.

கயல்விழி, மணற்சரிவில் இறங்கி மண்டபத்துள் நுழைந்தாள்!

அப்போதுதான் அவளுக்கும் களைப்புத் தெரிந்தது. இரவு முழுவதும் ஓடி வந்திருக்கின்றேன்! 'ப்பா!' அவளுக்கே வியப்பாக இருந்தது. எத்தனை துணிவுடன் இக்காரியத்தை நிறைவேற்றியிருக்கின்றேன்! ஒருமுறை அதை நினைத்துப் பார்த்தாள்.

சிறுவன் பல்லவமல்லன் அந்தக் குதிரைக்காக அடம் பிடித்து அழுததை, யவன வணிகன் இருப்பிடத்திலேயே

வைத்துக் கண்டு கொண்டு, அதையே அவனைக் கடத்துவதற்கு முக்கிய காரணமாக்கி, விம்மலுடன் இராசசிம்மனிடம் இருந்த அவனைச் சாந்தப்படுத்துவதாகச் சொல்லி, இன்று இரவு எப்படியும் அதை அவனுக்குத் தருவதாகச் சொல்ல, அதைக் கேட்ட மல்லனும் அழுகையை நிறுத்த இரவு மன்னர் உறங்கிய பிறகு தயாராக இருக்கும்படி சொல்லி, அதையே அச்சிறுவனும் உண்மையென்று நம்பித் தன்னுடன் வர, மாளிகையின் பின் பக்கமிருந்த கதவைத் திறந்து கொண்டு மல்லனுடன் வெளியேறி அம்மாளிகையின் பக்கத்திலேயே இரகசியமாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்த தன் குதிரையில் ஏறிக்கொஞ்ச தூரம் வந்ததும், மல்லன் எங்கே குதிரை என்று உரக்கக் கேட்டு அழ ஆரம்பிக்க, இவனை இப்படியே விட்டால் நகரக் காவலுக்குச் செல்லும் வீரர்கள் கண்ணில் தான் பட வேண்டியிருக்கும் என்று பயந்து மயக்கம் தரும் மூலிகைச் சாறை அவன் நுகரும்படி செய்து, பிறகு இடைவிடாது பெய்த மழையுடன் போராடி... அப்புறம் தன்னைத் துரத்தி வந்தவர்களை ஏமாற்றி...

பெருமிதத்துடனே நீராடச் சென்றாள் கயல்விழி.

காலைக் கதிரவன் ஒளி, பசிய புல்தரையின்மீது பரவி, அதன் மீதிருந்த பனித்துளிகளை அழகாய் ஒளிரச் செய்து கொண் டிருந்தது. விஜயவர்மன் குதிரையை இழுத்து நிறுத்தினான். காரணம்? எதிரே பெரிய கால்வாய் தெற்கு நோக்கி ஓடிக் கொண்டிருந்தது. இனி மேற்கொண்டு போக வழியில்லை. என்ன செய்வதென்று புரியாமல் புரவியிலிருந்து இறங்கினான். குருவிகள் அங்குமிங்கும் ‘கீச் கீச்’ என்று ஒலித்துக் கொண் டிருந்தன.

உடற்சோர்வு ஒருபுறம் இருக்க மனச்சோர்வு வேறு சேர்ந்து கொண்டது அப்போது! எத்தனை தூரம்தான் இப்படி போவது? ம்.... பசிமயக்கம் வேறு! கால்வாயை ஒட்டிக் கொஞ்ச தூரம் தள்ளித் தென்னந்தோப்பு ஒன்று செழுமையாய் விஜயவர்மன் கண்களுக்குத் தெரிந்தது.

“சேனுதிபதி, என்ன செய்யலாம்?” என்று பின்னுல் வந்த வீரனும் கேட்டான் அப்போது.

“அதோ பார்! தென்னந்தோப்பு... அங்கே சென்று முதலில் பசியாறுவோம்! அப்புறம் மல்லனைத் தேடும் வேலையைத் தொடர்வோம்!” என்ருன் விஜயவர்மன்.

அவனும் ஆமோதித்தான். இருவரும் புரவிகளை நடத்தியே அழைத்துச் சென்றனர். தோப்பில் நுழைந்து, செழுமையாகக் குலை தள்ளியிருக்கிற மரமாகப் பார்த்து நின்றனர்.

வீரன் மரமேறுவதற்கு ஆயத்தமானுன்.

“சொந்தக்காரன் எந்த மூலையில் இருக்கின்ருனே!” என்று சொல்லிக் கொண்டே மரமேறத் துவங்கினுன் அவன்.

பாதி தூரம்தான் சென்றிருப்பான். தேள் கொட்டியவன் போல மடமடவென்று இறங்கலானுன் அவன். விஜயவர்மனுக்கு ஒன்றும் புரியவில்லை.

“என்னப்பா, சொந்தக்காரனைப் பார்த்துவிட்டியா?” என்ருன் சிரிப்போடு.

கீழே மிக வேகமாக இறங்கி, “இல்லை சேனுதிபதி...” என்று பதறிய அவன் வார்த்தைகள் வெளிவராமல், “ஒரு காபாலிகன்... காபாலிகன்...” என்ருன் மூச்சிரைக்க.

“என்ன காபாலிகனு?...” என்று படபடப்புடன் வினவ, “ஆமாம், குதிரையில் போய்க் கொண்டிருக்கின்ருன்! அதுவுமில்லாது இதன் நடுவே பெரிய மணல்மேடு இருக்கிறது. அதற்கு நடுவில் தடாகம் ஒன்று... அதன் ஒரு ஓரத்தில் மாளிகையா... மண்டபம்... சரியாகக் கண்ணுக்குப் புலப்படவில்லை!” என்ருன்.

"இங்கிருந்து எவ்வளவு தொலைவு?"

"பக்கத்தில்தான்!"

"சரி, அப்படியென்றால் புறப்படுவோம்!" என்று புரவியருகில் சென்றவன், "பக்கத்தில் என்று தானே சொன்னாய்? நாம் குதிரையில் சென்றால் அதன் ஓசை கேட்டு எச்சரிக்கை பெறப் போகின்றார்கள்! அதனால் நடந்தே போவோம்!" என்று புரவிகளைத் தென்னை மரத்தில் கட்டிவிட்டு விஜயவர்மன் வீரன் காட்டிய திசையில் மெல்ல நடந்தான்.

மணல் மேடு... அதற்கு நடுவில் பெரிய தடாகம்...

"இந்த இடம்தான்!" என்று வீரன் சொன்னான்.

சட்டென்று போய் விடமுடியாது! எப்படிப்பட்ட இடம்? அங்கே இருக்கும் ஆட்கள் எத்தனை பேர்... இவற்றையெல்லாம் கவனித்துச் செல்ல வேண்டும் என்று, அருகிலிருந்த அடர்த்தியான புதர்ப்பக்கம் சென்று மெல்ல எட்டிப் பார்த்தான். ஏறக்குறைய அவன் இருக்கும் இடத்திற்கும், அந்தப் பகுதிக்கும் இரு தென்னை மர தூரம் இருந்தது. தடாகம்... அதற்கப்புறம் மணல்மேடு, அதற்கப்புறம் தான்... அது மண்டபமா அல்லது மாளிகையா? சரியாகக் தெரியவில்லை. ஏறக்குறைய அது பாதிக்குமேல் மணலில் மறைக்கப்பட்டிருந்தது.

அதோ... சித்திரமாயன் நின்று கொண்டிருக்கின்றான். அவனுக்குப் பக்கத்தில் ஒரு காபாலிகன்... குனிந்து என்ன செய்து கொண்டிருக்கின்றான்... ஓ... அந்தச் சிலை... பைரவர் சிலைதான்... அதை நீரால் சுத்தம் செய்து கொண்டிருக்கின்றான்? பக்கத்தில் பெரிய கத்தி! பைரவருக்குப் பலிதரப் பயன் படுத்தப்படும் வெட்டரிவாள்! ப்பா!... இவர்கள், என்ன செய்யப் போகிறார்கள்?... அப்போது பண்டபத்திலிருந்து ஒரு பெண்... உற்றுக் கவனித்த விஜயவர்மன் திகைக்கின்றான்... வீரனைக்

கூப்பிட்டு, 'இந்தப் பெண் நம் அரண்மனையில் பணிப் பெண்ணாகச் சேர்ந்தவள் அல்லவா?' என்று ஐயத்துடன் வினவ, வீரன் உற்றுக் கவனித்து, "ஆம் சேனாதிபதி" என்றான் ஆச்சரியத்துடன்.

சத்திரத்தில் நாம் மழைக்காக ஒதுங்கியபோது மூலையில் இருந்தவன், பிறகு நம் கையில் சிக்கியவன், உன் சக வீரனைக் கொன்று விட்டு ஓடியவன்... சரிதான்! இது என்ன... இது தான் சித்திரமாயன் இருப்பிடமோ? இங்குத்தான் சூழ்ச்சியே உருவாகிறதோ!

"இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் சேனாதிபதி?"

"என்ன செய்வார்கள்? கடத்திய பல்லவமல்லனைப் பைரவருக்குப் பலிதரப் போகின்றார்கள்!"

"என்னது?" — திகைத்து விட்டான் வீரன்.

"ஆமாம்! அதற்குள் நாம் இதைத் தடுத்தே ஆக வேண்டும்!"

"நாம் இருவர்! அவர்கள்... ஒன்று... இரண்டு" என்று எண்ணிய விஜயவர்மன், "ஐந்து பேர் இருக்கிறார்கள்!" என்றான்.

"குதிரை மூலம் அவர்களை மடக்கி விடலாம் சேனாதிபதி!"

"குதிரை இந்த மணற்சரிவில் அவ்வளவு வேகமாக இறங்க முடியாது! அதை நம்பினால் அவ்வளவுதான்! அதரடித் தாக்குதல்... திடீரென்று நாம் பாய வேண்டும்! பாய்கின்ற வேகத்தில் இரண்டு தலைகள் உருள வேண்டும் அப்படி உருண்டால் வெற்றி நமக்கு! இல்லையென்றால்?"

“ஏன் நிறுத்தி விட்டீர்கள் சேனாதிபதி?”

“நிறுத்தியதின் அர்த்தத்தை நீ புரிந்து கொண்டிருப்பாய்! என்று நினைத்தேன்! இல்லையென்றால் நாம் இருவரும் அவர் களிடம் சிக்கிக் கொள்ள வேண்டியதுதான்!”

“அப்படியா?”

“ஆமாம்! நான் சொல்வதைக் கேள்! இந்தத் தாக்குதல் மிகவும் முக்கியம். இன்னும் கொஞ்ச நேரம் பொறுத்துப் பார்ப் போம்! ஐந்துபேர் தவிர வேறு யாராவது இருக்கிறார்களாவென்று! அப்படியில்லையென்றால் மிகவும் சந்தோஷம்! இருந்தாலும் நாம் எதிர்த்தே ஆகவேண்டும்!” ஏறக்குறைய இது புனிதப்போர் என்றே கருதுகின்றேன். எப்படியும் பல்லவமல்லனை மீட்டே ஆகவேண்டும். ஒன்று வெற்றி! அல்லது வீரமரணம்!” என்றான்.

வீரன் பற்களைக் கடித்தான் மீசை துடித்தது.

“கவனி, முதலில் இவர்கள் ஐந்து பேர்கள்தானா என்று உறுதி செய்து கொள்ள வேண்டும்! அப்படி இவர்கள் ஐந்து பேர் என்றதும், அவர்கள் கவனம் முழுவதும் பூசையில் இருக்கும்போது நாம் பாய்ந்து சென்று தாக்க வேண்டும்! அப்போது வெற்றி நமக்குத்தான்!” என்றான்.

“அப்படியே செய்வோம் சேனாதிபதி!” என்று வீரன் ஆமோதிக்க, இருவரும் புதரில் மறைந்தனர்.

பசி வயிற்றைக் கிள்ளியது. எச்சிலைக் கூட்டி விழுங்கினான் விஜயவர்மன். அந்த எரிச்சல் இலேசாய்த் தணிவது போலிருந்தது. கண்களை மூடித்திறந்தான். பசி தணிந்து விட்டதற்கு அடையாளமா அது? புன்முறுவலுடன் அந்த வீரன் பக்கம் திரும்பினான்.

‘‘சேனதிபதி!’’

‘‘என்னப்பா?’’

முகத்தில் சோர்வு பரவ, ‘‘பேசாமல் தென்னை மரத்தில் ஏறியவன் இரண்டு இளநீரோடு இறங்கி வந்திருக்கக் கூடாதா?’’ என்ருன் ஆதங்கத்தோடு.

‘‘அதுதான் புத்திசாலித்தனம்! ஆனல் அதையெல்லாம் இப்போது திரும்பச் சொல்வது... இலட்சிய வீரர்கள் பசியை எதிர்பார்க்கக் கூடாது. பசியிருந்தால் காரியம்...’’—திரும்பவும் வயிறு எரிய எச்சிலைக் கூட்டி விழுங்கினன்.

உயரக் கிளம்பிய கதிரவன் ஒளி தகிக்க ஆரம்பித்தது.

ஏறக்குறைய உச்சியைச் சூரியன் நெருங்கிக் கொண்டிருக்கும்போது, பைரவர் சிலையை மலரினல் அலங்கரித்து, அதற்கு இருபக்கமும் தேங்காய்ப் பாளையை வைத்தான். தரையைச் சுத்தம் செய்து...பைரவர் சிலைக்கு எதிரிலிருந்த பலி பீடத்தை நீர் விட்டுத் துடைத்தான். வெட்டரிவாள் பலி பீடத்தின் அருகில் வைக்கப்பட்டது. சித்திரமாயன், வீரசேகரன் ஒரு பக்கம் நின்றனர். உச்சியைப் பார்த்து நாகபைரவன் வாய் எதையோ முணு முணுத்தது. மாட்டுக்கொம்பை எடுத்து ஊதினன். திரும்பவும் அவன் வாய் மந்திரத்தைச் சொல்லியது

கயல்விழி மண்டபத்தின் உள்ளே சென்று மயக்க நிலையிலிருந்த பல்லவ மல்லனைக் கொண்டு வந்தாள்.

‘‘அதோ!’’ - தன்னை மறந்து சிறிது உரக்கவே உணர்ச்சியின் மிகுதியால் சொன்ன விஜயவர்மன், தன் தவறை உணர்ந்து வாளை உருவிக் கொண்டான். பக்கத்திலிருந்த வீரனைத் தொட்டு ‘‘எச்சரிக்கை! நாம் விழிப்பாக இருக்க வேண்டும்! நாம் செலவிடுகிற ஒவ்வொரு நொடியும் நம் காரியம்

வெற்றியடைச் செலவிடப்படுகின்ற மதிப்பு வாய்ந்த பொருளுக்குச் சமமானது! நான், எழுந்து ஓட ஆரம்பித்ததும் நீ சிறிதும் தாமதியாமல் என் பின் தொடர வேண்டும்! அதற்கு முன் அவர்களுக்கும் நமக்குமுள்ள இடையேயுள்ள இடத்தை நன்கு பார்வையிட்டுக் கொள்! ஓடுவதில் எந்தவிதத் தொய்வும் இருக்கக் கூடாது! அவர்களையடைந்ததும் வாளின் வீச்சு வீணாகக் கூடாது! இரு தலைகள் உருள வேண்டும்!'' என்று ஓடத் தயாரானன் விஜயவர்மன்.

அங்கே நாக பைரவன் உரக்க வாய்விட்டு ஒரு பாடலைப் பாட ஆரம்பித்தான். அடிக்கடி வானத்தை அண்ணாந்து பார்த்து எதையோ சொன்னான். சோமன், அடிக்கடி தன் கழுத்திலிருந்த மாட்டுக் கொம்பை எடுத்து ஊதிக் கொண்டிருந்தான்.

அப்போது —

முகத்தில் அரும்பிய வியர்வைத் துளிகளைத் துடைத்து விட்டு, விஜயவர்மன் வாளுடன் ஓடத் தயாரானபோது, தொலைவில் குதிரைகள் வரும் ஓசை கேட்டது.

சிறுதும் இதை எதிர்ப் பார்க்காத விஜயவர்மன், என்னவென்று பார்த்தபோது, இவனுடன் வந்த வீரர்கள்தான் அவ்விதம் வேகமாக வந்து கொண்டிருந்தனர் என்பது தெரிந்தது.

அங்கே இருந்தவர்கள் அனைவர் கவனமும் குதிரை வரும் ஒலியின் பக்கம் திரும்பியது.

'யாரோ வருகிறார்கள்?' என்று சித்திரமாயன் மணல் மேட்டில் ஏற, கயல்விழி, அதற்குள், ''என்னைத் துரத்தியவர்கள்!'' என்று உரக்கக் கூவினாள்.

“அப்படியா?” என்ற அணைவரும் வாட்களுடன் எதிர்க்கத் தயாராயினர்.

“முட்டாள்கள்!” என்று முனிவுடன் கூறிய விஜயவர்மன், “காரியத்தைக் கெடுத்து விட்டார்களே!” என்ருன் சலிப்போடு.

“சேனுதிபதி, இதுவும் நல்ல சந்தர்ப்பம் தான்! நமக்குத் தாக்க வசதியாகப் போயிற்று!” என்ருன் உற்சாகத்துடன்.

ஆனுல் விஜயவர்மனுக்கு அந்த உற்சாகம் இல்லை. இன்னும் கொஞ்சம் சிறிது தாமதித்து வந்திருந்தால் நடப்பதே வேறுவிதமாக இருக்கும்! என்று குதிரை வீரர்களுடன் சேர்ந்து கொள்ள எழுந்தபோது தொலைவிலிருந்து அம்பு ஒன்று பாய்ந்து வந்து நாகபைரவன் அருகில் விழுந்தது.

“என்ன அம்பு? யார் விடுவது?” என்று சுற்றுமுற்றும் பார்த்தான்.

“ஒரு வேளை அவர்களின் ஆட்களோ வில் அம்புடன் மறைவில் இருக்கிருர்களோ?” என்று சந்தேகத்துடன் குழம்பி நின்றபோது, குதிரையில் வந்த நான்கு வீரர்களும், பல்லவ மல்லனையும் சித்திரமாயனையும் மற்றும் நாகபைரவனையும் மணற் சரிவின் கீழே நிற்பதைப் பார்த்து விட்டனர். நால்வரும் அவர்களை நோக்கி, “நீங்கள் யார்?” என்று கேட்க, அதற்குச் சித்திரமாயன் உரக்கச் சிரித்தான். இரண்டாம் பரமேசுவர வர்மன் மகன் அங்கே இருப்பதினுல் தாக்குவதில் தயக்கம் காட்டி நிற்கப் போகிருர்களென்று பயந்த விஜயவர்மன், புதரை விட்டு வேகமாக வெளியே வந்து, “பேசிக் கொண்டிருக்க நேரமில்லை அவர்களைப் பிடியுங்கள்!” என்று உரக்கக் கூவினுன்.

நான்கு வீரர்களும் புரவியிலிருந்து இறங்கி அவர்களை நோக்கிப் பாய்ந்தனர் வாட்களுடன்.

சித்திரமாயன் அருகிலிருந்த வீரசேகரன் தலை உருண்டது. குருதி கொப்பளிக்கத் துடித்த அந்த உடலைக் கண்ட சித்திர மாயனுக்கு ஆத்திரம் மிக, நால்வரில் ஒருவரை வாளினால் வீழ்த்தினான்.

இதற்குள் அங்கே வந்த விஜயவர்மன் நாகபைரனைத் தாக்க மணிக்கட்டுடன் வெட்டரிவாள் பிடித்த கை தூரப்போய் விழுந்தது.

கயல்விழி பல்லவ மல்லனுடன் மண்டபத்துக்குள் ஓடினாள். அவளைத் துரத்திப் பின்னால் ஓடிய வீரர்கள் ஒருவனின் முதுகில் சோமனின் குத்துவாள் பாய்ந்தது. அடுத்த கணமே அவனை நோக்கிப் பாய்ந்தான் விஜயவர்மன். வாள்முனை பட்டுச் சோமனின் கட்டைவிரல் தூரப்போய் விழுந்து துடிக்கலாயிற்று.

இதற்குள் கயல்விழி பல்லவமல்லனுடன் மண்டபத்துக்குள் மறைய, அவளைத் துரத்திப் பின்னால் போன விஜயவர்மன், அங்கே யாரையும் காணாது திகைத்து நின்றான்.

உள்ளே வெற்றிடமாக இருக்க, சுரங்க வழியில் போய் விட்டாளோ என்று அங்குமிங்கும் பரபரப்புடன் விஜயவர்மன் பார்க்க வேறுவழியாக அவன் பின்பக்கமாக வந்த கயல்விழி, கனத்த குறுந்தடியுடன் அவன் தலையை நோக்கிப் பாயத் தன் பின் மனித அரவம் கேட்டுத் திரும்புவதற்குள், அந்தக் குறுந்தடி அவன் தலையைப் பதம் பார்த்து விட்டது. மயங்கிக் கீழே சாய்ந்தான்.

அந்த உற்சாகத்துடன் அவள் வெளியே வந்த போது அங்கே நடந்த நிகழ்ச்சியைக் கண்டு திகைத்து விட்டாள்.

சித்திரமாயன் தோளின் ஒரு பகுதி வாளினால் வெட்டப் பட்டுக் குருதி சொட்டச் சொட்ட, அருகிலிருந்த குதிரையில் பாய்ந்து தப்பி ஓடிக் கொண்டிருந்தான். சோமன், ஆயுதம் எதுவு

மின்றி மணற்சரிவில் வீரர்களிடமிருந்து தப்பி அடர்ந்த புதரை நோக்கி வேகமாய் ஓடிக் கொண்டிருந்தான். தன் தந்தை ஒரு கையின் மணிக்கட்டு இழந்த அதிர்ச்சியில் மயக்கமுற்றுக் கீழே சாய்ந்திருந்தார்.

கயல்விழிக்கு ஒன்றும் புரியவில்லை. இதற்குள் சோமனைத் துரத்திச் சென்ற வீரர்கள், கயல்விழியைக் கவனித்து விட்டனர்.

"அவள் தான்! அவளிடம்தான் மல்லன் இருக்கின்றான்!" என்று சொல்ல, மூவரும் கயல்விழியை நோக்கி ஓடி வந்தனர்.

அவர்களிடமிருந்து தப்புவதற்காகப் பல்லவமல்லனைத் தோளில் சாய்த்துக் கொண்டு மண்டபக் கதவை மூடிக் கொண்டாள். ஓடிவந்த வீரர்கள் கதவை தட்டப் பின்பக்க வழியாகச் செடிகளைத் தள்ளிக்கொண்டு மணலின் மேற்பரப்புக்கு வந்தாள். நின்றிருந்த குதிரைகளில் ஒன்றைத் தப்புவதற்குப் பயன்படுத்தலாம் என்று முடிவு செய்வதற்குள், கதவைத் தட்டிய வீரர்களில் ஒருவன் அவளைக் கவனித்து விட்டான்.

"அதோ, வஞ்சகி, விடாதே பிடி!" என்று கத்த, 'இனி அதுவும் பயன்படாதென்று!' வேகமாக ஓட ஆரம்பித்தாள்.

மணற்பாதையில் ஓடி அடர்ந்த தென்னை மரங்களின் நடுவில் புகுந்து, பெரிய புதரை நோக்கி ஓடியபோது ஒரு கரம் அவளை இழுத்துப் புதருக்குள் மறைத்துக் கொண்டது.

யார்?

காபாலிக சமயத்திற்குரிய சின்னங்களுடன் ஆனால் பார்த்த முகமாகத் தெரியவில்லையே? என்று அவள் குழப்பத்துடன் அவனைப் பார்த்த போது, "உஸ் சப்தம் செய்யாதே! அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்!" என்றான் அக்காபாலிகன். கயல்விழி, பேசாமல் மௌனமானாள். ஓடி வந்தவர்கள்

அப்படியும் இப்படியும் பார்த்துவிட்டு, எந்தப் பக்கம் போயிருப்பாள் என்று இன்னொரு பக்கமாக ஓடக் காபாலிகன் அவள் தோளிலிருந்த பல்லவமல்லனை வாங்கிக் கொண்டான்.

"என்ன இன்னுமா இவனுக்கு மயக்கம் தெளியவில்லை?" என்று கேட்டான்.

"இல்லை, காலையில்தான் அழுது அமர்க்களப் படுத்துகிறான் என்று மயக்கம் கொடுத்தோம்!" என்று கூறிவிட்டு, "நீங்கள் யார்?" என்று கேட்டாள்.

"உங்கள் தந்தைக்கு வேண்டியவன்! உங்கள் நன்மைக்காகவே பாடுபடுபவன்!" என்று, "இந்தப் புதர் மறைப்பு நீண்ட நேரம் நம்மைப் பாதுகாக்க முடியாது! அதனால் நான் அதோ அந்தக் குதிரையில் அவர்கள் கண்களுக்குத் தெரியும்படியாக வேகமாகப் போய் அவர்கள் கவனத்தைத் திருப்பி விடுகின்றேன் நீ அதற்குள் தப்பித்துவிடு!" என்றான்.

"மல்லன்?" —என்றாள் கயல்விழி

"மல்லனை காஞ்சிக் காபாலிக மடத்தில் பத்திரமாகச் சேர்ப்பித்து விடுகின்றேன்!" என்றான்.

"உங்கள் பெயர்?"

புன்னகை புரிந்த அவன், "சாமன்" என்றான்,

"அந்த வீரர்கள் குதிரையில் உங்களைத் தொடர்வார்களே!"

"நிச்சயம் என்னை பிடிக்க முடியாது! இந்தக் குதிரையின் ஓடும் வேகத்திற்கு ஈடுகொடுத்து ஓட அவர்களிடம் குதிரை இல்லை! நான் தப்பிவிடுவேன்! என்னைப் பற்றிக் கவலை வேண்டாம் என்றான்.

திடீரென நிகழ்ந்துவிட்ட இந்த நிகழ்ச்சிகளால் நிலைகுலைந்து போயிருந்த கயல்விழிக்கு அப்போதைக்கு அவன் சொன்னது சரி என்றது போல் பட்டது. அதற்கு ஏற்றாற்போல புதரை நோக்கி வீரர்கள் வரும் ஓசை, அவள் காதில் விழுந்தது.

“தயக்கம் வேண்டாம்!” என்று புதரின் அருகிலிருந்த குதிரையில் தாவி ஏறினான். மணற் பாதையில் குதிரை அந்த மூன்று வீரர்களுக்கு முன்பாகத் தாவியது.

திடீரெனத் தங்கள் முன் காபாலிகன் ஒருவன், பல்லவ மல்லனுடன் குதிரையில் போவதைப் பார்த்துப் ‘பிடிபிடி’ என்று சப்தமிட்டபடி அவர்களும் புரவியில் துரத்தலாயினர்.

சிறிது நேரம் சென்றது. இதுவரை அமர்க்களப்பட்ட அப் பகுதி நிசப்தமாகியது. தொலைவில் புரவிகள் ஓடும் சப்தம் அவள் செவியில் விழப் புதரை விட்டு வெளியே வந்தாள். “தந்தையைக் கவனிக்க வேண்டும்!” என்று மணற் சரிவில் இறங்கி நாகபைரவன் பக்கம் சென்றாள். அதிக இரத்தம் வெளியேறியிருந்ததால் இன்னும் மயக்கநிலையிலே இருந்தான் அவன். மண்டபத்தின் பின்பக்க வழியாகச் சென்று, கதவுகளைத் திறந்து மரப்பெட்டியைத் திறந்து வெட்டுண்ட நாகபைரவன் கையில் மருந்து வைத்துக் கட்டினாள். அச்சமயம் மண்டபத்திற்குள் விஜயவர்மன் தலையில் பட்ட பலத்த அடி தாளாது முனகிக் கொண்டிருந்தான்.

12

பஞ்சணையில் மிகச் சோர்வுடன் படுத்திருந்தான் இராசசிம்மன். அமைச்சர் பிரம்மராயர். பிற்காலப் பல்லவ அரசு நிறுவக் காரணமான சிம்மவிஷ்ணுவின் தம்பியான பீமவர்மன்

வழி வந்த இரணியவர்மன்—பல்லவமல்லனின் தந்தை—தளபதி "பல்லவடி அரையன்" போசர் முதலானோர் நின்று கொண்டிருந்தனர்.

அரண்மனை மருத்துவர், 'பூரண ஓய்வு தேவை' என்று சொல்லி விட்டுப் போய்விட்டார்.

பிரம்மராயரை அருகில் அழைத்த இராசசிம்மன் அனைவரையும் ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தான்.

மிகவும் மெல்லிய குரலில் அவன் பேச ஆரம்பித்த போது, வேண்டாம் என்று அமைச்சர் பணிவுடன் குறிப்புக் காட்டினர்.

ஆனால் இராசசிம்மன், அதை ஏற்க மாட்டேன் என்று கண்களை இருபுறமும் ஓட்டி அசைத்து, "சில செய்திகளை நான் சொல்லித்தான் தீரவேண்டும்!" என்றான். பிறகு கனைத்து விட்டுப் பஞ்சணையிலிருந்து எழுந்து உட்கார்ந்தான்.

அதைக் கவனித்த பிரம்மராயர், "வேண்டாம் அரசே, படுத்த நிலையிலே சொல்லுங்கள்!" என்றார்.

"அமைச்சர் என்னை நிரந்தர நோயாளியாக்க விரும்புகின்றார் போலிருக்கு! ஆனால் நான் அப்படியல்ல!" என்று சிரித்தபடியே நிமிர்ந்து உட்கார்ந்தான்.

அனைவரும் மன்னர் என்ன சொல்லப் போகின்றார் என்பதிலேயே கவனமாக இருந்தனர்.

"அமைச்சரே, கொஞ்ச நாட்களாகவே பல்லவ ஆட்சிக்கு நல்ல நேரமில்லை என்றுதான் எனக்குப் படுகிறது! உடன் பிறந்தே கொல்லும் வியாதி என்பது போல என் மகன் வயிற்றில் பிறந்த சித்திரமாயன், நாட்டுக்கு விரோதமான செயல்களில்

ஈடுபட்டு மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டு, நமக்கு விரோதியான பாண்டியர்களிடமும், சாளுக்கியர்களிடமும் நட்பு வைத்துக் கொண்டிருக்கின்ருன். அவனை அரச குடும்பத்தைச் சேர்ந்தவன் என்றே மக்கள் மதித்ததாகத் தெரியவில்லை. அதைப்பற்றி அவனும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. மக்கள் வெறுப்பைச் சம்பாதித்த காபாலிகர்களுடன் கைகோத்துத் திரிந்த வண்ணம் இருக்கின்ருன். இதற்கு நடுவில் ஒற்றர்கள் மூலம் நமக்குத் தெரிந்த செய்தி என்னவென்ருல் பாண்டியர்கள் சித்திரமாயனுக்கு வாக்குறுதி அளித்திருக்கிருர்களாம்! என்ன வாக்குறுதி என்று பார்த்தால் சித்திரமாயனுக்குப் பல்லவ ஆட்சியைத் தருவதாக வாக்குறுதியாம்! இவர்கள் யார் வாக்குறுதி தருவதற்கு? ஆட்சிப் பொறுப்பைச் சித்திரமாயனுக்குக் கொடுப்பதும் கொடுக்காததும் யார் முடிவு செய்ய வேண்டும்? இவர்கள் என்ன நமக்குப் பங்காளிகளா? அல்லது பல்லவ நாட்டு மக்களா? ஒருவர் விவகாரத்தில் ஒருவர் குறுக்கிடுவது எவ்வளவு தவறு என்று அவர்களுக்குப் புரியவில்லையா? என்ன செய்வது? நம் கையே நமக்குச் சரியில்லை. யாரை நோவது? மிகவும் இக்கட்டான இந்நிலையில் பல்லவமல்லன் கடத்தப்பட்டு விட்டான்! அவனைத் தேடிச் சென்ற விஜயவர்மனைப் பற்றித் தகவல் இல்லை...அவனுடன் சென்ற பத்து வீரர்களில் ஏழு பேர்தான் திரும்பியிருக்கின்றனர். இதற்கெல்லாம் காரணமாகக் காபாலிகக் கும்பல் ஒன்றே பின்னுல் செயல்படுவதாக எனக்குப் படுகிறது! யாரை நம்புவது யாரை நம்பாதிருப்பது? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அப்பேர்ப்பட்ட கொடிய பஞ்சம் வந்தபோது கூடக் காஞ்சி நகரையே மக்கள் காலி செய்தபோது கூட, நான் மனம் தளராது பல்லவ ஆட்சியைக் காப்பாற்றி, மறுபடியும் இக்காஞ்சியைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்திருக்கின்றேன்! இன்று?'' சிறிது மௌனம் சாதித்தான் மன்னன். பிறகு கனைத்துவிட்டு மீண்டும் பேசத் துவங்கினுன்:

''மல்லன் கடத்தப்பட்டு விட்டான்! நாட்டில் ஒற்றர் படை செயல்படுவதில் பலவீனம் ஏற்பட்டு விட்டது! இல்லை

யென்ருல் அரண்மனைக் காவலை மீறி அந்தப் பெண் மல்லனைக் கடத்தியிருக்கிருள் என்ருல்...? அத்துடன் சிறந்த வீரனை இழந்து விட்டிருக்கிரேம். இன்னும் என்னென்ன நடக்கப் போகிறதோ? இதற்கெல்லாம் மாற்று நடவடிக்கையாக என்ன வைத்திருக்கிருரோ அமைச்சர்!...இவ்வளவு படைபலம் இருந் தென்ன?... சிறப்பு இருந்தென்ன?...எல்லாவற்றையும் ஏப்பம் விடுவது போல் ஒரு சிறிய கும்பல் செயல்படுகிறது! எனவே நான் உங்களுக்குக் கட்டளையிடுவது என்னவென்ருல் பல்லவ மல்லன் கண்டுபிடிக்கப்படவேண்டும்! அவனைத் தேடிச் சென்ற விஜயவர்மனைப் பற்றித் தகவல் தெரிய வேண்டும்! காஞ்சியில் காபாலிக உருவில் நடமாடுகின்ற வஞ்சகக் கூட்டத்தை ஒழிக்க வேண்டும்! பாண்டியர்களின் ஆணவத்தை அடக்க வேண்டும்! இதற்கு யார் முன் நின்று இதையெல்லாம் செய்யப் போகிறீர் கள்?... இதைச் செய்யாதவரை பல்லவ ஆட்சி சிறப்பாக இருக் கிறது என்று சொல்ல யாருக்கும் உரிமையில்லை...ஏன், என்னை யும் சேர்த்துத்தான்...!'' என்று அதற்கு மேல் மன்னனுல் பேச முடியாததால் மௌனமானுன்.

இரணியவர்மன் இராசசிம்மன் அருகில் வந்தான்.

''என்ன இரணியவர்மா?''

''உங்களிடம் ஒரு முக்கியச் செய்தியைச் சொல்லப் போகின்றேன்!''

''என்ன செய்தி?''

''பல்லவமல்லன் காணுமற் போனதைப் பற்றி நீங்கள் அளவு கடந்த மனக்கவலையடைந்ததாகத் தெரிகிறது! ஆனுல் நான் அவனைப் பெற்றவன்...அதைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளவில்லை!''

''அத்துடன் ஒரு செய்தி?'' என்று குனிந்து மன்னன் செவியில் எதையோ இரகசியமாகச் சொன்னுன். ''இந்தச்

செய்தி இங்கு இருக்கும் அனைவருக்கும் தெரியும்! நாட்டின் நன்மைக்காக இதை மறைத்தே வைக்க விரும்புகின்றேன்!'' என்றான்.

மன்னன் முகம் அதைக் கேட்டு அளவற்ற மகிழ்ச்சியில் நிலவியது.

''எல்லோரும் சேர்ந்து இவ்வளவு கெட்டிக்காரத்தனமாகச் செயல்படுவதைக் கண்டு எனக்குப் பெருமைதான்! இவ்வளவு இரகசியமாக வைத்திருப்பதை நானும் இரகசியமாகவே வைத்துக் கொள்கின்றேன்! நான் உடனே அவனைப் பார்க்க வேண்டுமே!''

''அதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது... இன்று இரவு அரண்மனை உறக்கத்தில் ஆழ்ந்ததும் உங்கள் அறையில் அவன் இருப்பான்!'' என்றான் இரணியவர்மன்.

''நல்லது! இப்போதுதான் எனக்கு அளவற்ற மகிழ்ச்சியாக இருக்கிறது! விஜயவர்மன் பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா?''

அமைச்சர் குறுக்கிட்டார்.

''ஆட்களை அனுப்பியிருக்கிறோம் மன்னா! விரைவில் நல்ல செய்தி கிடைக்கும் என்று நினைக்கின்றேன்!'' என்றார்.

''எனக்கு மிகக் களைப்பாக இருக்கிறது! அத்துடன் இது வரை மனதில் இருந்த துக்கம் போன இடம் தெரியவில்லை... எல்லாம் நல்லபடியாக முடிய அந்த ஈசன்தான் கருணை வைக்க வேண்டும்? என்று பஞ்சணையில் சாய்ந்தான்.

அனைவரும் மன்னன் ஓய்வுக் கொள்ளட்டுமென்று அந்த அறையை விட்டு வெளியே வந்தனர்.

13

அலைகளின் ஆரவாரம் பெரிதாகக் கேட்க, அந்தக் குகையில் சில்லென்று குளிர்ந்த காற்று வீசியது.

விஜயவர்மன் கண் விழித்தான்.

தலையில் பலமான கட்டு. கை கால்களை அசைக்க முடியவில்லை.

'என்ன இது? எங்கே இருக்கின்றேன்?' எழ முயன்று, முடியாததால் தன் கை கால்களைப் பார்த்தான். கைகள் இரண்டும் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தன. கால்களில் ஒன்று தரையோடு சேர்த்துச் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தது.

'சிறை வைக்கப்பட்டிருக்கின்றேன்! யாரால்? திரும்பிச் சுற்றுமுற்றும் கவனித்தான். அவ்வளவு வெளிச்சம் இன்றி, ஆனால் சிறு குன்றில் குடையப்பட்ட குகைபோல் இருக்கிறது. கீழே ஒரு சங்கிலியைப் புதைத்துக் காலை அதில் இணைத்திருக்கிறார்கள். கைகள் கற்சுவரில் அமைக்கப்பட்டிருக்கும் சங்கிலியால் கட்டி விட்டிருக்கிறார்கள். யார் செய்திருப்பார்கள்? ஒருவேளை அந்தக் காபாலிகர்களா? ஆனால் கைகள் மட்டும் வாய்வரை வரும் அளவுக்குத் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொண்டிருக்கின்றார்கள்! மகா புண்ணியவான்கள்!''

அந்தத் தாராளத்தைப் பயன்படுத்தி விஜயவர்மன் சிறிது நிமிர்ந்து கற்சுவரில் சாய்ந்தான். குகை வாயிலில் ஒருவன் நின்று கொண்டிருப்பது அவன் கண்களுக்குத் தெரிந்தது. நாவறட்சியால் தொண்டை உலர்ந்திருக்கக் குடிக்க தண்ணீர் தேவையாயிருந்தது.

"தண்ணீர்!" என்று கத்தினான் உரக்க. வார்த்தைகள் தொண்டையிலிருந்து வர மறுத்ததால் முயன்று உரக்கத் "தண்ணீர்!" என்று கூவினான்.

நின்றிருந்த அவன், நிதானமாக இவனை நோக்கி வந்தான்.

கிட்டவந்த பிறகுதான், சத்திரத்தில் பார்த்த சோமன் என்று தெரிந்தது. வலக்கை கட்டை விரல் காணவில்லை. அங்கே பச்சிலை வைத்துக் கட்டியிருந்தான்.

இவனைப் பார்க்கப் பார்க்க, அவனுக்குச் சினம் மிக, "என்ன கேட்டாய்?" என்றான்.

"தண்ணீர்!"—விஜயவர்மன் கண்கள் பரிதாபமாக அங்கு மிங்கும் அலைந்தன.

சோமன் அதைக் கேட்டு இடிஇடியென்று உரக்கச் சிரித்து, "என்ன கேட்டாய்?" என்றான் மீண்டும்!

"தண்ணீர்!"—இம்முறை அழுத்திச் சொன்னான்.

"தண்ணீர்!...அதோ இருக்கிறது" என்று மூலையிலிருந்த மட்பானையைக் காட்டிச் சொன்னான்.

"என் கைகள் பிணைக்கப்பட்டிருக்கின்றனவே! நான் எப்படி அதை எடுத்துப் பருக முடியும்?"

"உண்மை! ஆனால் எனக்கு இடக்கை பழக்கம் வராது! வலக்கை கட்டைவிரல் உன்னால் துண்டிக்கப்பட்டு விட்டது! அதனால் எதையும் செய்ய முடியாத நிலையில் நான் இருக்கின்றேன்!"

"வேறு யாரும் இல்லையா?"

சோமனுக்குப் கோபம் கொப்பளித்து வந்தது.

"என்ன கேட்டாய்? வேறு யாரும் இல்லையா என்றா?"—பற்கள் அந்த கோபத்தினால் கடகடவென்று கடிக்கப்பட்டன. விழிகள் சிவந்தன. அருகில் நெருங்கி வந்தான்.

"சிறை நாய்க்கு என்ன தண்ணீர் வேண்டிக் கிடக்கு? பேசாமல் கிட! சும்மா இருப்பதே பெறும் சுகம் என்பது உனக்குத் தெரியாதா?"

"சிறை நாய்களை எங்கள் பல்லவ நாட்டில் அரசின் பெருமைக்குரிய விருந்தினராக நடத்துவோம்! அவசியம் ஏற்பட்டாலன்றி அவர்கள் மனம் நோக எதையும் செய்ய மாட்டோம்! ஆனால் இங்கே...?"

"என்னடா தத்துவம் பேசுகிறாய்? நாவறட்சி யுடையவன் போலவா பேசுகிறாய்? கள்ளன்!" என்று அவனை அடிக்க நெருங்கினான்.

"சோமா நில்!" என்று ஒரு குரல் பின்னாலிருந்து வந்தது.

திரும்பினான்.

அங்கே—

கயல்விழியும், நாகபைரவனும் நின்று கொண்டிருந்தனர்.

"என்ன மாமா...என்ன கயல்விழி?" என்று வினவ. "நம் ஆட்சியிலும் சிறை விருந்தினர் மதிப்புக்குரிய விருந்தினராகத் தான் நடத்தப்படுவர்! அதை ஏன் நீ மறந்து விட்டாய்?" என்று நாகபைரவன் கேட்டான்.

சோமனுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. முகத்தில் அசட்டுச் சிரிப்புத் தோன்றத் தலை குனிந்தான். கயல்விழி, மட்பானையைத் திறந்து குவளையில் நீரை முகந்து அவன் கையில் கொடுத்தாள். விஜயவர்மன், அதைக் குடித்துவிட்டுக் குவளையை அவளிடம் நீட்டக் கயல்விழி வாங்கிக் கொண்டாள்.

நாகபைரவனுக்கு வலக்கை மணிக்கட்டுவரை காணவில்லை. அதில் பச்சிலை வைத்துக் கட்டியிருந்தார்கள். விஜயவர்மன் அதைக் கவனித்தான்.

"என்ன பார்க்கிருய்? எல்லாம் உன் கைங்கர்யம்தான்!" என்ருன் நாகபைரவன்.

விஜயவர்மன் அந்த வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

"மல்லன் எங்கே?" என்ருன்.

"அவசியம் தெரிய வேண்டுமா?"

"ஆமாம்!"

"பைரவருக்குப் பலி கொடுத்து விட்டோம் என்று சொல்லவில்லை. ஆனுல் பத்திரமாக இருக்கின்ருன் பைரவருக்குப் பலி தருவதற்காக!"

"பலி... பலி... பாழும் இந்தப் பலி எப்போதுதான் ஓயுமோ?"

"ஏன் உனக்கு இதைக் கேட்டு எரிச்சல் வருகிறது! கடவுளுக்குக் காணிக்கை தரப் போகிருேம்! அநீதி நடக்கும் போது, இம்மாதிரி பலிகள் தேவைப்படுகின்றன! அப்படித் தராது போனுல் இந்தக் கடல் ஒரு கட்டுக்குள் அடங்கி இருக்காது வானம் வழங்காது. ஞாயிறும், திங்களும் தங்கள் வேலையினைச் செய்யமாட்டா! இவ்விதம் இயற்கை தன் கடமையினைச் செய்யத் தவறினுல் என்ன நடக்கும் இப் பூவுலகில்...அதைச் சிந்தித்துப் பார்த்தாயா?"

விஜயவர்மனுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

"ஏன் சிரிக்கிருய் அற்பப் பதரே! உனக்கு என்ன தெரியும் எங்கள் சமயத்தைப் பற்றி! இன்று காஞ்சி ஓரளவு சுபீட்சமாக இருப்பதற்கு எங்கள் சமய வழிபாடுதான் காரணம்! இல்லையென்ருல் தற்போது இறந்துவிட்ட இராசசிம்மன் ஒரு காலத்தில் கஞ்சிக்காகக் கலயம் தூக்கிக் கொண்டு காஞ்சி முழுவதும் சுற்றி வந்தானே... அதை மறந்து விட்டாயா?"

"என்ன... இறந்து விட்டாரா மன்னர்? என்ன சொல் கிறீர்கள் நீங்கள்?" என்று வியப்புடன் குழப்பமும் திகைப்பும் சேரக் கேட்டான் விஜயவர்மன்.

"ஆமாம்! கிழக்கேட்டான் கண்ணை மூடிவிட்டது! இனி எங்களுக்கு எந்தத் தொல்லையும் இருக்காது! அடுத்துப் பட்டம் சூட்டிக் கொள்ளப் போகிற பரமேசுவரவர்மனையும் ஒழிப்போம். சக்கரவர்த்தி சித்திரமாயன் அவர்களை அரசு கட்டில் ஏற்றும் வரை நாங்கள் ஓயப் போவதில்லை."

"அடப்பாவிகளா, மன்னரைக் கொன்று விட்டீர்களா?"

"நாங்கள் ஏன் அந்தக் கிழபுலியைக் கொல்லப் போகிறோம்? போகும் நேரம் வந்தது! போய் விட்டது. இயற்கை மரணம் என்று உங்கள் பல்லவநாட்டு உள்படு கருமத்தலைவர் கூறி, அமைச்சரின் அறிவிப்பு முரசு மூலம் நாடெங்கும் அறிவிக்கப் பட்டு விட்டதே!"

"இந்தச் செய்தி கேட்டு ஏன் நான் இன்னும் உயிரோடிருக் கின்றேன்!... என்னைக் கொன்று விடுங்கள்..." என்று விஜய வர்மன் கைகளால் தலையை அடித்துக் கொள்ள முயன்று, வாய் வரை வந்த கை, அதற்குமேல் போகாமல், இழுத்து, அதை அறுக்கத் துள்ளினான்.

முடியவில்லை.

"இந்தமாதிரி முயற்சிகளை நீ மேற் கொள்வாய் என்று தெரிந்துதான் பலமான சங்கிலியாகப் போட்டிருக்கிறோம். அதனால் தப்பிக்க முயல்வது என்பது அறிவுடைய செயல் ஆகாது!"

"இந்தச் செய்தியைக் கேட்ட பிறகு நான் வாழ விரும்ப வில்லை. என்னைக் கொன்று விடுங்கள்... என் மார்பில் உங்கள்

வாளிணைப் பாய்ச்சி வெஞ்சினம் முடித்துக் கொள்ளுங்கள்! நான் சாக விரும்புகின்றேன்" என்ருன் விஜயவர்மன்.

"உன்ணை இப்போது கொல்வதால் எங்களுக்கு எந்தவித இலாபமும் இல்லை. நீ இப்போது எங்களுக்குத் தங்கச் சுரங்கம். உன்ணை வைத்துத்தான் நாங்கள் நிறையச் சம்பாதிக்க விரும்புகிருேம்! அதனுல் பதட்டப்படாமல் நிதானமாக உயிர் வாழ்ந்து கொண்டிரு!" என்று நாகபைரவன் வெளியே போகத் திரும்பினுன். பின்னுல் கயல்விழி வந்தாள். சோமணைப் பார்த்து நாகபைரவன், பத்திரமாகப் பார்த்துக்கொள்!" என்று கூறிவிட்டுக் கயல்விழியைத் தன் பின் வரும்படி சைகை செய்து வெளியே வந்தான். ஏறக்குறைய இருநூறு முழ தூரத்துக்கு அப்பால் அலைகள் ஆரவாரத்துடன் எழும்பிக் கரையில் மோதிக் கொண்டிருந்தன. அந்தக் குகை இருந்த இடத்தைச் சுற்றிக் குன்றுகள் நிறைய விரவிக் கிடந்தன. மறைந்திருப்பதற்காகவே செயற்கையாக அமைக்கப்பட்ட அந்தக் குகை, நாக பைரவனுக்கும் அவனைச் சார்ந்த கூட்டத்திற்கும் வசதியாக இருந்தது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை மணற் பரப்பு குன்றை மறைத்தது போலத் தென்ணை மரங்கள் மண்டிக் கிடந்தன. அதைத் தாண்டிச் சமமான இடத்தில் கடல் மணலைச் சரி செய்து கீழே உட்கார்ந்தான். கயல்விழி அவனுக்கு எதிரில் அமர்ந்தாள்.

"கிழவன் இராசசிம்மன் இறந்து விட்டான்! நமக்கிருந்த பெரிய தடை விலகிப் போனதுபோல இருக்கிறது! அடுத்துப் பரமேசுவரவர்மன் பட்டத்துக்கு வருவதாகப் பேசிக் கொள்கிருர்கள் என்று சாம்பன் மூலம் செய்தி வந்திருக்கிறது... அந்த மணற்சரிவையும், மண்டபத்தையும் இனிமேல் நாம் கைகழுவி விடவேண்டியதுதான்! எதிரிகளுக்கு அந்த இடம் தெரிந்து போய் விட்டது! பாண்டிய மன்னன் கோச்சடையன் இரணதீரன் என்ணை வரும்படி அழைப்பு அனுப்பியிருக்கின்ருன் நம் சித்திரமாயன்கூட அங்கேதான் தோளில் ஏற்பட்ட காயத்திற்குச் சிகிச்சை பெற்று வருகிருராம்... முக்கியச் செய்தி

இல்லாமல் என்னை வரச் சொல்ல மாட்டார் பாண்டிய மன்னர். அதனால் நான் விரைந்து போக வேண்டும்! நான் திரும்பி வரும் வரை நீ எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்! விஜயவர்மன் தப்பிவிடப் போகின்றான்! அவனை வைத்துத்தான் நிறையப் பொற்காசுகளைப் பல்லவ ஆட்சியிடமிருந்து பெறவேண்டும்! நான் சீக்கிரம் மதுரை சென்று திரும்பி விடுகின்றேன்! அதுவரை நீ விழிப்புடன் இருக்க வேண்டும். ஆமாம் பல்லவமல்லனைப் பற்றி ஒரு செய்தியும் தெரியவில்லையே! காஞ்சிக் காபாலிக மடத்திற்கு இன்னும் போய் அவன் சேரவில்லையாமே! ஏன் கயல்விழி, கைக்கு எட்டியதை வாய்க்கு எட்டாதபடி செய்து விட்டாயே! எனக்கு வேண்டியவன் என்று சொன்னதுமே யோசனையில்லாமல் அவனிடம் மல்லனை ஒப்படைக்கலாமா?... ம்... அவன் யார்... பெயர் சாமன் என்று சொல்கிறாய்? அப்பேற்பட்டவன் எனக்கு... என்ன இது? ஒரே குழப்பமாக இருக்கிறது!... புரவியில் சென்றவன் அரண்மனை வீரர்களிடம் மாட்டிக் கொண்டு விட்டானா?... அரண்மனையில் கூடப் பல்லவமல்லன் கிடைத்த மாதிரி எதுவும் தெரியவில்லையே!... ம்...'' என்று நிறுத்தினான் நாகபைரவன்.

கயல்விழி, சில கண்ணிமைப் பொழுதுகள் மௌனம் சாதித்து விட்டுச் சொன்னாள்.

‘‘அந்த நேரம் நான் மிகக் குழம்பி விட்டிருந்தேன் அப்பா. ஒரு பக்கம் நீங்கள் மயக்கம் அடைந்து கீழே சவம்போல் விழுந்து விட்டீர்கள்! சக்கரவர்த்தி தோளில் காயத்துடன் குதிரையில் போய் விட்டார். சோமன், ஆயுதம் எதுவுமின்றி அவர்களிடம் அகப்பட்டுக் கொள்ளும் நிலையில் இருந்தான். நானும் அவர்களிடம் சிக்கும்படியான நிலையில் இருந்தேன். அச்சமயம் பார்த்து அந்தக் காபாலிகன், எனக்கு நன்மை செய்வதுபோல் பேசி விட்டான்... நானும் மயங்கி...'' அதற்கு மேல் பேசாமல், ‘‘என்னை மன்னித்து விடுங்கள் அப்பா! இனிமேல் இம்மாதிரி நடக்காது!'' என்றாள்.

"உன் நிலையும் எனக்குப் புரிகிறது! ஆனால் எச்சரிக்கை வேண்டும் என்று சொன்னேன். மயக்க நிலையிலிருந்த என்னை யும், விஜயவர்மனையும் நீ, சோமன் உதவியுடன் இந்தக் குகைக்குக் கொண்டு வந்ததே பெரிய காரியம்தான்! தக்க நேரத்தில் எனக்கும் விஜயவர்மனுக்கும் சிகிச்சை செய்து காப்பாற்றியிருக்கிறாய்! நான் எதற்குச் சொல்கின்றேன் என்றால் வலிமை வாய்ந்த ஒரு அரசை மூன்று, நான்குபேர்களுடன் நாம் எதிர்த்துக் கொண்டிருக்கிறோம்! அதனால் மிக விழிப்பாக இருக்க வேண்டும் என்றுதான் சொல்கின்றேன்!" என்றான்.

கயல்விழி, "இம்மாதிரி இனிமேல் எச்சரிக்கையில்லாமல் நடக்க மாட்டேன்! நீங்கள் கவலைப்படாதீர்கள்!" என்றாள்.

"சாக்கிரதை! நான் கூடல்மா நகர் புறப்படுகின்றேன். திரும்பி வரும் வரை மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்!' என்று எழுந்தான். கயல்விழியும் அவனுடன் எழுந்து கொண்டாள்.

இருவரும் குகையை நோக்கி நடந்தனர்.

14

மதிற்கச்சி எனத் தேவாரத் திருப்பதிகத்தில் சிறப்பித்துக் கூறப்படும் அக்காஞ்சியின் உயர்ந்த கோட்டைச் சுவரில் வீரர்களின் காவல் பலத்திருந்தது. ஏறத்தாழ ஆறு கல் சுற்றளவு பரப்புடன், மேற்கிலிருந்து கிழக்கே வில்லைப்போல் வளைந்து, அகன்ற தெருக்கள் பல கொண்ட அக்காஞ்சியின் அரசவீதியில் இரண்டாம் பரமேசுவரவர்மனின் தேர், வேகமாகச் சென்று கொண்டிருந்தது. மக்கள் கூட்டம், மன்னனை வாழ்த்தி முழங்க, வீரர்கள் அணிவகுத்துச் செல்ல, அணிதேரும் புரவியும், ஆட்பெரும் படையும், யானையும் மன்னன் தேருக்கு முன்னும்

புறமும் செல்லத் திருவிழாக் கோலம் பூண்டிருந்தது காஞ்சிமா நகர்.

கடல் திரண்டு ஒய்ந்தது போலச் சற்றுமுன் மன்னன் வரவால் அமர்க்களப்பட்ட அந்த அரசவீதி, இப்போது, ஒலி அடங்கி, மக்கள் கூட்டம், அமைதியுடன் கலைந்து கொண் டிருந்தது.

மன்னரின் தோற்றத்தைச் சிலாகித்தும், அவரின் தேர், புரவி, யானை, வீரர்கள் இவற்றின் அணிவகுப்பை வியந்தும், முகத்தில் தவழ்ந்த அரச களையையும் புகழ்ந்து பேசும் அந்தப் பேச்சுக்களைக் கவனித்தபடி, ஒரு காபாலிகன், வீதியோரமாக நின்று கொண்டிருந்தான்.

அவன் பார்வை வீதியில் போவோரை வெறித்து நோக்கிய படி இருந்தது,

"வணக்கம் சுவாமிகளே!" — காபாலிகன் அருகே வந்த ஒருவன் கைகுவித்து வணங்கினான்.

யார்? — காபாலிகன் கேள்வி அவன் பார்வையிலேயே இருந்தது.

"அடியேன் பெயர் சாம்பனுங்க!" என்று சொல்லிவிட்டு அர்த்த புஷ்டியுடன் கண் சிமிட்டினான்.

"ஓ..." — புரிந்து கொண்டதுபோல காபாலிகனும், சாம்பனும் இராச வீதியிலிருந்து புத்தர் தெருவுக்குச் செல்லும் வீதி நோக்கி நடந்தனர்.

"சாமிகள் எந்த ஊரோ? காஞ்சிக்குப் புதியவர் போல் தோன்றுகின்றதே!" என்றான் சாம்பன் புன்முறுவலுடன்.

"நாகபைரவர் பெயரைத் தாங்கள் கேள்விப் பட்டிருந்தால் என்னைப் புதியவராகப் பார்க்க எண்ணம் வராது!" என்றான் அக் காபாலிகன்.

"ஓ... நாகபைரவர்... என்ற சாம்பன், "உங்களுக்கு அவரைத் தெரியுமா?" என்ருன்.

காபாலிகன் சிரித்தான்.

"எனக்கு நண்பர்!" என்ருன்.

"தாங்கள் காஞ்சிக் காபாலிக மடத்திலா தங்கியிருக் கின்றீர்கள்?"

"இல்லை!"

"அதுதானே கேட்டேன்! காபாலிக மடத்தில் தங்கிருக்கிற அத்தனை பேரையும் எனக்குத் தெரியுமே! அதனுல்தான் உங்களை பார்த்ததில்லை என்றேன்!"

"ஆனுல் உன்னை எனக்குத் தெரியும்!" என்ருன் அக் காபாலிகன் தன் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் காட்டாது.

உடனே சாம்பனுக்கு முகம் மாறியது. "எப்படி?" என்ருன்.

"மணிப்புரு... செய்தி... இந்த இரு வார்த்தைகள் போதும் என்று நினைக்கின்றேன்!"

உடனே சாம்பனின் குரல் கம்மியது. "மன்னிக்க வேண்டும் சுவாமிகளே! தாங்கள் யாரோ, எதுவோ என்று ஒரு மாதிரி பேசிவிட்டேன்! அதற்காக மன்னித்து விடுங்கள்!"

"நரகபைரவரின் வெட்டப்பட்ட மணிக்கட்டு ஆறி விட்டதா?" என்ருன்.

"சிரமப்படுகிருர்! மாமல்லையில் சித்திர மூல மூலிகை கிடைக்கவில்லை என்று செய்தி வந்தது. இங்கிருந்து அனுப்பி யிருந்தேன்! இப்போது தேவலை... அவர் கூடப் பாண்டிய நாடு புறப்பட்டு விட்டதாகக் கேள்வி!"

காபாலிகன் நின்ருன். பின்னுல் அரசாங்கத்தைச் சேர்ந்த வீரன் கையில் வேலுடன் வந்து கொண்டிருந்தான்.

"கொஞ்சம் அப் புறம் போய்ப் பேசலாமே! ஏனென்றால் காஞ்சிக் கோட்டைக்கு ஆயிரக்கணக்கில் செவிகள்... அந்தச் செவியில் நாம் பேசுகின்ற செய்தி ஏன் நுழைய வேண்டும்?" என்று சிரித்தபடி கூறினான் காபாலிகன்.

"உண்மை! வாருங்கள்! அப்புறம் போகலாம்!" என்று அரச மர நிழலில் இருவரும் நின்றனர்.

வேலுடன் வந்த வீரன். இவர்களைப் பார்த்தபடியே, எதையோ சொல்லிக் கொண்டே சிரித்தவாறு சென்றான்.

காபாலிகன், அதைச் சுட்டிக் காட்டிவிட்டுச் சொன்னான்.

"காஞ்சி அரசர்களுக்கே காபாலிக மதம் என்றாலே நகைப்புக்குரிய விஷயம்தான் போலும்! இல்லையென்றால் அந்த வீரன், ஏன் சிரித்துக் கொண்டே எதையோ சொல்லி விட்டுச் செல்கின்றான்! இப்படித்தான் இராசசிம்மன் நம் வயிற்றெரிச் சலைக் கொட்டிக் கொண்டான். ஆண்டவனுக்கே மனம் இல்லாமல் அவனைப் பாசக் கயிற்றில் பிணைத்து ஆவியைப் போக்கி விட்டார்! அடுத்து வந்திருக்கின்றான் பரமேசுவர வர்மன்! இவன் எத்தனை நாளைக்கோ? நம் தலைவர் சித்திர மாயனை ஆட்சிப் பொறுப்பில் ஏற்கும் வரை நாம் ஓயக்கூடாது!" என்றான்.

"ஆம்! நீங்கள் சொல்வதுதான் உண்மை!"

"இப்போது! அந்தத் தென்னந்தோப்பில் இல்லை போலிருக்கே!"

"ஆமாம், எதிரிகளுக்கு அந்த இடம் தெரிந்து விட்டதென்று குகைக்குப் போய் விட்டார்கள்!"

"குகை...?" என்ற காபாலிகன் புரியாமல் சாம்பனைப் பார்க்க, "அதான் கடல் பக்கம் இருக்கும் குகை!" என்றான்.

உடனே காபாலிகன் சமாளித்து, "ஆமாம்! ஆமாம்!" என்றான்.

"பல்லவமல்லனைப் பற்றி ஏதாவது செய்தி தெரிந்ததா?" என்று மெல்லக் கேட்டான் காபாலிகன்.

"யாரோ ஒருவன் காஞ்சிக் காபாலிக மடத்தில் சேர்ப்பதாகச் சொல்லிக் கயல்விழியிடமிருந்து ஏமாற்றி வாங்கியிருக்கிறான். இன்னும் மடத்துக்கு வந்து சேரவில்லை!" என்றான்.

"நல்லது நான் வரட்டுமா சாம்பா?"

"என்ன சுவாமிகளே, புறப்பட்டு விட்டீர்கள்?"

"எனக்கு அவசர வேலை... நாளை இதே நேரத்தில் இங்கு வந்து சந்திக்கின்றேன்! வரட்டுமா?"

சாம்பன், தலையசைத்தான். காபாலிகன், அங்கிருந்து வேகமாக நடக்கத் துவங்கினான்.

அரசமரத்தின் கீழிருந்த சாம்பன் போவதற்காகத் திரும்ப, "என்ன சாம்பனாரே, அரசமரத்தின் கீழ்த் தவமா?" என்ற கேள்வி பின்னாலிருந்து வந்தது.

சாம்பன் நின்று பார்த்தான். காபாலிகன் ஒருவன் தன் பெருத்த உடம்பை அசைக்க முடியாதபடி அசைத்த வண்ணம் நடந்து வந்து கொண்டிருந்தான்.

"ஓ, நீங்களா? என்ன இது? இன்று ஒரே சாமிகள் தரிசனமாக இருக்கிறதே!" என்றான்.

"சாமிகள் தரிசனமா? என்ன?" என்று புரியாமல் அந்தக் காபாலிகன் வினவச் சாம்பன், தொலைவில் சென்று கொண்டிருந்த காபாலிகனைச் சுட்டி, "அதோ பாருங்கள்! அவரிடம் தான் இதுவரை பேசிக் கொண்டிருந்தேன்!" என்றான்.

"அவரா," என்று பார்த்து விட்டு, புதியவராக இருக்கிறாரே, யார், நம் மடத்தைச் சேர்ந்தவரா?" என்றான்.

"இல்லை, நாகபைரவருக்கு நண்பராம்!" என்றான் சாம்பன்.

"நாகபைரவர்... கூப்பிடப்பா! அவரிடம் அவசரமாகப் பேச வேண்டியிருக்கிறது!" என்றான் காபாலிகன்.

சாம்பன் கை தட்டினுன். தொலேவில் சென்று கொண் டிருந்த காபாலிகன் நின்று, 'என்ன செய்தி?' என்று கைச் சாடையால் கேட்கச் சாம்பன், அருகிலிருந்த காபாலிகனேச் சுட்டி, "இவர் பேச வேண்டுமாம்!" என்ருன்.

'அப்புறம் பார்க்கலாம்' என்று கைச் சாடை காட்டிக் காபாலிகன், திருப்பத்தில் வேகமாய் நடந்து மறைந்தான்.

பருத்த உடம்புடனிருந்த காபாலிகன், "இவன் காபாலிகன் இல்லேயப்பா! கள்ளன்! இவன் தான் கயல்விழியிடமிருந்து பல்லவமல்லனேக் கடத்தியவனுய் இருக்கலாம்! வேகமாக நடப்பா! என்று சாம்பனிடம் சொல்லிக் காபாலிகன், தன் பெருத்த உடம்புடன் ஓடினுன். இருவரும் அத்திருப்பத்தைக் கடந்து, எங்கு நுழைந்தான் என்று புரியாமல் திகைத்து நின்று விட்டனர்.

"கள்ளன், அப்போதே எனக்கு ஐயம்தான்!... இருக்கட்டும் இன்ஞெருமுறை பார்த்தால் ஆளே அப்படியே அமுக்கி விடுகின்றேன்!" என்ருன் சாம்பன்!

15

கூடல் மாநகரின், கூட கோபுரங்களின் உச்சியில் பாண்டியனுக்குரிய கயற்கொடி கம்பீரமாக அசைந்து கொண் டிருந்தது. நகரையொட்டி வைகை, 'வை, கை!' என்றில்லாமல் சீறிப் பாய்ந்து, பொங்கிப் பூரித்து நுரைகட்டி வேகமாக ஓடி, அக்கூடல் மாநகர் என்னும் மதுரையம்பதியைச் செழிப்பாக்கிக் கொண்டிருந்தது.

அரண்மனேயின் மூன்ருவது அடுக்கு உப்பரிகையின் விசாலமான கூடம். வீரர்களின் காவல் பலமாயிருந்தது. கோட்டைக் கதவுகள் சாத்தப்பட்டிருந்தன. வெளியிலிருந்து

கோட்டைக்குள் செல்வோர் தகுந்த அத்தாட்சியின்றி அனுமதிக்கப்படுவதில்லை. கட்டுக்காவல் அம்மாளிகையைச் சுற்றிப் பலமாயிருக்க, அந்த விசாலமான கூடத்தில், பாண்டிய மன்னன் கோச்சடையன் இரணதீரன், அவன் மகன் பராங்குச மாறவர்மன், சித்திரமாயன், நாகபைரவன் ஆகிய நால்வரும் அமர்ந்திருந்தனர். அந்தக் கூடத்தின் நுழைவாயிலில் உருவிய வாளுடன் வீரர்கள் காவல் புரிய, எல்லா ஏற்பாடுகளும் திருப்தியைத்தர, கோச்சடையன் இரணதீரன் அனைவரையும் பார்த்து விட்டுப் பேசத் தொடங்கினான்.

"இன்று நாம் இம்மதுரையில் கூடியிருப்பது மிக முக்கிய விஷயம் என்று உங்களுக்குத் தெரியும்! நம் நாட்டைச் சுற்றிப் பல செயல்கள் நடந்து விட்டன. நமக்குப் பகைவனான பல்லவ நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது! இரண்டாம் பரமேசுவரவர்மன் பட்டத்துக்கு வந்திருக்கிறான். அவர் மகன் நம் ஆதரவை வேண்டி இங்கே இருக்கின்றார். இந்தச் சமயத்தில் நண்பர்களாகிய நாம் ஒன்று கூடி முடிவு எடுக்க வேண்டியது முக்கியமாகி விட்டது. அநியாயங்களை நாம் என்றுமே எதிர்த்திருக்கிறோம்! அந்த அநியாயம் பல்லவ நாட்டில் நிகழ்ந்தால், அடுத்த நாட்டுக்காரராகிய நாம் வெறுமனே கைகட்டிக் கொண்டு சும்மா இருக்க முடியாது! ஏனென்றால் அங்கே தலை தூக்கிய அநியாயம் இங்கே மட்டும் தலை தூக்காதென்று என்ன நிச்சயம்? அதனால் பாதிக்கப்படுவது நாம்தானே! அதனால் நிச்சயம் நாம் பல்லவ நாட்டு உள் விவகாரங்களில் தலையிட வேண்டியிருக்கிறது. ஒரு தந்தை தன் மகனுக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யவில்லை. 'சான்றோனாக்குதல் தந்தைக்கு கடனே!' என்று அறத்தையுணர்த்தும் பாடல் இருக்கிறது. இதையெல்லாம் இரண்டாம் பரமேசுவரவர்மன் நிச்சயம் படித்திருப்பார்! காரணம் 'கல்வியிற் சிறந்த காஞ்சி' என்று அதற்குச் சிறப்புப் பெயர் உண்டு. பல்கலைக் கழகம், அறிஞர்கள் இப்படிக் குறைவில்லாத அறிவுச் செல்வத்தைப் பெற்ற காஞ்சியின் அரசனான பரமேசுவரவர்மன், தன் மகனை

மட்டும் ஒதுக்குவது எந்த நியாயத்தில் சேரும்? அத்தோடு ஒதுக்கியது மட்டுமின்றி, உருப்படாதவன் என்று ஊரெல்லாம் சொல்லிக் கொண்டு வருகிருரே? அவர் மனம் என்ன கல்லா?" என்று நிறுத்திய பாண்டிய மன்னன், சித்திர மாயனைக் கவனித்தான்.

சித்திரமாயன் முகம் உற்சாகத்தில் ஆழ்ந்தது. சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு மீண்டும் பாண்டிய அரசன் பேச்சைச் தொடர்ந்தான்.

"இந்த அநியாயத்தை முறியடித்து இப்போதிருக்கும் மன்னருக்கு அடுத்த படியாகப் பட்டத்துக்குச் சித்திரமாயனைத் தேர்ந்தெடுக்க நாம் முயல வேண்டும். என்னமோ சிறு பையன் பங்காளி வழி வந்தவன் ஊதினுல் அந்த வேகத்துக்கு ஈடு கொடுத்து நிற்க மாட்டான். அவனை இளவரசனுக்க முயற்சிப்ப தாக நமக்குச் செய்திகள் கிடைத்திருக்கின்றன. அத்துடன் சித்திரமாயன் அவர்கள் பற்றி நாட்டில் நல்லவிதமான எண்ணத்தைப் பரப்பாது, ஒருவித கெட்ட அபிப்ராயத்தை உருவாக்கியிருக்கிருர்கள், நம் நண்பருக்கு வேண்டாதவர்கள். நானும் சாளுக்கிய அரசனுன விசயாதித்தனும் அரக்கர்களா என்ன? எங்களுடன் பழகுவதாலேயே சித்திரமாயன் கெட்டு விட்டதாக ஏன் தப்பான வதந்தியைப் பரப்ப வேண்டும்? எனவே நண்பர்களே! ஆட்சி பீடத்தில் நம் நண்பர் சித்திர மாயன் அவர்களை ஏற்றும்வரை நாம் ஓயக்கூடாது! இதற்காக நாம் அனைவரும் இன்று சபதமெடுப்போம்!" என்ருன் பாண்டிய வேந்தன்.

நாக பைரவன் கனைத்தான்.

"பாண்டியச் சக்கரவர்த்தி, இந்தக் கொடுமை எங்கு அடுக்கும் என்று தெரியவில்லை. வீரமும், விவேகமும், அறிவும் பொருந்திய சித்திரமாயன் அவர்களுக்குப் பட்டம் கிடையாதாம்? சிறு பயலை அரசு கட்டில் ஏற்றுவார்களாம்? பல்லவ மன்னருக்குப்

புத்தி மழுங்கி விட்டிருக்கிறது! உங்களைப் போன்ற மன்னர்கள் உதவியால் தான் அவர் பட்டமேற்க வேண்டும்! ஆண்டவன் கருணை இவர் பக்கம் இருப்பதால்தான் நம் போன்றவர்களின் நட்புக் கிடைத்திருக்கிறது!" என்றான்.

சித்திரமாயன் அதைக் கேட்டு, அங்கிருந்தவர்களை ஒரு முறை பார்த்து விட்டுச் சொன்னான்:.

"இங்குப் பேசிய பாண்டிய வேந்தர் பேச்சும், நாகபைரவன் வார்த்தைகளும் எனக்கு மகிழ்ச்சியையே தருகின்றன. நான் என்ன சொல்வதென்றே புரியவில்லை. என்னை அரசு கட்டில் ஏற்றுவதற்குப் பாடுபடுவதாக மன்னர் சொன்னார். உண்மை யிலேயே அதைக் கேட்டு உளம் மகிழ்ந்தேன்! மிகச் சோர்வுடன் இருந்த எனக்கு இவ்வார்த்தைகள் மன ஆறுதலைத் தந்தன. இதைவிட எனக்கு என்ன வேண்டும்?" என்று உணர்ச்சி மிகுதியால் பேச முடியாமல் மௌனமானான்.

இறுதியில் பராங்குச மாறவர்மன் கூறிய வார்த்தைகள், மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தன.

"அரசு கட்டில் ஏற்ற வேண்டும் என்று இங்குப் பேசியவர் கள் சொன்னீர்கள்! எப்போது ஏற்றுவது? நண்பர் சித்திரமாயன் முதுமைப் பிராயம் அடைந்த பிறகா? ஒரு நல்ல மனிதரை இன்னும் ஆட்சியில் அமர வைக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது எனக்கு நல்லதாகப் படவில்லை. ஆட்சியைச் சித்திரமாயன் அவர்களிடம் இப்போதே தர ஏன் நாம் முயலக் கூடாது? அதற்குக் குறுக்கே இருப்பவர்களை விண்ணுலகுக்கு அனுப்பிச் சித்திரமாயனை அரசனாக்க இன்றே நாம் முயல வேண்டும்!" என்றான் பாண்டிய இளவரசனான பராங்குச மாறவர்மன்.

இதை ஆமோதித்தான் நாகபைரவன். பாண்டியனுக்கும் அது சரி என்றே பட்டது.

சித்திரமாயனைப் பல்லவ மன்னனுக்க வேண்டுமென்றால் இப்போதிருக்கும் வேந்தன் இரண்டாம் பரமேசுவரவர்மன் அழிக்கப் படவேண்டும். அதற்கு என்ன செய்வது?

பெரும் படையுடன் சென்று காஞ்சியைத் தாக்கிக் கைப் பற்றிச் சித்திரமாயனிடம் ஆட்சிப் பீடத்தை ஒப்படைக்கலாம்! போரின் முடிவு பல்லவனுக்குச் சாதகமாகி விட்டால்? விளைவு...? இப்போதிருக்கும் நிலையை விட மிகவும் மோசமாகப் போய் விடுமே. அதனால் தந்திரமாகக் கொல்வதுதான் உசிதமானது என்று பாண்டிய வேந்தன் கருத்துச் சொன்னான். அவ்விதம் கருத்துச் சொல்வதால், மகன் என்ற முறையில் சித்திரமாயனுக்கு ஏதாவது மனச் சஞ்சலம் இருந்தால் கூறும்படியும் கூறினான்!

அதைக் கேட்ட சித்திரமாயன் சொன்ன வார்த்தைகள் அனைவரையும் ஒரு முடிவுக்கு வரச் செய்தன!

"அவரைத் தந்தை இல்லை என்று என்றோ நான் முடிவுக்கு வந்து விட்டேன்! என்னை அவர் மகன் இல்லை என்று சொல்லி விட்டபிறகு, நான் மட்டும் எப்படி அவரைத் தந்தை என்று கூறமுடியும்? நீங்கள் எடுக்கின்ற எந்த முடிவுக்கும் நான் கட்டுப்படுகின்றேன்! ஒரு பகைவன் அழிவதை யார்தான் வேண்டாம் என்று சொல்லி விடுவார்கள்? அதனால் அவர் கொல்லப்படுவதை நான் மனப் பூர்வமாக வரவேற்கின்றேன்!" என்றான்.

"அப்படியென்றால் இதற்கு யார் முயல்வது?"

"நான் செய்கின்றேன் அந்த வேலையை!" என்றான் நாகபைரவன் உற்சாகத்துடன்.

"நல்லது! நாக பைரவரிடமே இப்பொறுப்பை விடுவோம்!" என்று பாண்டிய வேந்தன் எழுந்து, "வாருங்கள் பகல் உணவை முடிக்கலாம்!" என்றான்.

அனைவரும் எழுந்தனர்.

16

காலை—

கதிரவன் தன் பொற்கதிர்களைக் கடலில் பரப்பி மேலெழுந்து கொண்டிருந்தான்.

வெள்ளிக்குழம்பென அள்ளி மேனியில் பூசுவது போன்று கடல் நீர் ஜொலித்துக் கொண்டிருந்த அற்புதமான சூழ்நிலை.

கயல்விழி, குகையை விட்டுக் கடலை நோக்கி நடந்தாள்.

அவளின் கார் குழல் அசையத் துகில் குலையக் கடற்காற்று வேகமாக வீசிக் கொண்டிருந்தது.

கடல் அலையின் அருகே வந்து நின்றாள். பக்கத்தில் சிறு குன்று போலப் பெரும்பாறைகள்...அந்த மறைப்பின் பக்கத்தில் நின்றாள்.

கதிரவன் கதிர்கள், இப்போது அவள் மேனியைத் தழுவிக் கொண்டிருந்தன.

மார்புக் கச்சையில் உள்ளிருந்த அவள் மேலழகுகள், கதிரொளியின் இதத்தில் மதர்த்து நின்றன.

அலைகள், அக் கவர்ச்சி கண்டு ஆனந்தம் தாளாமாட்டாமல் மிக உயர எழும்பி அவற்றைத் தொட, ஆனால், அந்த உரிமை உங்களுக்குக் கிடையாது என்பது போலச் சிறிது தள்ளி நின்றாள்.

ஆனால் அலைகள் விடவில்லை. திரும்பவும் அதிவேகத்துடன் பாய, முழுவதும் நனைந்து நின்றாள்.

அளவெடுத்துச் செய்யப்பட்ட சிலையாய் அவள் நிற்கப் புரவியில் வந்து கொண்டிருந்த சித்திரமாயன், இதைக் கவனித்தான்.

அணிமகளோ? ஆய்தொடியோ? என்று வியந்த சித்திர மாயன், புரவியை விட்டு இறங்கினான்.

இரவு முழுவதும் பயணம் செய்த களைப்பு...அத்துடன் மனச்சோர்வு...இவையிரண்டும் கயல் விழியைப் பார்த்த மாத்திரத்தில் எங்கோ பறந்தன.

ஊனையும் உயிரையும் உலுக்கும் அவள் அழகு காண நெருங்கிச் சென்றான்.

இனிமேல் நிற்பது வீண் என்று அலைகளின் ஊடே பாய்ந் தாள் கயல்விழி.

அந்தப் பாய்ந்த வேகம் தாளாது, தன் மீது ஒரு அழகிய மங்கையா என்று நாணமுற்று அந்த அலை, மிக வேகமாகக் கடலுக்குள் சென்று மறைந்தது.

சரியான பைத்தியம்?...நல்ல சந்தர்ப்பத்தை இழப்பதா என்று மற்றொரு அலை, வேகமாய் உயர எழும்பிப் பூவண்ண அவள் மெல் உடலைத் தன் அலைக்கரங்களால் ஏந்தித் தழுவிக் கரையில் கொண்டுவிட, முகத்து நீரை வழித்து எழுந்தாள்.

"கயல் விழி!"

தன்னை யாரோ கூப்பிடுகிறார்? வதனத்தில் சரிந்த குழலை ஒதுக்கி, நீரைத் துடைத்துப் பார்க்கும்போது புன்னகையுடன் நின்று கொண்டிருந்தான் சித்திரமாயன்.

"சக்கரவர்த்தி, எப்போது மதுரையிலிருந்து வந்தீர்கள்?"

"இப்போதுதான்."

"அப்பா?"

"காஞ்சிக்குப் போயிருக்கிருர்!"

இப்போதுதான் அவளுக்குத் தெரிந்தது. தன்னையே தன் மலர்ந்த அழகுகளேயே சித்திரமாயன் உற்றுப்பார்த்துக் கொண் டிருந்தான் என்பதை!

நாணமுற்ருள். மென்கைகள் வேகமாய் அதை மறைக்க முயன்றன.

"அது தேவையில்லே கயல்விழி?"

"ஏன் சக்கரவர்த்தி?"

"உரிமை பெற்றவனுக்கு அந்த உரிமை மறுக்கப்படக் கூடாது கயல்விழி!"

"அப்படியென்ருல்?"

அவன் நெருங்கி வந்து அவளே அணைக்க முயன்ருன்.

"சக்கரவர்த்தி!"

"நீ கேட்ட கேள்விக்கு நான் பதில் தர வேண்டாமா?"

"நாடாளப் பிறந்த நீங்கள் எங்கே? ஒன்றுமில்லாதா நான் எங்கே?"

"இந்த இடத்தில்தான் நீயும் சாதாரணப் பெண்களோடு சேர்ந்து கொள்ளுகிருய்... அறிவும், அழகும் ஒருங்கே திரண்ட உன்னே அடைய நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்! என்ருே உன்னே நான் மனேவியாக மனதில் வரித்து விட்டேன்! அதற்குச் சந்தர்ப்பம் இன்றுதான் கூடியது!"

“சக்கரவர்த்தி!”

“இந்த வானமும், இந்த வையமும் ஒன்ருகத் திரண்டு நம் காதலை எதிர்த்தாலும் நான் உன்னைத் துணைவியாக அடையாமல் விடமாட்டேன்! விரைவில் நீ இக்காஞ்சிக்குப் பட்டத்து அரசியாவாய்!”

“என்ன சொல்கிறீர்கள்?”

“என்னைக் காஞ்சிக்கு அரசனுக்கப் போகிருர் உன் தந்தை! நான் அரசனுனதும் நீதானே பட்டத்து அரசி!”

“உண்மையாகவா?”

“சத்தியமாக!”

உணர்ச்சி வேகத்தினுல் பெருமூச்சுவிட்ட அவள், முகிழ்த்து நின்ற தன் மேல்பகுதி அவன் மார்பில் பொருந்தச் சாய்ந்தாள். நிமிர்ந்து தன் நயன விழிகளால் அவன் முகத்தை நோக்கினுள்.

அதன் சக்தியைத் தாளமாட்டாது அவன் மயங்கி, மெய் மறந்து அவளை மார்புற அணைத்தான்.

இதுவரை எங்களுக்கே சொந்தமாக இருந்த இவளை நீ பறித்துக் கொண்டாயா? என்பதுபோல அலைகள் ஒருங்கே திரண்டு அவர்கள் மீது மோதி அந்த இணைப்பைப் பிரிக்க முயன்றன.

“சக்கரவர்த்தி!”

“என்ன கயல்விழி?”

அப்போது—

வேகமாய் வந்த பெரிய அலை ஒன்று, உயரக் கிளம்பி இருவரையும் ஜலத்தினுல் மூடி, அவர்களின் இணைப்புக்கு வாழ்த்துத் தெரிவிப்பதுபோல ஆனந்த நர்த்தனம் செய்தது!

"முழுவதும் நனைந்துவிட்டோம் கயல்விழி!"

"ஆமாம், என் உள்ளங்கூட உங்கள் அன்பென்ற நீரால் கழுவப்பட்டு விட்டது!"

"மகிழ்ச்சி!"

இருவரும் கடலை நோக்கிப் பாய்ந்தனர்.

இதைத் தொலைவிலிருந்து கவனித்துக் கொண்டிருந்த சோமன் கண்கள், ஆத்திரத்தை உமிழ்ந்தன. மீசை துடிக்க, விழிகள் சிவந்தன. கைகளை முடிந்த மட்டும் பிசைந்து கொண்டான்.

'கயல்விழி, எத்தனை நாளாக இந்தத் திருட்டுக் காதல்! இதற்காகத்தான் என்னை வெறுத்து வந்தாயா?" வலுவான புளியங்கொம்பாகப் பிடித்து விட்டதாக நினைப்பா? வஞ்சகி! என் முன்னே அவனுடன் கொஞ்சிக் கொண்டிருக்கிருளே! இனி நான் என்ன செய்யட்டும்!' என்று கொப்பளிக்கும் கோபத்துடன் குகையை நோக்கி வேகமாக ஓடினுன்.

"யாரோ ஓடி வருகிருர்களே! அது யார்? என்று விஜய வர்மன் நிமிர்ந்து பார்க்க, "உனக்கு விடுதலை! என் வாழ்வைப் பாழாக்கிய கயல்விழிக்கு இதுதான் சரியான தண்டனை!" என்று விரைந்து விஜயவர்மன் கைகளிலும், கால்களிலும் இருந்த சங்கிலி இணைப்பை நீக்கினுன்.

விஜயவர்மனுக்குத் திகைப்பாய் இருந்தது.

"போய்விடு, போ! அந்த வஞ்சகி குகைக்குத் திரும்புவதற்குள் நீ போய்விடு! நான் அவளை பழிவாங்கி விட்டேன்! ஏ

கயல்விழி! என்னை என்னவென்று நினைத்தாய்?'' என்று உரக்கக் கூறிச் சிரிக்கலானான் சோமன்.

சில கண்ணிமை நேரம் விஜயவர்மனுக்கு ஒன்றும் புரிய வில்லை என்றாலும், விடுவிக்கப்பட்டதைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்று, அவன் உள்ளுணர்வு சொல்லியது.

குகையை விட்டு வெளியே வந்தான். கையில் வாளும் இருந்தது.

தொலைவில் கயல்விழியும், சித்திரமாயனும் இன்ப விளை யாட்டில் மூழ்கித் திளைத்தது அவனுக்குத் தென்பட்டது.

'ஓ! இதுதான் காரணமா?' என்று புன்னகைத்து, இது எந்த இடம் என்று நிதானித்துப் பார்க்க, மாமல்லையிலிருந்து வெகு தொலைவில் இருப்பதை உணர்ந்தான்.

'வடக்குத் திசை நோக்கிச் சென்றால் மாமல்லையை யடைய லாம்' என்று எண்ணி, ஏன் பேடியைப் போல் ஓட வேண்டும்? இன்பச் சாகரத்தில் திகைத்து நிற்கும் அந்தக் காதலர்களிடம் சொல்லி விட்டே செல்வோம்!'' என்று அவர்களை நோக்கி நடந் தான்.

'என்ன நினைத்தானோ? அவர்கள் கடலில் நீராடி வரும்வரை காத்திருப்போம் என்று தென்னை மரத்தின் கீழ் அமர்ந்தான்.

''கயல்விழி!'' என்றான் சித்திரமாயன்.

''என்ன சக்கரவர்த்தி?''

அவள் விழிகள் அவன் மார்பை ஊடுருவின. அவன் உயிரும் உணர்வும் அந்த ஊடுருவலில் வெளிப்பட்டதுபோல் மயக்க நிலையுற்ற) அவன், என்னது செய்வதென்று புரியாமல் அவளைத் தழுவினான்.

அவள் எதையோ சொல்ல விரும்பினுள். ஆனுல் அந்த மதுரமொழி அவள் வாயிலிருந்து வெளி வரவில்லை. வாள்விழி சிவந்து, வாயிதழ் வெளுத்து, அவன் தழுவலினுல் நிலைகுலைந்து போனுள்.

ஒரு வழியாகச் சுய உணர்வு பெற்றபோது அவன் உற்சாகத் துடன் சொன்னுன்.

"கயல்விழி! இன்னும் கொஞ்ச நாளில் காஞ்சி மன்னர் கொல்லப்படுவார்! அந்த இடத்திற்கு நான் அரசனுவேன்! அப்போது நீதான் பட்டத்தரசி! பாண்டிய வேந்தரும் எனக்கு உதவி செய்வதாகச் சொல்லிவிட்டார்! உன் தந்தைதான் இதில் பெரும் பொறுப்பு ஏற்று என்னை அரசனுக்கப் போகின்ருர். காஞ்சி யின் நகரக் கோட்டைக் கொத்தளங்களில் நாம் உலாவி வருவோம்!" என்ருன்.

உணர்ச்சி வேகத்தால் உரத்துப் பேசிக் கொண்டு வந்த சித்திரமாயனிடம், "அதோ பாருங்கள்!" என்ருள்.

"என்ன?—அவன் திரும்ப; தொலைவில் விஜயவர்மன், தென்னை மரத்தின் கீழ் அமர்ந்திருப்பதைப் பார்த்தான்.

"தப்பித்து விட்டானு?"

"அப்படித்தான் தெரிகிறது? வாருங்கள் போவோம்!" என்று படபடப்புடன் உடலில் ஆடைகளைச் சுற்றிக் கொண்டு வேகமாய் நடந்தாள்.

சித்திரமாயன் குதிரையின் அருகில் சென்று அங்கிருந்த வாளை உருவிக் கொண்டான். வேகமாக விஜயவர்மனை நோக்கி ஓடினுன்.

"வர வேண்டும் இனிய காதலர்களே! உங்களிடம் சொல்லி விட்டுப் போகத்தான் இதுவரை நான் காத்திருந்தேன்!"

"என்னடா உளறுகிறாய்?"

கயல்விழியைப் பின்னுக்குத் தள்ளி, வாளுடன் முன்னே பாய்ந்தான்.

"இதையும் நான் எதிர்ப்பார்த்தே இங்கே உட்கார்ந்திருந் தேன்!" என்று தன் பின்னால் வைத்திருந்த வாளை எடுத்துக் கொண்டான்.

இருவர் வாட்களும் மோதின.

கயல்விழி சோமனைக் கூப்பிட்டபடி குகையை நோக்கி வேகமாக ஓடினாள்.

அங்கே—

"நானும் பொய்...என் நெஞ்சம் பொய் இந்த உலகமும் பொய்..."என்று கயல்விழியைப் பார்த்து உரக்கச் சிரிக்கத் தொடங்கினான் சோமன்.

"ஏய் உனக்கென்ன பைத்தியமா? அவனை ஏன் விடுதலை செய்தாய்?" என்றாள் உரக்க.

"இந்தக் கேள்விக்காகவே நான் காத்திருக்கின்றேன் கயல்விழி! விழியில் கவர்ச்சியும் நெஞ்சில் வஞ்சனையும் கொண்ட மாயப் பிசாசே! உன்னைப் பழிவாங்கவே அவனை விடுதலை செய்தேன்! மாமன் நான் இருக்கப் பட்டத்து அரசியாக லாம் என்று பொய்க் கனவு கண்டு, அவனுடன் சரச லீலைகள் செய்தாயே, இது நியாயமா? ஏ வஞ்சகி! என் நெஞ்சு வெடித்து விடும் போலிருக்கிறதே! எத்தனை ஆசை வைத்திருந்தேன்!

எல்லாம் எரி முன்னுல் வைத்த பஞ்சு போல் பற்றி அழிந்து விட்டதே! இனி நீ...இருந்தென்ன! இறந்தென்ன ஒழிந்து போ! அழி! அழிந்து விடு! இருவரும் ஒன்ருகவே சாவோம்!" என்று கயல்விழியின் மேல் பாய்ந்து அவள் கழுத்தை அழுத்த ஆரம்பித்தான். மூச்சு இறுகியது...கண்கள் சோர்ந்தன. மார்பு இயக்கம் தடைப்படுவது போலிருந்தது! உடலிலிருந்த வலிமை யெல்லாம் ஒன்று திரட்டி அவனைத் தள்ளப் பார்த்தாள். முடிய வில்லை...அப்படியே அவள் கீழே சாய, அதே வேகத்தில் அவன் தள்ளி விழுந்தான்.

கொஞ்சம் பிடி தளர்வது போலிருந்தது. அவனைத் தலை கீழாகப் புரட்டினுள். ஆனுல் விழுந்தவன் எழுந்து அவள் மேல் பாய்ந்தான்.

இருவரும் தரையில் புரளத் திரும்பவும் அவள் கழுத்து அவன் வன் கரங்களில் சிக்கிக் கொண்டது.

மூச்சடைக்க, கயல்விழி செய்வதரியாது கைகளைத் துழாவி னுள். ஒரு குத்துவாள் ஒன்று அவள் கைக்குத் தட்டுப்பட்டதும் எடுத்துக் கொண்டாள். இறுதி நேரம்...சிறிதும் தாமதிக்காமல் அந்தக் குத்துவாள் சோமனின் விலாவில் பாய்ச்சினுள்.

'ஹா!' என்று சுருண்டு விழுந்த அவனைத் தூக்கித் தள்ளி விட்டு, 'அப்பாடா!' என்று கழுத்தை நீவி விட்டு மூச்சை இழுத்துச் சரிப்படுத்தினுள்.

குருதிப் புனலில் துடித்த சோமனின் இறுதி மூச்சடங்கி உடல் அசைவும் நின்றது.

வெளியே வந்தாள்.

தலைகுனிந்தபடி சித்திரமாயன் வந்து கொண்டிருந்தான். வலத்தோளில் இலேசான காயம்.

"என்ன ஆயிற்று?"

"அவன் போய் விட்டான்!"

சிலையாய் நின்ருள் கயல்விழி. உள்ளே சோமன் உடல்; இங்கே இவரின் தோல்வி... இதெல்லாம் ஏதோ அபசகுணத்திற்கு அறிகுறி என்பதுபோல அவளுக்குப்பட்டது.

"இனிமேல் நாம் இங்கே இருக்கக் கூடாது சக்கரவர்த்தி!"

"ஏன்?"

"இதுவும் அவர்களுக்குத் தெரிந்து விட்டது! திரும்பிப் படையுடன் வந்தாலும் வருவார்கள்!"

"என்ன செய்யலாம்?"

"சில காலம் பாண்டிய நாட்டிற்குப் போய்த் தங்கி இருப்போம்!"

சித்திரமாயன் 'சரி!' என்ருன். இருவரும் குகைக்குள் நுழைந்தனர்.

இதுவரை கயல்விழியும், சித்திரமாயனும் சரசலீலை புரிந்த அந்த இடத்தின் பக்கத்தில் பாறைகள் நிரம்பிக் குன்று போலிருந்த மறைப்பிலிருந்து ஒரு காபாலிகன் வெளிப்பட்டான்.

கயல்விழியின் கையில் பல்லவமல்லனை வாங்கிக் கொண்டு குதிரையில் பறந்தவன் அவன் தான்! எதையோ முணுமுணுத்த அவன், வேகமாய் நடந்து மறைவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குதிரையில் ஏறி மறைந்தான்.

17

காஞ்சி அரண்மனை—

இரண்டாம் பரமேசுவரவர்மன், தான் கட்டப் போகும் விஷ்ணு ஆலயத்தைப் பற்றித் தலைமைச் சிற்பியோடு உரையாடிக் கொண்டிருந்தான்.

நின்றானை; இருந்தானை; கிடந்தானை - இந்த மூன்று நிலைகளில் திருமால் காட்சியளிக்கும்படி இக்கோவில் அமைய வேண்டும். கயிலாசநாதர் கோவில் சிவனுக்காகக் கட்டப் பட்டது. அம்மாதிரி அமைப்பில் திருமாலுக்கும் ஒரு கோவில் வேண்டும் என்ற முனைப்புடன் பரமேசுவரவர்மன் செயல்பட்டுக் கொண்டிருந்தான்.

அப்போது—

இரணியவர்மன் அவசரமாக உள்ளே வந்தான்.

"என்ன இரணியவர்மா?"

"விஜயவர்மன் திரும்பி வந்திருக்கின்றான்!"

"அப்படியா, உடனே வரச் சொல்!" என்று தலைமைச் சிற்பியின் பக்கம் திரும்பி, "இன்னும் சிறிது நேரம் கழித்து வாருங்கள்!" என்றான்.

சிற்பி, "அப்படியே ஆகட்டும் அரசே!" என்று வெளியே வந்தான்.

மிகுந்த சோர்வுடனும், களைப்புடனும் உடைகள் கசங்கிக் கண்கள் உள்ளே சென்று மன்னன் முன் நின்றான் விஜயவர்மன்.

"என்ன விஜயவர்மா! இதுவரை எங்கிருந்தாய்?" என்று வினவினுன் பரமேசுவரவர்மன்.

நடந்ததை முழுவதும் தெரிவித்தான் விஜயவர்மன்.

எல்லாவற்றையும் கேட்ட மன்னன், "முதலில் குளித்து, உணவுண்டு, உடை மாற்றி வா!" என்ருன்.

ஆனுல் விஜயவர்மன், சற்றும் எதிர்பாராமல் வாளை உருவி வயிற்றில் பாய்ச்சிக் கொள்ள முயன்ருன்.

இரணியவர்மன் பாய்ந்து சென்று, வாளைப் பிடுங்கிக் கீழே வீசியெறிந்து, "என்ன, என்ன வேலை இது?" என்ருன் திகைப் போடு.

"இல்லை, என்னைச் சாகவிடுங்கள் மன்னு! என் உயிரைப் போக்கிக் கொள்ள விரும்புகின்றேன்!" என்ருன்.

"நீ ஏன் சாக வேண்டும் விஜயவர்மா? சாகும் அளவுக்கு நீ ஒன்றும் தவறு செய்யவில்லையே?" என்று மன்னன் வினவ, "அரசே, தங்கள் தந்தைக்குக் கொடுத்த வாக்குறுதியை என்ஞல் காப்பாற்ற முடியவில்லை. பல்லவமல்லன் உயிரை நான் மீட்க முடியவில்லை. வாக்குறுதி தவறிய நான், உயிர் வாழ்வது பெரிய தவறல்லவா?"

"என்ன வாக்குறுதி?"

"தங்கள் தந்தைக்குப் பல்லவமல்லனைப் பகைவரிடமிருந்து மீட்டு வருவதாக நான் வாக்குறுதி தந்திருக்கின்றேன். ஆனுல் மல்லன் பகைவர்களால்... அதைச் சொல்லவே என் நா கூசு கிறது... அதனுல் என் உயிரை முடித்துக் கொள்ள நான் விரும்புகின்றேன்!"

இரணியவர்மன் உரக்கச் சிரித்தான். அச்சிரிப்பினேடு மன்னரின் முறுவலும் சேர்ந்து கொண்டது.

"ஏன் சிரிக்கிறீர்கள் அரசே?"

"நீ நினைப்பதுபோல் பல்லவமல்லன் பகைவரிடம் சிக்கிக் கொள்ளவில்லை. உயிரோடு பத்திரமாக நம் பாதுகாப்பில்தான் இருக்கின்ருன்!" என்ருன் மன்னன்.

அதைக் கேட்ட விஜயவர்மனுக்கு முகம் மலர்ந்தது.

"என்ன சொல்கிறீர்கள் அரசே? மல்லன் உயிரோடு இருக்கின்ருனு?"

"ஆமாம்! நாட்டின் நன்மைக்காக நாங்கள் இரகசியமாக வைத்திருக்கிரேம்!... பல்லவமல்லனைக் காப்பாற்றியதே நீதான்!" என்ருன் இரணியவர்மன் அச்சமயம் குறுக்கிட்டு,

"ஒன்றுமே புரியவில்லையே?"

"சொல்கின்றேன்! கேள்! அந்தத் தென்னந்தோப்பில் நீ தாக்க வருவதற்கு முன்பு நாகபைரவனிடம் ஒரு அம்பு வந்து விழுந்ததே நினைவிருக்கிறதா?...அது என்னுல் செலுத்தப் பட்டதுதான்! நான் எப்படி அங்கே வந்தேன் என்று கேட் கிருயா? சிறிது காலமாகவே சித்திரமாயன் போக்குச் சரியில்லாத தால் அவனைக் காபாலிக உருவில் நான் பின் தொடர்ந்தேன்! அப்போது தென்னந்தோப்பும்... அதற்கு நடுவில் ஒரு பள்ள மும்...அதில் ஒரு மண்டபமும்....அந்த மண்டபத்திலிருக்கிற நாக பைரவனேடு சித்திரமாயன் தொடர்பு வைத்திருப்பதும் எனக்குத் தெரிய வந்தது. அதனுல் அடிக்கடி அதைக் கண்காணித்துக் கொண்டிருந்தபோது திடீரென்று நாகபைரவன், பல்லவ மல்லனைப் பலி கொடுக்க ஏற்பாடு செய்து கொண்டிருப்பது தெரிந்தது. அந்தச் சமயத்தில் நீயும் அங்கே மறைவாக

இருப்பது எனக்குத் தெரியாது! ஐந்து பேரையும் ஒருவனுல் எப்படிச் சமாளிப்பது என்று சங்கடத்துடன் நான் குழம்பிய போது நம் குதிரை வீரர்கள் நால்வர் புரவியில் வந்ததை அறிந்தேன். அதனுல் நாகபைரவனை நோக்கி அம்பு எய்தேன்! அது தவறி அவன் அருகில் விழுந்தது... அதற்குள் நீயும் புதரிலிருந்து வெளிப்பட்டுத் தாக்க முற்பட்டாய். இந்தக் குழப்பத்தில் பல்லவமல்லனை எப்படிக் காப்பாற்றுவது என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, கயல்விழியே பல்லவ மல்லனைத் தூக்கிக் கொண்டு நான் மறைந்திருந்த இடத்தை நோக்கி ஓடிவந்தாள். அவளை மடக்கிக் காபாலிக உருவத்தை நான் அந்த நேரத்தில் நன்கு பயன்படுத்திப் பல்லவமல்லனை வாங்கிக் கொண்டு புரவியில் காஞ்சி வந்து விட்டேன். உடனே மல்லன் கிடைத்து விட்டான் என்ற செய்தி பகைவர்களுக்குத் தெரிந்தால் திரும்பவும் பல்லவமல்லனுக்கு ஆபத்து விளைவிக்கப் போகின்ருர்கள் என்றுதான், அவனை மறைவாகவே வைத் திருந்தோம்! மன்னர் இராசசிம்மனுக்கும் கிடைத்த செய்தியைத் தெரிவித்து மல்லனையும் அவரிடம் அழைத்துச் சென்ரேம்... அந்த நிறைவில் அவர் மறுநாள் இயற்கை எய்தினுர்... நேற்று நீ சித்திரமாயனிடம் வாட்போர் செய்த இடத்தில்கூட நான் இருந்தேன். அங்கு நடந்தவை எல்லாம் எனக்குத் தெரியும்!'' என்ருன் இரணியவர்மன்.

''அந்தக் குகை, மிக இரகசியமான இடத்தில் அமைக்கப் பட்டிருந்ததே அது எப்படி உங்களுக்குத் தெரியும்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் விஜயவர்மன்

''இங்கே சாம்பன் என்று அவர்கள் கூட்டத்தைச் சேர்ந்தவன் இருக்கின்ருன். அவன் மூலமாகத்தான் இது எனக்குத் தெரிய வந்தது. அவன் பொதுவாகக் குகை என்று தான் சொன்னுன். அவனைச் சிறைபிடித்து அந்த இடத்திற்குப் போகும் வழியை, அவனிடமிருந்து துன்புறுத்தித் தெரிந்து கொண்டேன்!'' என்ருன்.

"நன்ருகத்தான் செயல்பட்டிருக்கின்றீர்கள்!" என்ருன் விஜயவர்மன்.

"நன்ருகவா, மிகப் பிரமாதமாக!" என்று பாராட்டி பரமேசுவரவர்மன், தலைமைச் சிற்பியை அழைத்தார்.

அவன், வரைபடத்தை விரித்து மன்னருக்கு விளக்க ஆரம்பித்தான். விஜயவர்மனும், இரணியவர்மனும் அதை ஆர்வத்துடன் கவனிக்கலாயினர்.

18

இரண்டாம் பரமேசுவரவர்மன் ஆட்சிப் பொறுப்பேற்று ஆண்டுகள் ஐந்து கழிந்தன. பரமேச்வர விண்ணகரம் என்ற பெயரில் வைகுந்தப் பெருமாள் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது. சிவனுக்குக் கயிலாசநாதர் கோவில் போல, திருமாலுக்கு வைகுந்தப் பெருமாள் கோவில் என்று பல்லவர் ஆட்சியில் சைவமும், வைணவமும் ஒன்று என்பதைக் காண்பிக்கும் வகையில் கட்டப்பட்து.

கலியை வென்றவன், ஆட்சியை அமைதியான முறையில் நடத்திக் குடிகளைக் காத்தான் என்ற சிறப்புடன் இவன் ஆட்சி செய்து கொண்டிருந்தபோது அந்த நிகழ்ச்சி நடந்தது.

பல்லவமல்லனுக்கு அப்போது வயது பன்னிரண்டு.

சித்திரமாயன் பாண்டியர்களிடம் நிரந்தரமாகத் தங்கிவிட, கயல்விழியும் நாகபைரவனும் பரமேசுவரவர்மனைத் தீர்க்கத் தக்க சமயம் பார்த்துக் காஞ்சியில் மாற்றுடையில் நடமாடிக் கொண்டிருந்தனர்.

நாகபைரவன், யவன தேசத்து வணிகனைப்போல் வேட மிட்டிருந்தான். கயல்விழி, அவன் மனைவியாய்த் தன்னை அலங்கரித்திருந்தாள்.

இராச வீதியில், வணிகனுக்குரிமையான மாளிகையில் தங்கியிருந்தனர்.

மாமல்லை சென்று காஞ்சி திரும்பிக் கொண்டிருந்தான் பரமேசுவரவர்மன். இருபுறமும் இரணியவர்மனும் விஜய வர்மனும் வர, மன்னன் கம்பீரமாக யானையில் வந்து கொண் டிருந்தான்.

மக்களின் வாழ்த்தொலிகள், காஞ்சி நகரத்தையே நிலை குலைய வைத்தன. எங்கும் தோரணங்கள். மக்கள் கூட்டத் தினரைப் பார்த்துக் கையசைத்தபடி வந்தான் வேந்தன்.

கயல்விழியும், நாகபைரவனும் மன்னனைப் பார்க்கப் போவது போன்று உப்பரிகையில் வந்து நின்றனர்.

கயல்விழியின் ஒரு கையில் சிறிய வாள் இருந்தது. அதில் நஞ்சு தடவப்பட்டிருந்தது. பட்ட மாத்திரத்தில் உயிர்பறிக்கும் வகையில் அந்நஞ்சு சக்தி வாய்ந்திருக்கக் கயல்விழி, தக்க நேரத்தை எதிர்ப்பார்த்திருந்தாள்.

பின்கதவு திறந்து வைக்கப்பட்டுப் புரவிகள் இரண்டு தயாராய் இருந்தன. வெற்றி! அல்லது வீரமரணம்! என்ற நிலை யில் மன்னன் மீது வாள் பாய்ந்ததும் பின்கட்டு வழியாகச் சென்று புரவியில் அமர்ந்து நகர எல்லையில் மறைவான இடத்தில் மறைந்து அன்று முழுவதும் அங்கேயே தங்கி காவல் தளர்ந்ததும் தப்பித்து விடவேண்டும் என்று திட்டமிட்டிருந் தனர்.

வாழ்த்தொலிகளும், பேரிகைகளும், முரசங்களும் முழங்க மன்னன் இராச வீதியில் திரும்பினான்.

யானை மீது மிக உற்சாகமாக அமர்ந்து, மக்களைப் பார்த்துக் கையசைத்தவாறு வந்து, கயல் விழியும், நாகபைரவனும் இருக்கின்ற மாளிகையை நெருங்கிக் கொண்டிருந்தான்.

"கயல்விழி, எச்சரிக்கை! தவறினுல் நம் காரியம் தோல்வியாவது மட்டுமல்ல, உயிரும் பறிபோகும்!" என்று எச்சரித்தான் நாகபைரவன்.

அவளின் மார்பு படபட வென்று அடித்துக் கொண்டது! பைரவரை வேண்டிக் கொண்டு குறுவாளை வீசத் தக்க தருணம் பார்த்திருந்தாள்.

தொலைவில் இருக்கும் போது வித்தியாசமாக உடையணிந்த இருவரையும் விஜயவர்மன் கவனித்தான். அம்மாளிகையை நோக்கி மெல்ல நடந்தான். மாளிகையின் முன் உட்பக்கம் தாளிடப்பட்டிருந்ததால், சுற்றிக் கொண்டு பின்பக்க வழியாக வந்து பார்த்தான். புரவிகள் இரண்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

எதற்குப் புரவி என்று யோசிக்கும்போது பின்கதவும் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

அதன் வழியாக உள்ளே செல்லலாம் என்று எண்ணி நுழையும் அதே சமயம், கயல்விழி, தன் குறுவாளை மன்னனை நோக்கி விசினுள்.

"ஹா!" — என்று யானையிலிருந்து மன்னன் சாய, "பிடியுங்கள் அவர்களை!" என்று ஏக காலத்தில் குரல்கள் எழும்பின.

உப்பரிகையிலிருந்து இறங்கிப் பின் கதவுக்கு ஓடி வந்த இருவரும் வாளுடன் விஜயவர்மன் வேகமாக ஓடி வருவதைப் பார்த்துத் திகைத்து வேறு பக்கம் தப்ப முயல, மன்னருக்கு

'ஆபத்து!' என்று மட்டும் புரிந்த விஜயவர்மன், ஆத்திரமுற்று நாகபைரவனை ஒரே வீச்சில் கீழே வீழ்த்தினான்.

துடித்து வீழ்ந்த அவனைப் பார்த்து, "அப்பா!" என்று கயல்விழி அலற, அவள் மார்பிலும் அந்த வாள் பாய்ந்தது. மன்னன் சாய்ந்தது போலவே அவளும் மண்ணில் சாய்ந்தாள்.

19

காஞ்சி நகரமே சோகத்தில் ஆழ்ந்தது. மிகக் குறுகிய காலத்தில் சிறப்பாக ஆண்ட மன்னன் இரண்டாம் பரமேசுவர வர்மன் இறந்து பட்டான்.

கடிகையர், மூலப் பிரகிருதியார், தரணி கொண்ட போசர் முதலியோர், அடுத்து யார்? என்று கேள்விக் குறியுடன் பார்க்க, சிம்ம விஷ்ணுவின் தம்பியான பீமவர்மன் வழிவந்த இரணிய வர்மன் தான் அவர்களுக்குத் தென்பட்டான்.

இறந்த மன்னன் மகன் சித்திரமாயனைப் பற்றி நாட்டு மக்களிடையே நல்ல அபிப்பிராயம் இல்லை. அத்துடன் அவன் பல்லவ நாட்டைப் பிடிக்கத் தக்க நேரத்தை எதிர்ப்பார்த்திருந்த பாண்டியனிடம் சரண் அடைந்திருந்தான்.

அதனால்—

காஞ்சி ஆட்சி பீடம் ஏற எல்லாவற்றுக்கும் தகுதியானவன் இரணியவர்மன் என்றே அனைவரும் ஒரு முகமாக முடிவுக்கு வந்தனர்.

எனவே அவனைப் பார்த்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படி கேட்க, அவன் மறுத்துவிட்டான்.

"பின், யாரிடம் இந்த ஆட்சிப் பொறுப்பைத் தருவது?" என்று தரணி கொண்ட போசர் கேட்க, "என் மகன் நால்வரில் யாருக்காவது முடி சூடுங்கள்!" என்ருன்.

முதல் மூவரும் அதற்கு மறுக்க நான்காவதாகப் பல்லவ மல்லன், தன் பன்னிரண்டு வயதில் ஆட்சிப் பொறுப்பை ஏற்க முன்வந்தான்.

மிகச் சிறிய வயதில் நாட்டுப் பொறுப்பை ஏற்க வந்த அவன் நெஞ்சுரத்தை அனைவரும் பாராட்டினர்.

நல்ல முகூர்த்தத்தில்—

பட்டத்து யானை அலங்கரிக்கப்பட, வாத்தியங்கள் முழங்கப் பல்லவடி அரையன், தன் பெருஞ் சேனையுடன் பல்லவமல்லனை எதிர் கொண்டழைக்க, ஆன்ருேர்கள், அந்தணர்கள் வாழ்த்தக் காஞ்சியில், மன்னனுக பல்லவமல்லன், இரண்டாம் நந்திவர்மன் என்ற பட்டப் பெயருடன் முடி சூடிக் கொண்டான்.

முற்றும்